# சைலஸ் மார்னர்

★

கழக வெளியீடு


சைலசு
மார்னர்

கழக வெளியீடு, ௧௦௬௮

# சைலசு மார்னர்

ஆங்கில மூலம்

ஜியார்ஜ் எலியட்

தமிழாக்கம்

மு. சதாசிவம், எம். ஏ.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி–6. சென்னை - 1.
1962

முருகேச முதலியார் சதாசிவம் (1936)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.

Ed 1 August 1962

O111,3MEG,S
N62

O111,3M19,4
31K2

110349

SILAS MARNER

Appar Achakam, Madras-1.

# பதிப்புரை

ஆங்கிலமொழிக்கணுள்ள பேரிலக்கியங்கள் எல்லாவற்றையும் செழுந்தமிழில் வடித்தளித்துத் தமிழிலக்கியத் துறையைப் பல்லாற்றானும் வளங்கொழுமச் செய்ய வேண்டுமென்ற பணியைத் தலைமேற் கொண்டு இதுவரை இருபதுக்கு மேற்பட்ட மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டுள்ளது கழகம். ஆங்கிலமும் தமிழும் ஒருங்கு வல்லாரையே இப்பணியில் ஊக்குவித்து நூல்களை நற்றமிழ் நடையில் வெளியிட்டு வருகிறது. அவ்வகையில் இப்போது சைலசு மார்னர் என்ற புதினம் வெளிவருகிறது.

நல்லவர்க்கு வாழ்க்கையில் பல தீங்குகள் ஏற்பட்டாலும் கடைசியில் அவர்க்கு நல்லதே விளையும் என்ற நீதியை உணர்த்துவதாக இப்புதினக்கதை அமைந்துள்ளது.

உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு ஆங்கிலப் புதினத்தின் சுருக்கம் துணைப்பாடமாக அடிக்கடி வைக்கப்பட்டு வருகிறது. அம்மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஒருங்கே பயன்படும் வண்ணம் எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளும் நடையில் செவ்வன் அமைந்திருக்கிறது இம்மொழிபெயர்ப்பு. ஆற்றொழுக்கான நடையில் அமைந்திருக்கும் இப்புதினத்தைப் படிப்போர் இதனை ஒரு மொழிபெயர்ப்பென்று எண்ணாது தமிழிலேயே முதன்முதல் எழுதப்பட்ட நூலென்றே கருதுவர்.

கழக ஆட்சியாளரின் வேண்டுகோளுக்கிணங்க இப் புகழ்பெற்ற புதினத்தை மொழிபெயர்த்தளித்தவர் கழகத்தின்கண் பணியாற்றும் புலமையாளர் திரு. மு. சதாசிவம், எம். ஏ., அவர்கள் ஆவர். இதற்கு முன் அவரால் மொழி

பெயர்க்கப் பெற்றுள்ள **மருத்துவர் மகள்** என்ற வால்டர் ஸ்காட்டின் புதினம் சுவை கனியுடைத்தாயிருப்பதைப் படித்தோர் உணர்ந்திருப்பர்.

தமிழிலக்கியத்தை வளம்படுத்தும் இக் கழகப்பணிக்குத் தமிழுலகம் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என நம்புகிறோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# முன்னுரை

சமுதாய வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டிச் சுவையார்ந்த பல புதினங்களைப் படைத்தளித்த புகழ் பெற்ற ஆங்கிலப் புதின ஆசிரியர் ஜியார்ஜ் எலியட் என்ற அம்மையார் எழுதிய புதினங்களில் அளவில் சிறியதாய் ஆனால் சுவையில் பெரியதாய் விளங்குவது **சைலசு மார்னர்** (Silas Marner) என்ற இப்புதினமே யாகும்.

தாம் படைக்கும் பாத்திரங்களின் வாழ்க்கையோடு ஒன்றி அவர்களுடைய உணர்ச்சிகளை உற்றுணரும் கற்பனை வன்மையும், அவ்வுணர்ச்சிகளின் நன்மை தீமைகளை நலமுற ஆய்ந்து வாழ்க்கைத் தத்துவங்களை வெளிப்படுத்தும் கலை வன்மையும் உடையவர் இப்புதின ஆசிரியர்.

சமய நம்பிக்கையும் ஒழுக்கத்தின் விழுப்பம் பேணும் பண்பும் இரக்கக் குணமும் இயல்பிலேயே அமைந்திருந்த இவ்வாசிரியர் இயற்றிய புதினங்களுள் அப்பண்புகள்யாவும் விளக்கமாக இடம்பெறல் வியப்பிற்குரியதன்று. 'சைலசு மார்னர்' என்ற இப்புதினத்தில் அப்பண்புகள் தெள்ளெனக் காணப்பெறுதலைப் படிப்போர் உணராமலிரார்.

மற்ற ஆங்கிலப் புதின ஆசிரியர்களைப் போலாது, ஒழுக்கத்தின் மேம்பாட்டைப் புதினம் படிப்போர் உய்த்துணரும்படி விட்டுவிடாது அதனை வலியுறுத்திக் கூறிச் செல்வது இவ்வாசிரியரின் தனிப்பண்பு என்று புதினத் திறனாய்வாளர்கள் எடுத்துரைக்கின்றனர்.

இந்தக் கதையை எழுதவேண்டும் என்று தமக்கு எவ்வாறு தோன்றியது என்பதைப்பற்றி இவ்வாசிரியரே கூறியுள்ளார்: 'பழங்காலத்துக் கதைபோலக் காணப்படும்

இக்கதையைக்கொண்டு ஒரு புதினம் எழுதவேண்டும் என்று திடீரென்று என் மனத்தில் பட்டது. என் இளமைக் காலத்தில் ஒரு முறை லினன் நெசவாளி ஒருவன் தன் முதுகில் ஒரு சாக்கைச் சுமந்து செல்வதைப் பார்த்திருக்கிறேன். அதை நினைவுகூர்ந்து பின்பு அதைப்பற்றிப் பன்முறை சிந்தனைசெய்து உயிரோட்டம் நிறைந்த ஒரு புதினத்தை ஆக்க வேண்டுமென விருப்புற்றேன்.”

இந்நூலாசிரியர் இப்புதினத்தின் தொடக்கத்திலேயே புதினத்தின் தலைவனாகிய சைலஸ் மார்னர்மீது நமக்கு இரக்கம் பிறக்கும்படி செய்து விடுகிறார். கடைசிவரை அவன்மீது நாம் கொண்டுள்ள அநுதாபம் குறைந்து விடாதபடியும் கதை நிகழ்ச்சிகளை விளக்கிக் கொண்டு செல்கிறார்.

குற்றமற்ற மார்னருக்கு அடுக்கடுக்காக ஏற்பட்டு வந்த இன்னல்கள், அவற்றால் அவனுடைய வாழ்க்கைப் போக்கே முற்றிலும் மாறிவிட்டமை, தன்னந்தனிமை வாழ்க்கை, பணத்தின்மீது கொண்ட பேராசை, கண்ணைப் போற்றிக் காத்த பொன் காணாது போனபோது கதறிய கதறல், பொன்னுக்குப் பதிலாகப் பொன்முடி கொண்ட குழந்தைப் பெண் கிடைத்தல், மழலைப் பருவத்துப் பெண் குழந்தையால் இழந்த வாழ்வு மீண்டும் எய்தப் பெறல், பின்பு காணாமற்போன பொன்னும் கிடைக்கப் பெறல்—இவையே இப்புதினத்தின் கருப்பொருள் நிகழ்ச்சிகள். இந்நிகழ்ச்சிகளை மையமாகக்கொண்டு மனித மனத்தின் பல்வகை உணர்ச்சிகளை வரைந்து காட்டி இக்கதை நம்முள்ளத்தில் என்றும் நீங்காது நிலைத்திருக்குமாறு செய்துள்ளார் இப்புதின ஆசிரியர்.

ஆங்கில மூல நூலிற் காணப்படும் சென்ற நூற்றாண்டு ஆங்கிலச் சமுதாயப் பழக்க வழக்கங்கள் பற்றிய செய்தி



களும், வருணனைகளும் கதைப் போக்கிற்கு இன்றியமையாதனவாயில்லாவிடங்களில் மொழிபெயர்க்காது விடப்பட்டுள்ளன. எனினும் மூல நூலின் சுவைகள் எல்லாம் மொழிபெயர்ப்பில் கொண்டு வருவதிலும், கதைத் தொடர்ச்சி சிறிதும் வழுவாதிருக்குமாறு பார்த்துக் கொள்ளுவதிலும் பெருமுயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்கள் இப்பணியில் என்னை ஈடுபடுத்தியமைக்கு அவர்களுக்கு யான் என்றும் கடப்பாடுடையேன்.

சென்னை<br>26—7—62

மு. சதாசிவம்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தாழ்வும் வாழ்வும் | 1 |
| 2. | ஓய்வில்லாத உழைப்பு | 19 |
| 3. | நிலக்கிழாரின் இருபிள்ளைகள் | 34 |
| 4. | டன்சேவின் முயற்சியும் முடிவும் | 42 |
| 5. | பணங் காணாதது கண்டு மார்னர் மனங் குமுறுதல் | 52 |
| 6. | காட்பிரே குதிரையை இழந்து வருந்துதல் | 65 |
| 7. | காட்பிரே உண்மையை ஒளிக்காது உரைத்தல் | 72 |
| 8. | ராவிலோ ஊரில் கிறித்துமசுத் திருவிழா | 79 |
| 9. | புத்தாண்டு விருந்தும் பொலிவுறு நடனமும் | 91 |
| 10. | பெறற்கருஞ் செல்வம் மார்னர் பெறுதல் | 97 |
| 11. | காட்பிரே எய்திய வியப்பும் அதிர்ச்சியும் | 107 |
| 12. | எப்பியை மார்னர் எடுத்து வளர்த்தல் | 118 |
| 13. | மார்னர்—எப்பியின் புதுக்குடில் வாழ்க்கை | 132 |
| 14. | சிவப்பு மாளிகையில் உவப்பில் வாழ்க்கை | 144 |
| 15. | காணாது ஒழிந்த செல்வம் கைவரல் | 152 |
| 16. | அப்பாவின் அழைப்பும் எப்பியின் மறுப்பும் | 159 |
| 17. | ஏமாற்றம் | 172 |
| 18. | பழையவூர் சென்று வறிதே மீளுதல் | 175 |
| 19. | முடிவு | 180 |


# சைலசு மார்னர்

## 1. தாழ்வும் வாழ்வும்

குளிர் காலத்தில் ஒரு நாள் அந்திச் சூரியன் மறைந்து மெல்லிய இருள் படர்ந்துகொண்டிருக்கும் போது வேற்றுப் புலத்தினர் போலத் தோற்றமளித்த சிலரைக் கண்டு ஓர் இடையனின் நாய் இடைவிடாது உரத்துக் கத்திக்கொண்டிருந்தது. பளுவான மூட்டையால் வளைந்த முதுகுடன் அங்கு வருவாரை எல்லாம் வரவேற்க வேண்டுமென்று நாய்க்கு என்ன இருக்கிறது? இந்த வெளிறிய முகத்தையுடைய மனிதர்களும் கண்டார்க்கு விருப்பாவலைத் தூண்டும் மூட்டைகள் இல்லாமல் பெரும்பாலும் வெளியே அடியெடுத்து வைப்பதில்லை. இடையனோ அந்த மூட்டையில் நூல் கட்டு அல்லது நூலால் நெய்த துணியைத் தவிர வேறொன்றும் இருக்காது என ஊகித்துக்கொண்டான். ஆனால் அந்த மாயமந்திர உணர்ச்சியைக் கிளர்விக்கும் மூட்டையில்லாமல் அவர்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத இந்த அறுவை வாணிகம் சிறப்புற நடைபெற முடியுமா என்று ஐயங்கொண்டான்.

அந்தப் பழங்காலத்தில், பழக்கப்படாத எந்தப் பொருளைப் பற்றியும், எந்த ஆளைப்பற்றியும் மக்கள்

எளிதாக மூடநம்பிக்கை கொண்டுவிடுவர். ஊர் ஊராய்த் திரிந்து சிறு பொருள்களை விற்றுக்கொண்டு செல்வாரையோ அல்லது கத்திகளைச் சாணை தீட்டுவாரையோ எப்போதேனும் கண்டாலும் அவர்களைப் பற்றிச் சிறிது அச்சம் கொள்வர். நாடோடியாகத் திரிபவர்கள் எங்கிருந்து வருகின்றனர், அவர்கள் யார் என்பதைப் பற்றி யாருக்கும் தெரியாது. ஒருவருடைய தாய்தந்தையரைப் பற்றி ஒன்றும் அறியாமலேயே அவரைப் பற்றி என்ன கூறமுடியும்? பழங்காலத்து நாட்டுப்புற மக்களுக்கு அவர்களுக்கு அனுபவமில்லாத வெளியுலகம் எல்லாம் கலக்கமும் இரகசியமும் உடையதாகவே காணப்பட்டது. கிணற்றுத் தவளைகளான அவர்களுக்கு, நாடோடியாகத் திரிபவர்களைப் பற்றி எண்ணியவுடனே குளிர்காலத்தில் வெளியே புறப்பட்டுப் போய் இளவேனிலில் திரும்பிவரும் குருவிகளே நினைவுக்கு வரும். புதிதாக ஒருவர் தூரநாட்டிலிருந்து வந்து நெடுங்காலம் நிலையாகக் குடியேறித் தங்கி வாழ்ந்தாலும் அவரை ஒருமாதிரியாகவே கவனித்து வருவர்; அவநம்பிக்கை நிறைந்த பார்வையைச் செலுத்துவர். அவர்கள் நீண்ட காலம் நன்னடக்கையுடன் நடந்துவந்தால்தான் ஊரினரின் மருட்கை சிறிது குறைய வாய்ப்பு ஏற்படும். குறிப்பாகப் புதிதாகக் குடியேறியவர் கைத்தொழில் திறமையோ, நுண்தொழில் நுழைபுலமோ பெற்றிருப்பின் அவர்களைப் பற்றி ஐயுறவு கொள்வது சிறிது குறைந்து காணப்படும்.

நாக்கு வல்லமையுடன் பேசுபவர்களையோ அல்லது சிற்றூர்களில் பழக்கமில்லாத வேறு ஏதாவதொரு கலையைக் கற்றவர்களையோ எதிர்ப்படின் அவர்களைப் பற்றிச் சிறிதேனும் ஐயங்கொள்ளாமல் இருக்க



மாட்டார்கள். சிறிது மேலான குடும்பத்திற் பிறந்தவர்கள் கூட அறிவிற் சிறந்தவர்களாய் விளங்கவில்லை. வானத்தைப் பார்த்து மழை வருவதை அறியும் அளவிற்குத்தான் அவர்களுக்கு அறிவுடைமை இருந்தது. தங்களுக்குத் தெரியாத பிற செய்திகளைப் பற்றிய அறிவு எவர்க்கேனும் இருக்குமானல் அவர் மாயமந்திரம் தெரிந்தவரே என்று யாவரும் எளிதில் எண்ணி விடுவர்.

இவ்வாறுதான் நகரங்களிலிருந்து வந்து ஊர்ப்புறங்களில் ஆங்காங்குக் குடியேறி வாழ்ந்து வந்த நெசவுத் தொழிலாளர்களும் நாட்டுப்புற மக்களால் வேற்றுப் புலத்தாராகவே கருதப்பட்டு வந்தனர். அவர்களும் பெரும்பாலும் தனித்தே வாழ்க்கையை நடத்தி வந்தனர். அதனல் அவர்கள் ஊரினர்க்குப் புதுமையான வழக்கங்களை மேற்கொண்டு வாழவும் நேரிட்டது.

சென்ற நூற்றுண்டின் முற்பகுதியில் சைலசு மார்னர் என்ற நெய்தல்வல்லான் அப்படிப்பட்டவர்களுள் ஒருவன். அவன் ஒரு நகரத்திலிருந்து வெகு தூரம் வந்து மிகச் சிற்றூரான, காட்டு மரங்களடர்ந்த ராவிலோ என்ற ஓர் ஊரின் ஒரு பாங்கிலிருந்த சிறு கல்குடிசையில் வாழ்ந்து வந்தான்.

காண்பதற்கு மகிழ்ச்சி யூட்டத்தக்க காற்றுடி எந்திரங்களின் படபடப்பையோ, கதிரடிக்கும் கட்டை எழுப்பும் எளிய இசைமையோ போலன்றித் தெளிவற்ற ஆனல் ஒழுங்கான ஒலியை எழுப்பிக்கொண்டிருந்த மார்னரின் நாடாவின் ஓசை ராவிலோச் சிறுவர்களுக்குச் சிறிது பயம் கலந்த விருப்பார்வத்தை ஊட்டிவந்தது. அச் சிறுவர்கள் அடிக்கடி தாங்கள் வலைகளையோ,

பறவைக் கூடுகளையோ விட்டுவிட்டு இக்கல்குடிசைக்கு வந்து சன்னல் வழியே மார்னரின் தறியை எட்டிப் பார்க்க வருவர். மாறி மாறி ஒலிக்கும் நாடாவின் இசையையும், தறியில் குனிந்து அமர்ந்துகொண்டு கால்களால் மாறி மாறி அழுத்தி இயக்கும் மார்னரையும், தறியின் புதுமையான இயக்கத்தையும் கண்டு ஒருவிதமான அச்சங்கலந்த உணர்ச்சியைப் பெற்றிருந்தனர். சில சமயம் தறியில் நூலிழை அறுந்து போனதைக் கவனிப்பதற்காக மார்னர் நிறுத்தும்போதுதான் ஊர்ச்சிறு போக்கிரிகள் ஒன்று திரண்டு அங்கே வந்து சூழ்ந்துகொண்டிருப்பதைக் காண்பான். காலத்தின் அருமையை உணர்ந்தவனாயிருந்தும், உடனே தறியிலிருந்து கீழே இறங்கிவந்து, கதவைத் திறந்து, அவர்கள் பயங்கொண்டு ஓடும்படியாகச் சினந்து நோக்குவான்.

சைலசு மார்னரின் வெளிறிய முகத்தில் விளங்கிக் காணப்படும் பெரிய நீலநிறக் கண்கள் அருகிலுள்ளவற்றைத் தவிர மற்றவற்றைத் தெளிவாகக் காணமாட்டா. அப்படிப்பட்ட கண்பார்வை சிறுவர்களின் முகத்தைச் சுளிக்கச் செய்ய முடியுமா? சிறுவர்கள் அவனைக் கண்டதும் அங்கிருந்து ஓடிப்போனாலும் தூரத்திலிருந்துகொண்டு அவனைப் பழித்துக் காட்டுவர்.

மார்னர் மனது வைத்தால் மக்களின் வாத நோயையும் குணப்படுத்த முடியும் என்றும், அவனுடன் நட்புறவுடன் பேசினாலே மருத்துவர்க்குக் கொடுக்கும் பணம் மீதமாகும் என்றும் ஊர்மக்கள் பேசிக்கொண்டனர். மந்திரம், பூதம் இவைகளைப் பற்றிய நம்பிக்கை இக்காலத்திலும் பலரிடையே காணப்படுகிறது. ஏனெனில் கல்வியறிவால் பண்படாத மனம், எளிதில்



மூடநம்பிக்கைகளில் ஆழ்ந்த பற்றுக்கொண்டுவிடுகிறது. அவர்கள் ஆர்வத்தையும், நம்பிக்கையையும் ஊட்டும் எண்ணங்களைக் கற்பனையாகவேனும் வளர்த்துக்கொள்வதில்லை. ஆனால் எப்போதும் பயம் கொள்ளும் உள்ளங்களையே பெற்றிருந்தனர்.

புத்தியக்கங்கள் தோன்றினாலும் பழமைப் பழக்கவழக்கங்களின் பிடிப்பு அறாத பட்டிக்காடாகவே ராவிலோ விளங்கியது. ஆங்காங்கே சிதறுண்டு வாழும் எளிய இடையர்கள் குடியிருக்கும் ஊரென்றோ, நாகரிக வாடையே வீசப்பெறாத நாட்டுப்புறமென்றோ அதைச் சொல்லிவிட முடியாது. அது 'இன்ப இங்கிலாந்து' என்று அழைக்கப்படும் புல்வெளிப் பகுதியின் நடுவிலேதான் இருந்தது. அது கோவிலுக்காக ஒவ்வொருவரும் மிகுதியான படியரிசி அளந்து கொடுக்கும் வளமான வயல் நிலங்களைப் பெற்றிருந்தது; ஆனால் அவ்வூரிலிருந்து குதிரை மீது புறப்பட்டு ஒருமணி நேரம் பயணம் செய்தால்தான் அருகிலுள்ள பட்டணத்தை அடைய முடியும். அவ்வூரில் நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியின் சத்தம் என்றும் கேட்டதில்லை. எனினும் அதுவும் ஒரு முக்கியமான ஊராகவே மக்களால் கருதப்பட்டது. அவ்வூரில் ஒரு பழைய கோவிலும், பெரிய இடுகாடும் செங்கல் சுவர்களால் சுற்றிவளைந்து கட்டப்பட்ட இரண்டு மூன்று பெரிய பண்ணைகளும், மதில் எழுப்பப்பட்ட பல தோட்டங்களும் இருந்தன. இவையெல்லாம் அவ்வூர்ச் சமுதாய வாழ்க்கையின் உயர்நிலைச் சின்னங்களாய் விளங்கின. ஆனால் அங்கோ பூங்கா ஒன்றும் இல்லை. அவ்வூரின் முக்கியமான தலைவர்கள் அமைதியாக உழவுத்தொழிலே செய்து வந்தனர்.

மார்னர் ராவிலோவுக்கு வந்து பதினைந்து ஆண்டுகள் கழிந்துவிட்டன. அப்போது அவன் முகம் வெளிறியதாயிருந்தது. முதுமையை எய்தாமலிருந்தும் அவன் கண்கள் கிட்டப்பார்வை உடையனவாயிருந்தன. அவனுடைய தோற்றம் சாதாரணப் பண்பாடும், உலகியலுணர்வும் உடைய மக்களுக்கு ஒன்றும் புதுமையைக் கொடுத்திருக்காது. ஆனால் அவன் குடியேறிய பகுதியிலுள்ளவர்க்கு அவன் தோற்றம் அவன் தொழிலின் இயல்பைப்போலவே மறைபொருள் பொதிந்ததுபோலக் காணப்பட்டது. அவன் வாழ்க்கை முறையும் அவ்வாறே அமைந்திருந்தது. அவன் தன் கதவு நிலையைத் தாண்டி வீட்டிற்குள் யாரையும் வரவிடுவதில்லை. ஊர்மன்றம் சென்று மது அருந்துவதில்லை. தன்னைப்போல் நெசவினால் வாழ்வாரைப் பற்றிக்கூட ஊர்ப்பேச்சுப் பேசுவதில்லை. தன்னைக் கூப்பிட்டுக் கொடுத்தாலன்றி, அல்லது தனக்கு இன்றியமையாத வாழ்க்கைத் தேவைகளைப் பெறும்போதன்றிப் பிறவேளைகளில் அவன் யாருடைய உதவியையும் பெற முற்படுவதில்லை. ராவிலோ ஊர்ப் பெண்கள் பலரும் ‘செத்துப் பிழைத்தவன் போலக் காணப்படுகிறான்’ என்று பேசிக்கொள்வதைக் கேட்ட மார்னர் தன்னை யாரும் திருமணம் செய்துகொள்ள வேண்டியதில்லை என்று தனக்குள் கூறி அமைந்துவிடுவான்.

மார்னரின் உடல்தோற்றத்தைப் பற்றிய இக்கருத்துக்கு அவன்றன் வெளிறிய முகமும் இணையில்லாத கண்களும் மட்டுமேயல்லாது வேறுசில காரணங்களும் இருந்தன. எலி வேட்டையாடும் ஜெம் ரோட்னி என்பவன் ஒருநாள் மாலை வீட்டுக்குத் திரும்பிவந்து கொண்டிருக்கும்போது வழியில் மார்னரைப் பார்த்தான். மார்னர் ஒரு சுமைதாங்கிக் கல்மீது சாய்ந்துகொண்டிருந்தான். ஆனால் அவன் தன் முதுகில் இருக்கும் கனமான பளுவைச் சுமைதாங்கிக் கல்லின் மீது வைக்காமலேயே முதுகில் சுமந்துகொண்டு நின்றிருந்தான். ஜெம் அருகே சென்று அவனை நோக்கியபோது, அவன் கண்கள் செத்தவன் கண்களைப்போலக் குழிந்து பஞ்சடைந்திருந்தன. அவனிடம் பேசுவதற்காக ஜெம் அவனைப் பிடித்துக்குலுக்க வேண்டியிருந்தது. குலுக்கும்போது மார்னரின் கைகள் இரும்பால் செய்யப்பட்டவைபோன்று இருந்தன. உடனே மார்னர் செத்தேவிட்டான் என்று முடிவு செய்துகொண்டு ஜெம் அவனுக்கு விடைசொல்லிவிட்டு விரைவில் வீடுவந்து சேர்ந்தான். அவன் செத்துப்போய் நின்றுகொண்டிருப்பதைத் தன் இரண்டு கண்களாலுமே பார்த்துவிட்டு வந்ததாக அவன் பலரிடமும் கூறினான். சிலர் அவனுக்கு வலிப்பு நோய்தான் வந்திருக்கும் என்று வாதம் செய்தனர். ஆனால் அங்கே வந்திருந்த மாசே என்பவன் வலிப்புநோய் வந்தால் கீழே விழுந்துவிடாமல் யாரேனும் நின்றுகொண்டிருக்க முடியுமா என்று கேட்டான்.

குடம்பை தனித்தொழியப் புள்பறந்து சென்று மீண்டும் திரும்பி வருதல் போலவே அவன் உடலை விட்டுவிட்டு அவனுயிர் அடிக்கடி போய்வருகிறது என்று அவ்வூரில் பலரும் நம்பினர். ஆனால் மூலிகைகளையும், வசியங்களையும் பற்றி மார்னர் எங்கிருந்து கற்றுக்கொண்டான்? வேறொரு மருத்துவரின் கண்காணிப்பில் இருந்து குணப்படாது, இதயம் படபடத்துத் துடித்துக்கொண்டிருந்த சாலி ஓட்சு என்பவளைத்

தன் மூலிகைகள் மூலம் ஒரு குழந்தையைப்போலத் தூங்கச்செய்தான் மார்னர். இதையும் தான் நேரில் கண்டதாகவே ஜெம் மற்றவர்களிடம் கூறினுன். மார்னர் விரும்பினுல் இன்னும் பலரைக் குணப்படுத்தலாம் என்றும் சொன்னுன்.

மார்னருக்கு வரவிருந்த பல தொல்லைகளை அவனிடமிருந்த தனிப்பண்புகள் தாம் தடைசெய்தன என்று கூறலாம். இதைக்காட்டிலும், அருகிலுள்ள டார்லி என்ற ஊரில் வாழ்ந்த புகழ்பெற்ற முதிய நெசவாளன் இறந்துபோய் விட்டதால், மார்னரின் வருகை அவ் வட்டாரத்துச் செல்வ மகளிரால் பெரிதும் வரவேற்கப் பட்டது என்ற காரணமே பொருத்தமானது. மேலும் பல குடிசைவாழ் மக்கள் நூற்று வரும் நூலைப் பயன் படுத்தும் ஒருவனுக மார்னர் விளங்கினுன். அவன் அவர்களுக்குப் பயன்படுபவனுயிருந்தமையின், அவன் மேல் அவர்கள் வெறுப்புக்கொள்ளாதிருந்தனர்; அவர்களுக்கு அவன் நெய்து கொடுக்கும் துணியில் குறை பாடு எதுவும் காணப்படாமையின் அவன்மீது ஐயமுங் கொள்ளாதிருந்தனர். எனினும் நெடுங்காலம் அவர்கள் தங்கள் நடுவே வாழ்ந்திருந்த மார்னரைப்பற்றித் தாங்கள் கொண்டிருந்த முதல் எண்ணங்களில் மாறுதல் எதையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு கூறியதுபோலவே அவனைப் பற்றிப் பதினைந்து ஆண்டுகளின் முடிவிலும் கூறினர். முன்புபோல அவனைப்பற்றி அடிக்கடி குறையாகப் பேசுவதில்லையாயினும், அவர்கள் தாங்கள் கொண்டிருந்த கருத்தில் நம்பிக்கை குன்ருமல் இருந்தனர். இத்துணையாண்டுகளாக மார்னருக்கு ஒரே ஒரு பற்றுக் கோடுதான் இருந்தது. அதுதான் அவன் தன் வீட்டிலேயே ஓரிடத்தில் பாதுகாப்பாகப் புதைத்து வைத்திருந்த பொற்காசுகளாகும்.



ஊரினர் அவனைப்பற்றிக்கொண்டிருந்த எண்ணம் மாருமல் அப்படியே இருந்ததாலும், அவனது அன்ருட வாழ்க்கையின் பழக்க வழக்கங்கள் சிறிதும் மாருமல் இருந்தனவாதலாலும், அவன் அகவாழ்க்கை வரலாறு அறிதற்கரியதாகவே இருந்தது. ஆர்வத் துடிப்பேதும் இல்லாதவனுகவும், தனிமைத்துன்பத்தில் மூழ்கியவன் போலவும் காணப்பட்டான். ராவிலோவுக்கு வருவதற்கு முன்பு அவன் வாழ்க்கை இயக்கம் நிறைந்ததாகவும் ஊக்கம் மலிந்ததாகவும் இருந்தது. அப்போது ஒரு சிறுசமயப் பிரிவைச்சேர்ந்த ஒரு தொழிலாளியாக இருந்தான். ‘லாண்டர்ன் யார்டு’ என்னும் அவன் வாழ்ந்துவந்த இடத்தில் அவன் மிகவும் பெருமையாகவே மதிக்கப்பட்டுவந்தான். தளராத நம்பிக்கையும் சிறப்பு வாழ்க்கையும் பெற்றிருந்தான். ஒருநாள் கோவில் வழிபாட்டுக் கூட்டத்தில் ஒரு மணி நேரத்திற்குமேல் உயிர்பிரிந்தவனைப்போல உணர்வின்றிக் கிடந்தான். அவனிடம் ஏதோ தெய்வீக சக்தி இருக்கிறது என்றெண்ணி அவ்வூரினர் அவன்மீது தனிப் பற்றுக்கொண்டனர். மார்னர் கோவிலில் மயக்கமாய் விழுந்துகிடந்தமைக்குக் காரணம் அவனது உடல் நலக் குறைவே என்பதை அவனே ஒப்புக்கொண்டிருக்கக்கூடும்.

கோவில் அருச்சனைக்கு உரியவனுக அவனைத் தேர்ந்தெடுத்துத் தனிப்பயிற்சி அளித்தனர். அவன் தன்னிடம் ஆன்மஒளி ஓரளவு உண்டென்றே நம்பினுன். ஒரு சிலரைத்தவிர மற்றவர்கள் எல்லாரும்

அவனுக்கு இறையொளி இருந்தது என நம்பினர். வேறு யாராயிருந்தாலும் பிறர் தன்னைப் பெரிய ஆத்ம ஞானி என்று நினைக்கும்படி நடந்துகொண்டிருப்பர். ஆனால் நேர்மைமிக்க மார்னரோ தன்னைப் பெரிதாகப் பிறர் நினைத்துக்கொள்ளும்படி நடிக்கவில்லை. எனினும் அவன் புகழ் பல ஊர்களிலும் பரவியது.

மார்னர் சில மருந்து மூலிகைகளின் பயனைப்பற்றியும் அவற்றைத் தயாரிக்கும் முறை பற்றியும் ஓரளவு தன் அன்னையிடம் கேட்டறிந்திருந்தான். அன்னையளித்த அவ்வறிவுச் செல்வத்தை மறவாது போற்றிவந்தான். ஆனால் பிற்காலத்தில் அவனுக்கே அவற்றைப்பற்றி ஐயம் உண்டாயிற்று. வழிபாடு இல்லாமல் வெறும் மூலிகைகளாலேயே விரும்பிய பயன் கிட்டுவதில்லை என்றும் அதனால் மூலிகைகள் இல்லாமல் வழிபாடு செய்வதே போதுமானது என்றும் எண்ணினான்.

இளமைக்காலத்தில், கோவிலைச் சார்ந்த சிலருள் மார்னர் தன்னைக் காட்டிலும் சிறிது வயதுகூடிய ஓரிளையவனிடம் நெருங்கிப்பழகிவந்தான். இருவரையும் மற்றவர்கள் இணைபிரியா நண்பர்கள் என்றே கூறிவந்தனர். அந்த நண்பனின் பெயர் வில்லியம் டேன் என்பது. அவனும் கடவுட்பக்திக்கு ஓர் ஒளிவிளக்காய்த் திகழ்ந்தான். ஆனால் அவன் மற்ற எல்லோரைக் காட்டிலும் தானே அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவன் என்ற எண்ணம் கொண்டிருந்தான். ஆனால் மற்றவர்களுக்கு வில்லியம் குறைபாடுகள் உள்ளவனாகக் காணப்படினும், நண்பன் மார்னருக்குக் குறையற்றவனாகவே காணப்பட்டான். உலகியலறிவு பெற்றிராத மார்னரின் நம்பிக்கையில் எளிமை தவழ்ந்திருந்தது.



தற்பெருமையும் பெருமிதமும் நிரம்பிய வில்லியத்தின் சாய்ந்த கண்களும் தடித்த உதடுகளும், மார்னரின் கண்களையும் உதடுகளையும் நன்கு வேறுபடுத்திக்காட்டின. இவ்விரு நண்பர்களுக்கு மிடையே அடிக்கடி நடக்கும் பேச்சின் பொருள் ஆன்மவிடுதலையின் உறுதிப்பாடு பற்றியதே. இறைவன்பால் அச்சம் கலந்த நம்பிக்கையினும் வேறான உள்ளநிலை தனக்கில்லை என்பதை மார்னர் தன் நண்பனிடம் கூறினான்.

சிலமாதங்களாக மார்னர் சாரா என்ற ஓர் இளைய வேலைக்காரப் பெண்ணைக் காதலித்துப் பழகிவந்தான். அவளிடம் பழகிவந்தாலும், தன் பழைய நண்பனிடம் கொண்டிருந்த நட்பை நெகிழவிட்டு விடவில்லை. திருமணம் செய்து கொள்ளுவதற்காக மார்னரும், சாராவும் தங்களா லானவரை சிறுசேமிப்புக்களைச் செய்துவந்தனர். இவர்கள் இருவரும் ஞாயிற்றுக்கிழமைகளில் சந்திக்கும்போது சிலசமயம் வில்லியம் குறுக்கேவந்து நிற்பதைக் காதலி சாரா வெறுத்துப் பேசாமலிருந்தது மார்னருக்கு ஓர் ஆறுதலாகவே இருந்தது.

ஒருநாள் மார்னர் தெய்வம் ஏறப்பெற்றவன் போலக் கோவிலில் ஆவேசமுற்று ஆடினான். மற்றவர்கள் எல்லாரும் அவனுக்குச் சாமிவந்தது என்றே கருதினர். ஆனால் வில்லியம் அது பேய்விளையாட்டே என்று எல்லாரிடமும் கூறினான். உண்மையை மறைக்காமல் பேயாட்டம் வந்தது என்பதை ஒப்புக்கொள் என்று மார்னரை வேண்டினான். இது கண்டு மார்னருக்குச் சினம் பொங்கவில்லை. ஆனால் தன்னைப்பற்றி வீணாகத் தன் நண்பன் ஐயுறவு கொள்ள நேரிட்டதே என்று மனம் மறுகினான். வெந்தபுண்ணில் வேல்

பாய்வது போல இந்தச் சமயத்தில் சாராவும் அவனி டத்து வெறுப்புக் கொண்டவளைப் போல நடந்து வந்தாள்.

ஒருநாள் கோவிலின் பெரிய மதகுருவுக்கு நோய் மிகுந்துவந்தது. கோவிலைச் சார்ந்தவர்கள் எல்லாரும் அவரை மிக்க கவனத்துடன் கவனித்துவந்தனர். மார்னரும் வில்லியமும் மதகுருவை முறைவைத்துக் கொண்டு ஒருநாள் விட்டு ஒருநாள் கவனித்துவந்தனர். கிழ மதகுரு உடல்நலந் தேறி வந்ததுபோலக் காணப் பட்டார். அன்று மார்னரின் முறை. மதகுருவின் உடல் தேறிவிடும் என்று நம்பிக்கொண்டு மார்னர் சிறிது கவனக்குறைவாகவே இருந்தான். விடியற் காலை நேரத்தில் மதகுருவின் மூச்சு ஒலி மெல்லிதாகிக் கொண்டேவந்து நின்றுவிட்டது. திடீரென்று மார்னர் பொழுக்குப் பொழுக்கென்று எரிந்துகொண்டிருந்த மெழுகுவர்த்தியைக் கையிலெடுத்து வந்து அவர் முகத் தைப் பார்த்தான். ஐயமில்லை, அவர் உயிர் அகன்று விட்டது. அவர் உறுப்புக்கள் எல்லாம் விறைத்து விட்டன. தான் வெகுநேரம் தூங்கிவிட்டோமோ என்று மார்னர் கடிகாரத்தைப் பார்த்தான். மணி நான்கு ஆகியிருந்தது. "ஏன் வில்லியம் இன்னும் வரவில்லை?" என்று கவலை மிக்கவனாய் யாரேனும் உதவிக்கு வருவார்களா என்று வெளியே போய் நின்றுகொண் டிருந்தான். யாரும் வரவில்லை. மணி ஆறு அடித்து விட்டது. மார்னர் வில்லியத்தைப் பார்க்கப் புறப்பட் டான். அப்போது வில்லியமே கோவில் அமைச்சர் ஒருவருடன் அங்கு வந்தான். மார்னரை அவர்கள் 'லாண்டர்ன் யார்டு' க்கு வரும்படி அழைத்தனர். தன்னை எதற்காக அவர்கள் அழைக்கின்றனர் என்று



மார்னர் கேட்டதற்கு, 'எல்லாம் பிறகு தெரியவரும்' என்ற பதிலே வந்தது. கோவிலைச் சார்ந்தவர்களின் முன்னிலையில் மார்னர் கொண்டுவந்து நிறுத்தப் பட்டான். கோவில் அமைச்சர் ஒரு பேனுக்கத்தியைத் தம் பையிலிருந்து வெளியே எடுத்து மார்னரைப் பார்த்து "இக்கத்தியை எங்கே வைத்தாய்?" என்று கேட்டார். அதற்கு அவன் தன் பைக்குள் இருந்த அக்கத்தியை வேறெங்கும் எடுத்துவைக்க வில்லையே என்று கூறினன்; இக்கேள்வியைக் கண்டு நடுங்கி விட்டான்.

அங்கிருந்தோர் மார்னரைப்பார்த்து அவன் செய்த பாவத்தை மறைக்கமுயலாமல் ஒப்புக் கொண்டு அதற் காக வருந்தும்படி கேட்டுக் கொண்டனர். அக்கத்தி உயிர்நீத்த மதகுருவின் அறையிலே இருந்தது. அது வும் முந்தியநாள் அமைச்சரே பார்த்திருந்த பணப்பை இருக்கும் இடத்திலேயே இருந்தது. யாரோ அப்பையை எடுத்துப்போய்விட்டனர். அதை எடுத்துப் போனவர் அந்தக் கத்திக்குச் சொந்தமானவராக அல்லாமல் வேறு யாராக இருக்க முடியும்? அதிர்ச்சியால் சிறிதுநேரம் சைலசு மார்னர் பேசாமலிருந்தான். பிறகு வாய்திறந் தான்: "கடவுள்தான் என்னைக் காப்பாற்றுவார். அந்தக் கத்தி மதகுருவின் அறையில் இருந்ததும் தெரியாது; பணம் களவுபோனதும் தெரியாது. வேண்டுமானல் என்னையும் என்வீட்டையும் சோதனைசெய்து பாருங்கள். கடந்த ஆறு மாதங்களாக யான் சேர்த்து வைத் திருக்கும் மூன்று பவுன்களைத்தவிர வேறு பணம் ஒன்று மிருக்காது; இது வில்லியமுக்குக் கூடத் தெரியும்" என்றான். இதைக் கேட்ட வில்லியம் ஒரு பெரு மூச்சு விட்டான்.

கோவிலமைச்சர் மார்னரைப் பார்த்து, "மார்னர், உனக்கெதிராகப் பல சான்றுகள் உள்ளன. 'சென்ற இரவுதான் பணம் காணமல் போயிருக்கிறது. இறந்து போனவருக்கருகில் உன்னைத்தவிர வேறு யாருமில்லை. நோய்காரணமாகத்தான் வழக்கமாகவரும் நேரத்திற்கு வரமுடியாமல் போய்விட்டது என்று வில்லியம் விளம்புகிறான். அவன் வரவில்லை என்று நீயே கூறுகிறாய். மேலும் நீ அந்தப் பிணத்தைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாது வெளியேறிவிட்டாய்'' என்றார்.

அதற்கு மார்னர் "நான் தூங்கிப்போயிருப்பேன்" என்றான். சிறிதுநேரங் கழித்து "இல்லாவிட்டால் நான் கனவு நிலையில் இருந்திருப்பேன். அப்போது திருடன் வந்து பணத்தை எடுத்துக் கொண்டு போயிருப்பான். மீண்டும் வேண்டிக் கொள்கிறேன், என் வீட்டில் சோதனை செய்து பாருங்கள். நான் இதுவரை வீட்டை விட்டு அப்பால் செல்லவில்லை" என்றான்.

அவன் கேட்டுக் கொண்டது போலவே வீடு சோதனையிடப்பட்டது. சோதனைமுடிவில் வில்லியம், காணமல்போன பணப்பை மார்னரின் அறையில் உள்ள ஒரு மேசைக்குள் வெறும்பையாக வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு பிடித்தான். இதன்மேல் வில்லியம் தன் நண்பனிடம் உண்மையை ஒப்புக் கொண்டுவிடுமாறு வற்புறுத்தினான். தன் பாவச்செயலை மறைத்து வைக்கவேண்டாமென மன்றாடிக் கேட்டுக்கொண்டான். மார்னர் உடனே சினக்குறிப்புடன் அவனைப் பார்த்து, "வில்லியம், ஒன்பது ஆண்டுகளாக நீயும் நானும் ஒன்றாய்க்கலந்து பழகிவந்திருக்கிறோம். நான் எப்போதாவது ஒரு பொய் சொன்னதைக் கண்டிருக்கிறாயா? கடவுள்தான் என்னைக் காப்பாற்றவேண்டும்'' என்றான்.



அதற்கு வில்லியம், "நண்ப, சாத்தானின் தூண்டுதலால் 'உன் இதயக்குகைக்குள்ளே என்னென்ன மறைத்து வைத்திருக்கிறாய் என்று யான் எப்படி அறிய முடியும்?" என்று கூறினான்.

மார்னர் இன்னும் தன் நண்பனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். திடீரென்று அவன் முகத்தில் ஓர் ஆழ்ந்த ஒளி ஏற்பட்டது. படபடப்போடு பேசத்துடித்தான். ஆனால் மனதுக்குள்ளேயிருந்த அதிர்ச்சியினால் அமைதியடைந்து நடுங்கினான். கடைசியில் தாழ்ந்தகுரலில் வில்லியத்தைப் பார்த்து, "அந்தக் கத்தி என் கோட்டுப்பையில் இருக்கவில்லை என்றுதான் எனக்கு நினைவு தெளிவாக இருக்கிறது" என்றான்.

வில்லியம், "நீ என்ன நம்புகிறாய் என்பதைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது" என்றான்.

அங்கிருந்த மற்றவர்கள், 'அப்படியானால் கத்தி வேறு எங்கே இருந்தது?", என்று மார்னரை வினவினர். ஆனால் அவனால் மேலும் விளக்கம் ஏதும் தர முடியவில்லை. "துக்கம் என் நெஞ்சை அடைக்கிறது. என்னால் பேச முடியவில்லை. கடவுள்தான் என்னைக் காப்பாற்றுவார்" என்றான்.

கோவிலுக்குத் திரும்பிவந்ததும் அவர்கள் இதைப் பற்றி இன்னும் ஆராயத் தொடங்கினார்கள். திருடனைக் கண்டுபிடிப்பதற்குச் சட்டத்தின் துணையை நாடுவதே 'லாண்டன் யார்டுக்' கோவிலைச் சார்ந்தோருக்கு விதிக்கப்பட்ட விதிகளுக்கு எதிரானது. அதனால் கோவில் உறுப்பினர்கள் உண்மையைக் கண்டுபிடிக்க வேறு வழிமுறைகளைக் கையாளத் தொடங்கினர். கடவுளைக்

கும்பிட்டுச் சீட்டுக் குலுக்கிப் பார்ப்பது என்று முடிவு செய்தனர். அம்மக்களின் சமய நம்பிக்கையைப் பற்றிச் சிறிதும் அறியாதவருக்கே இச்செயல் நகைவிளைப்ப தொன்ருயிருக்கும். கடவுள் இப்போது வந்து குற்ற மற்ற தன்னைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையுடன் மார்னர் கடவுளைத் தொழுதான். அப்போதும் இவ்வாறு அவமானப்பட நேர்ந்ததே என்ற எண்ணம் அவன் மனத்தைவாட்டியது. ஆனால்குலுக்குச்சீட்டும் அவனைக் குற்றவாளியென்றே கூறியது. அதனால் அவன் முறைப்படி கோவில் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டான். திருடிய பணத்தைக் கொண்டுவந்து கொடுத்துவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டான். குற்றத்திற்காக வருந்தி அதை ஒப்புக்கொண்டால்தான் மீண்டும் கோவிலமைப்பில் அவன் இடம்பெற முடியும் என்று கூறினர். இவற்றையெல்லாம் மார்னர் அமைதியாக நின்று கேட்டுக்கொண்டிருந்தான். கடைசியில் எல்லாரும் புறப்பட்டுப்போகும் சமயத்தில் வில்லியத்தின் அருகேசென்று தழுதழுத்த குரலில், "உனக்காக ஒரு தோல்பெட்டிக்கு வேண்டிய துண்டுத்தோலை நறுக்கித் தருவதற்காக என்கத்தியை வெளியே எடுத்தேன். அதை மீண்டும் என் சட்டைப்பையில் வைத்துக்கொண்டதாக நினைவில்லை. நீதான் பணத்தைத் திருடியிருக்கிருய். திருடிவிட்டு என்மீது பழியைச் சுமத்தக் கதை கற்பித்து விட்டிருக்கிருய். இதனால் நீ மகிழ்ச்சியடையலாம். நீதிமுறையாக உலகையாளும் நேர்மைக் கடவுள் இன்றில்லை, குற்றமற்றவனுக்கு எதிராக நிற்கும் பொய்ம்மைக் கடவுள்தான் இருக்கிருர்" என்ருன்.

இதைக் கேட்டதும் எல்லாரும் வியந்து நின்றனர். வில்லியம் தாழ்ந்த குரலில் மற்றவர்களைப் பார்த்து,



"இது சாத்தானின் குரலா அல்லவா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை உங்களிடமே விட்டுவிடுகிறேன். மார்னர், உனக்காக இறைவனை வேண்டுவதைத் தவிர வேறு ஒன்றும் நான் செய்வதற்கில்லை" என்ருன்.

பாவம் மார்னர் இதயத்தில் வேதனையுடன் வெளியேறவேண்டியிருந்தது. கடவுளிடத்தும் மனிதரிடத்தும் நம்பிக்கை யிழந்தவனுய் அரைப்பைத்தியம் பிடித்தவன்போல் ஆனுன். புண்பட்ட துன்ப உள்ளத்தைப் பெற்றிருந்த அவன் 'அவளும் என்னைக் கைவிட்டு விடுவாள்' என்று தனக்குள் எண்ணினுன். தன்மேல் சுமத்தப்பட்ட கொடும்பழியை நம்புவதாயின் அவளுடைய நம்பிக்கையெல்லாம் குலைந்து நிலையற்றுப் போகும் என்றும் கருதினுன்.

மார்னரைப்போல் குற்றம் சாட்டப்பட்ட எவரும் தெய்வத் தீர்ப்புக்காகச் சீட்டுக் குலுக்கிப் பார்ப்பதைச் சரியானமுறை என்று ஒப்புக்கொண்டிருக்கமாட்டார். ஆனல் அப்போது மார்னரிடம் இதுவரை அவன் எய்தியிராத புது எண்ணம் கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற உறுதி அவனிடம் ஏற்பட்டிருந்தது. மனிதரிடத்து நம்பிக்கை குலைந்து போய் நின்ற அவன் கடைசியில் கடவுளே தன்னைக் காப்பாற்ற முடியும் என்று நினைத்துக் கொண்டிருந்தான். கடைசியில் கடவுளும் கைவிரித்து விட்டார். மனிதருடைய துன்பங்களையும் பாவங்களையும், எழுதிக் கணக்கு வைத்துக் கொள்ளும் தேவன் ஒருவன் மேலுலகில் இருப்பின், குற்றமற்றவர் ஒன்றும் செய்யாத பாவத்திற்காக எய்துகின்ற அல்லல்களை எல்லாம் நன்கு அறிந்துவைத்திருப்பான்.

மார்னர் வீடு சென்றான். ஒருநாள் முழுதும் தனியே உட்கார்ந்திருந்தான். கவலையால் உள்ளம் நைந்திருந்தான். இந்நிலையில் தனது குற்றமற்ற தன்மையை எடுத்துக்கூறிச் சாராவின் நம்பிக்கையை மீட்டும் பெறலாம் என்ற விருப்பம் அவனிடம் எழவில்லை. இரண்டாம் நாள் மரத்துப்போன அவநம்பிக்கையினின்று விடுதலை பெற்றான். தறியில் அமர்ந்து வழக்கம் போல் நெய்தல் தொழிலைத் தொடங்கினான். சில மணி நேரத்திற்குள், சாராவிடமிருந்து வந்த ஒரு மதகுரு அவள் மார்னரின் அன்பிலிருந்து விடை பெற்றுக் கொண்டுவிட்டதைத் தெரிவித்தார். அவர் கூறியதைக் கேட்ட மார்னரின் முகத்தில் உணர்ச்சி ஒன்றும் தோன்றவில்லை. வந்தவரை அனுப்பிவிட்டு மீண்டும் போய்த் தறியில் அமர்ந்தான்.

ஒரு மாதங்கழித்துச் சாரா வில்லியத்தைத் திருமணம் செய்து கொண்டாள். அதற்குப்பிறகு சில நாட்களிலேயே மார்னர் அவ்வூரைவிட்டே போய்விட்டான் என்பதை ஊரிலுள்ளார் அறிந்துகொண்டனர்.

---

## 2. ஓய்வில்லாத உழைப்பு

கல்வியால் பல்திற வாழ்க்கையுண்மைகளை உணர்ந்தவரும் சிலசமயங்களில் தாங்கள் வழக்கமாகக் கொண்டிருக்கும் வாழ்க்கைநெறிகளை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும். புதிய ஒரு நாட்டில் குடியேறிய பிறகு எவருக்கும் பழைய இன்பங்களும் துன்பங்களும் இன்னும் உண்மையானவையாக இருப்பதில்லை. புதிய இடத்தில் சூழஇருப்பவர்கள் குடியேறியவரின் பழங்கதையைப்பற்றி ஒன்றும் அறிந்து கொள்ள முடியாது; குடியேறியவரின் கருத்துக்களிலும் பங்குகொள்ள முற்படுவதில்லை. குடிபெயர்வோருக்கு அன்னை நிலம் புதிய மடியேந்தி நிற்கிறது. புதிய இடத்தில் மனித வாழ்க்கை புதிய உருவங்களைப் பெற்றுக் காட்சியளிக்கிறது. பழைய நம்பிக்கை, அன்பு இவற்றிலிருந்து பிரிந்து வந்த மனம் கடந்தகால நிகழ்ச்சிகள் எல்லாம் பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போகும்படி அவற்றை மறந்துவிடுகிறது. பழமையின் குறிகள் எல்லாம் மறைந்துவிடுகின்றன. பழமையோடு தொடர்பில்லாத புதிய வாழ்வு புதுச்சுவையைத் தருகிறது. இவற்றால் தன் நாட்டையும், தன்னூர் மக்களையும் விட்டுவிட்டு, 'ராவிலோ' ஊரில் குடிபுகுந்த எளிய நெசவாளி மார்னரின் நிலை எப்படியிருக்கும் என்பதை எவரும் ஊகித்துக் கொள்ளலாம்.

மார்னரின் புதிய மனை, மலைகளால் சூழப்பட்டிருந்த பழைய சொந்தஊரில் உள்ள வீட்டிற்கு இணையாகாது. இங்கே காட்டுப்பகுதியின் தாழ்ந்த இடத்தில் அவன் வாழநேர்ந்தது. மரங்களும் வேலிகளும் அவன் வீட்டைத் திரையிட்டு மறைத்தன. பல உரிமைக

ளுடன் உயர்நிலையில் வாழ்ந்துவந்த லாண்டர்ன் யார்டு வாழ்க்கைக்கும், இங்கே பனிமலிகிய புதர்களூடே தனித்துவாழும் வாழ்க்கைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

அங்கே இருந்தது வெண்சாந்து பூசிய நல்ல இல்லம். பெரியமனிதர்கள் அமைதியாக வந்து அமர்ந்திருப்பதற்கு ஏற்ற வகையில் விரிக்கப்பட்டிருந்த இருக்கைகள், எவரும் மறுத்துக் கூறத்துணியாவாறு சமயச் சொற்பொழிவுகள் செய்தற்குரிய இடம், கோவிலில் இறைவன்புகழ்பாடி இசைக்கும் பாட்டுக்கள், எல்லாரும் ஒன்ருகச் சேர்ந்துபாடும் இன்னிசை இவையெல்லாம் மார்னருக்குத் தெய்வீக வெறியூட்டி வந்தன; அவனிடத்தில் அவை சமய உணர்ச்சிகளை வளர்த்து வந்தன. அவையே அவனுக்குக் கிறித்துவ சமயமாயும், மண்ணுலகத்தில் நிலவும் கடவுளின் அரசாட்சியாகவும் இருந்தன. இங்கே எளிய ஒரு நெசவாளியாக வாழவேண்டியிருந்தது. பழைய இன்னிசைநூலை ஒரோவழி எடுத்துப்பாடத் தொடங்கினல் பாட்டில் காணும் கடின சொற்கள் மேலே பாடுவதற்குத்தடை செய்தன. அன்னையின் மடியையும், அப்பாவின் முகத்தையும் மட்டும் அறிந்து அவர்களின் அன்பை உணராத குழந்தையைப் போல் அவன் வாழ்ந்து வந்தான்.

லாண்டர்ன் யார்டுக்கும் ராவிலோவுக்கும் எத்துணை வேறுபாடுகள்! ராவிலோவில் கவனிப்பாரற்று முரட்டுத்தனமாய் வளர்ந்திருக்கும் சோலைமரங்கள் சோம்பல்கூர்ந்து நின்றிருந்தன. பெரிய இடுகாடும் பெரிய மாதாகோவிலும் இருந்தன. பலரும் தங்கள் வீடுகளில் படுத்துக் கொண்டே பார்க்கும்படி அக்கோவில் அமைந்திருந்தது. குடியானவர்கள் அவ்வூர்ச் சந்துகள் வழியே நடமாடிக் கொண்டிருப்பர். சில சமயங்களில் 'வானவில்' என்ற இடத்தில் கூடிப் பேசுவர். அவர்கள் வீட்டு முன்றில்களில் மரங்கள் மல்கியிருந்தன. அவர்கள் வீட்டில் வயிறுபுடைக்க உண்பர். இரவில் இதந்தரும் தீயடுப்பருகே படுத்து உறங்குவர். மறுஉலக வாழ்க்கைக்கும் போதுமான அளவு லினன் துணிகளை மகளிர் அடுக்கிவைத்திருந்தனர். மார்னரின் உறைந்துபோன துன்பங்களை நினைவூட்டும் சொற்களோ, மார்னரின் பழைய வாழ்க்கையைப் பற்றிய வினக்களோ அவ்வூரில் வாழ்ந்த எவர் வாயினின்றும் வரவில்லை.



இவ்வூரில் வாழும் மக்கள் கடவுள் நம்பிக்கையைப் பற்றிப் பெரிதும் கவலைப்படாதவராகச் சுகவாழ்வில் ஈடுபட்டிருந்தனர். மார்னரின் உள்ளத்தில் ஒளிவிட்டுக் கொண்டிருந்த கடவுள்நம்பிக்கை என்னும் விளக்கு இப்போது மெல்லிய கதிர்களையே வீசுவதாய் அவனுள்ளத்தில் இருளின் கறுப்பைத் தோற்றுவித்தது.

தன் வாழ்க்கைப் பேரிடிக்குப்பின் அவன் மேற்கொண்ட முதல் செயல் தறிநெசவுதான். இவ்வேலையிலேயே அவன் இடைவிடாது ஈடுபட்டுக்கொண்டிருந்தான். ஏன் இந்த ராவிலோ ஊரைத் தேர்ந்தெடுத்தோம் என்ற கேள்வியைக்கூட மனத்தில் எழுப்பிக் கொள்ளாதவனாய் வாழ்ந்தான். தனக்கு எவ்வளவு பணம் கிடைக்கும் என்பதைப்பற்றிச் சிறிதும் எண்ணுதவனாய்த் திருமதி ஆஸ்காட் நெய்துதரச் சொல்லிய லினன் துணியை நெய்வதிலேயே கருத்தாயிருந்தான்.

சிந்தனை ஏதுமின்றி வெறும் உள்ளூக்கத்தால் வேலை செய்யும் சிலந்திப்பூச்சிபோல நெய்துவந்தான். இவ்வாறு ஒரே சீராக ஒரு வேலையில் ஈடுபட்டிருப்பார்க்கு அவ்வேலையே வாழ்க்கையின் குறிக்கோளாக மாறிவிடுகிறது; வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை மாற்றுவதற்கும் பயன்படுகிறது. மார்னரின் கை தறியில் நாடாவை எறிவதிலேயே மனநிறைவு கொண்டது. அவன் கண் மறிப்புநெசவினால் விழும் கட்டங்களைக் காண்பதிலேயே மனநிறைவுகொண்டது.

மார்னர் தனித்துவாழ்ந்துவந்ததால் தானே காலையுணவு, பகலுணவு, இரவுணவு எல்லாவற்றையும் தயார் செய்து கொண்டான். கிணற்றிலிருந்து தண்ணீரும் அவனே எடுத்துக்கொண்டான். இவ்வாறான செயல்கள் எல்லாம், பூச்சியைப்போல் செயல்புரியும் இயல்பை அவனுக்களித்தன. அவன் பழமையின் எண்ணத்தை அறவே வெறுத்தான். இப்போது அவனைச் சூழ்ந்து வாழும் புதியவர்களிடையே அன்பும் நட்புரிமையும் கொள்ளுவதற்கும் இயலாதவனாய் இருந்தான் அவன் எதிர்காலம் இருட்டாகவே இருந்தது. ஏனெனில் அவனைப்பற்றிக் கவலைப்படுவதற்குக் கண்ணுக்குப் புலனாகாத தேவதை எதுவுமில்லை. புதிய எண்ணங்கள் எழும் குறுகிய வழியும் இப்போது அவனுள்ளத்தில் மூடப்பட்டுவிட்டது. அதனால் அவனுள்ளத்தில் அன்பு என்பதே இல்லாமல் மறைந்தொழிந்தது.

ஆஸ்காட் அம்மையாரின் லினன்துணிநெசவு முடிந்தது. மார்னருக்கு ஒரு பொன்காசு கொடுக்கப்பட்டது. இப்போது மார்னர் தனக்குக் கிடைக்கும்



பணத்திலிருந்து சிறிது சிறிதாகவே பணம் சேர்க்க முடிந்தது. முன்பெல்லாம் பெரும்பாலும் அவனுக்கு வாரம் ஒருமுறையே கூலிகிடைத்து வந்தது அதன் பெரும்பகுதியை இறைவழிபாடு, அறச்செயல்கள் முதலியவற்றிற்காகச் செலவிட்டான். இப்போது அவன் வாழ்க்கையிலேயே முதன் முதலாக ஐந்து ஒளிவீசும் பொற்காசுகள், கைக்குச் சேர்ந்துள்ளன. அவன் பெற்ற பணத்தை இப்போது பகிர்ந்துகொள்ளக்கூடியவரென்று யாருமில்லை. அவனும் எவருக்கும் பகிர்ந்து கொடுக்க விரும்பவில்லை. ஆனால் நெசவுத்தொழிலையே வாழ்நாள் வேலையாகக் கொண்ட அவனுக்கு இவை என்ன பயனைச் செய்யும்? இக்கேள்வி அவனுள்ளத்தில் எழவேயில்லை. ஏனெனில் அவன் அந்நாணயங்களைக் கையால்தீண்டி இன்புற்றான். அவற்றைத் தன் உள்ளங்கையில் வைத்துக் கண்ணால் கண்டு மனமகிழ்ந்தான். அவை இனித் தனக்கே சொந்தமானவை என்று எண்ணிப்பூரித்தான். அப்பூரிப்பு நெசவையும், பசியாறுதலையும் போன்ற ஓர் இன்றியமையாத அன்றாட வாழ்க்கைக் கூறாகவே அவனுக்கு அமைந்துவிட்டது. வாழ்க்கையில் நம்பிக்கையையும், அன்பையும் இழந்துவிட்ட அவன் இப்போதுஅவற்றைத் தன் பணத்தின் மேல் வைத்தான்.

இளமைக்காலத்தில் அவன் உள்ளங்கை பெரிதாக வளருமுன்பே கடின உழைப்புச் செய்து பெற்ற பணத்தைக் கையால் தீண்டியிருந்தான். மார்னருக்குக் கடந்த இருபதாண்டு வாழ்க்கையில் உலக நன்மையின் அடையாளமாகவும், உழைப்பின் உடனடிப் பயனாகவும் மாயமான இப்பணமே இருந்தது. முன்பு ஒவ்வொரு காசும் அவனுக்குப் பயனுடையதாக இருக்கும்

போது பணத்தை நிறைய ஈட்டிச்சேர்த்து வைக்க அவன் விரும்பவில்லை. ஆனல் இப்போது, பணத்தின் பயன் எதுவும் அவனுக்கு இல்லாதபோது, பணத்தைக் கையில் ஏந்தி அதைப் பார்த்துப் பார்த்து, தன் உழைப்பின் பயனல் கிடைத்தது என்று எண்ணி எண்ணி மகிழ்ந்து வந்தான். நாடோறும் அந்தி சாயும் வேளையில் வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டு உலாவிவரச் செல்லுமுன், சேர்த்துவைத்த பணத்தை எல்லாம் பெட்டியைத் திறந்து கையில் எடுத்துப்பார்த்து, அது சூழ்ந்துவரும் இரவில் சுடர்விட்டு ஒளிர்வதைக் கண்டு களிப்புறுவான்.

இந்தச்சமயத்தில் அவன் தன்னைச் சூழ்ந்திருப்போரிடம் சிறிது தொடர்புகொள்ளும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. ஒருநாள், ஒரு செம்மானின் மனைவி தைப்பதற்காக இரு செருப்புக்களைக் கையில் ஏந்தியவளாய் இதய நோயாலும், உடல் வீக்கத்தாலும் துன்புற்றுக் கொண்டிருப்பதை அவன் வழியில் கண்டான். தன் அன்னை இறப்பதற்கு முன்பே அவன் அப்படிப்பட்ட நோயாளிகளைக் கண்டிருக்கிருன். அந்நினைவால் அந் நோயாளியைப் பார்த்ததும் அவனுக்கு இரக்கம் மீக்கூர்ந்தது.

ஒரு மூலிகைச் செடியிலிருந்து எளியமுறையில் தயாரிக்கப்பட்ட மருந்தானது தன் அன்னைக்கு அந் நோயிலிருந்து சிறிது விடுதலையளித்ததை நினைவுகூர்ந்த மார்னர், சாலி ஓட்சு என்னும் பெயருடைய அந் நோயாளியின் கணவனிடம், பிற மருத்துவரால் அவளுக்குக் குணம் ஏற்படவில்லையாயினும், தன்னல் அவளுக்குக் குணம் உண்டாகச் செய்யமுடியும் என்று உறுதி கூறினன். இந்த அறச்செயல்மூலமாக, ராவிலோவுக்கு வந்தபிறகு முதன் முதலாக அவனது பழைய வாழ்க்கைக்கும் புதிய வாழ்க்கைக்கும் ஒரு பிணைப்பு உண்டாயிற்று எனலாம். ஒரு பூச்சியைப் போல வாழ்ந்துவந்த அவன் வாழ்க்கையில் இது ஒரு திருப்பு மையத்தை உண்டாக்கிவிட்டது. சாலி ஓட்சின் நோய் அவ்வூரிலுள்ள பலருடைய கவனத்தையும், இரக்கத்தையும் ஈர்த்திருந்தது. மார்னர் கொடுத்த மருந்தை உட்கொண்டதும் அவளுக்குச் சிறிது குணமுண்டாயிற்று. இதைக் கேள்விப்பட்ட எல்லோரும் மார்னரைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். டாக்டர் கிம்பில் மருந்து கொடுத்துவந்தபோது அதனல் பயன் ஏற்பட்டிருந்தால் அதில் வியப்பதற்கு ஒன்றுமிருந்திருக்காது. ஆனல் எங்கிருந்து வந்தவன் என்றுகூட எவரும் அறியாத ஓர் ஏழை நெசவாளி ஒரு மருந்து கொடுத்து வியப்பை ஏற்படுத்தியது அவனிடமிருந்த ஆன்மீக சத்தியின் விளைவே என்று எல்லோரும் கருதினர்.



மார்னர் வருவதற்கு முன் ராவிலோவில் வாழ்ந்த 'அறிவுக்காரி' இறந்தபிறகு, இதுபோன்ற நிகழ்ச்சி நடக்கவேயில்லை. இந்த அறிவுக்காரி மந்திரமும் மருந்துகளும் வைத்திருந்தாள். அவ்வூரில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் குழந்தைகளுக்கு வலிப்பு முதலிய எந்த நோய் வந்தாலும் அவளையே நாடினர். மார்னரும் அவளைப்போன்ற சக்திவாய்ந்தவனயிருக்க வேண்டும்; இல்லாவிடில் சாலி ஓட்சின் உயிரை அவன் எப்படிக் காப்பாற்றியிருக்க முடியும் என்று ஊரினர் எண்ணினர். அந்த அறிவுக்காரி சில மந்திரங்களைப் பிறர் காதில் கேட்காதவாறு உதட்டிலேயே முணு முணுப்

பாள். குழந்தையின் கையில் கறுப்புக்கயிறு ஒன்றைக் கட்டியதும் அதன் உடம்பிலிருக்கும் வீக்கம் உடனே குறைந்துவிடும். இப்போதும் சில பெண்கள் ராவிலோ நகர்த்தில் அறிவுக்காரி கொடுத்த சிறு தாயத்துக்களைக் கழுத்தில் அணிந்து கொண்டிருந்தனர். இப்போது அவனைக்காட்டிலும் சிறப்பு மிக்கவனுகச் சைலசுமார்னர் காணப்பட்டான். எங்கிருந்தோ வந்த அவனைப்பற்றி இப்போதுதான் எல்லோரும் அறியத் தலைப்பட்டனர். ஆனால் சாலி ஓட்சு மட்டும் மருத்துவரிடம் இதைப் பற்றிச் சொல்லிவிடக்கூடாது. ஏனெனில் அவர் மார்னருக்கு எதிராகக் கிளம்பிவிடுவார். அவர் அறிவுக்காரி மீது எப்போதும் கோபமாகவே இருந்தார். அவளிடம் தாயத்துப் பெற்றவர்களிடம் இனிமேல் தம்மிடம் வரக்கூடாது என்று அச்சுறுத்தி வந்தார்.

இப்போது திடீரென மார்னர் வீட்டில் தாய்மார்கள் பலர் தங்கள் குழந்தைகளுடன் குழுமிவிட்டனர். குழந்தைகளின் கக்குவான் இருமலைப் பாடம்போட்டோ, மந்திரம் ஓதியோ தீர்க்கவேண்டுமென்று வேண்டினர். ஆண்கள் பலர் தங்கள் கைகால் வலிப்புக்களைத் தீர்க்க வேண்டுமென்று வேண்டினர். மார்னர் தங்கள் வேண்டுகோள்களை மறுத்து விடக்கூடாதே என்று கையில் வெள்ளிக்காசுகள் கொண்டுவந்தனர். மார்னர் விரும்பியிருந்தால் மந்திரத்தாலும் மருந்திஞலும் பணம் குவித்திருக்க முடியும். ஆனால் இந்த நிலைமையில் அவனுக்குப் பணத்தின் மேல் குறி இல்லை. அவனால் குணப்படுத்தமுடியாத நோய் எதுவுமில்லை. அவன் புகழ் நெடுந்தூர மாநிலங்களுக்கும் பரவியது. தூரத்தைப் பொருட்படுத்தாது அவனுதவியைப் பெற மக்கள் திரள் திரளாக வந்து கொண்டிருந்தனர். ஆனால்



கடைசியாக அவன் அறிவின்மேற் கொண்டிருந்த மக்கள் நம்பிக்கை பயமாக மாறிவிட்டது. ஏனெனில் அவன் தனக்கு மாயமோ, மந்திரமோ ஒன்றும் உண்மையில் தெரியாது என்று கூறிவந்தான். தன்னால் எந்நோயும் குணப்படுவதில்லை என்றும் கூறினான். இவனிடம் மருந்து வாங்கிச் சென்ற சிலருக்குத் தற்செயலாகப் புதியதொரு நோயோ வலியோ ஏற்பட்டதனால், அவர்கள் மார்னரின் நோக்கம் தவறானது என்றும், நல்லெண்ணத்தின்பாற்பட்டதன்று என்றும் எல்லாரிடத்திலும் பரப்பத் தலைப்பட்டுவிட்டனர். இவ்வாறு சாலி ஓட்சின்மேல் அவன்கொண்ட இரக்கமானது முதலில் மக்களிடையே தோழமை மனப்பான்மையைத் தோற்றுவித்துப் பின் விரைவிலேயே அவ்வூரினர் அவனை வெறுக்கும்படி செய்து, அவனை முன்னைக் காட்டிலும் முற்றிலும் தனியனாக வாழும்படி செய்து விட்டது.

தறியில் வரும் வருமானத்திலிருந்தே படிப்படியாக அவனிடம் தங்கம் வெள்ளி நாணயங்கள் குவிந்து விட்டன. நாடோறும் பதினறு மணிநேரம் உழைப்பதற்குத் தேவையான சக்திக்கு வேண்டிய மிகக் குறைந்த அளவு பணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு பிற தேவைகளைச் சுருக்கிக் கொண்டான். சிலசமயம் தனியறையில் வாழ்பவர்கள் சுவரில் தினமும் கோடு கோடாகக் கிழித்துக்கொண்டு வந்து பின்னர் அவற்றைச் சேர்த்துப் பார்க்க அவை வெவ்வேறு உருவங்களாய் அமைந்து விடுவதைக் கண்டு அவர்கள் மனம் மகிழ்வதில்லையா? அதுபோலவே பணத்தைச் சேர்க்க வேண்டும் என்ற விருப்பம் மார்னரிடம் வளர்ந்து வந்தது. சேர்க்கவேண்டும் என்பதற்காகவே பணத்

தைச் சேர்க்கும் பேராசை அவனிடம் வளர்ந்தது. பத்து நூறாகவும், நூறு ஆயிரமாகவும் வளரவேண்டும் என்று ஆசைப்பட்டுப் பணத்தைச் சேர்த்துவந்தான். ஒவ்வொரு புதுக்காசு சேரும்பொழுதும் அவன் மகிழ்ச்சியும் புதிய ஆசைகொண்டுவிடும். தனக்கு நம்பிக்கையூட்டாத விந்தையுலகத்தில் அவன் தறியில் வளரும் துணியையும், துணியில் ஏற்படும் உருவங்களையும்



மார்னர் பொற்காசுகளைக் கையால் தீண்டி இன்புறல்

மட்டும் பார்த்துக் கொண்டே வாழ்க்கைப் புதிரைப் பற்றி எண்ணாதவனாய், நெசவிலேயே கருத்தைச் செலுத்திக் கொண்டு இருந்திருக்க முடியும். ஆனால் பணம் அவனுடைய நெசவுக்கு எல்லைக்கோடிட்டுக் காட்டியது. பணம் வளர்ந்து வந்தது; வளர்ந்துவந்த பணம் எல்லாம் அவனிடத்திலேயே தங்கியிருந்தது.



தறியைப் போலவே தான் சேர்த்த பணங்களும் தன்னிடம் உறவுகொண்டு பழகிவிட்டனவென்று நினைத்தான். அதனால் அவற்றை அறிமுகமில்லாதவரிடம் எக்காரணத்திற்காகவும் கொடுத்துவைத்திருக்க விரும்பவில்லை. சேர்ந்த நாணயங்களையெல்லாம் எடுத்துப் பார்த்துச் சுண்டிப்பார்த்தான்; எண்ணிக் கணக்கிட்டான்; தன் ஆசைதீரும்வரை அவற்றின் உருவத்தையும் நிறத்தையும் பாராட்டி மகிழ்ந்தான். ஆனால் இவற்றையெல்லாம் அவன் இரவுநேரத்தில்தான் செய்துவந்தான். தன் தறிவேலை முடிந்தபிறகு இரவில் தன் பணப்பெட்டியைத் திறந்து பணத்தோடு தோழமைகொண்டு மகிழ்ந்துவந்தான். தன் தறிக்குக் கீழேயே நிலத்தில் சில செங்கற்களை அகற்றிவிட்டுச் சிறு துளைசெய்து, தங்க, வெள்ளிப் பணங்களைக் கொண்ட ஓர் இரும்புப்பானையை அங்கே வைத்திருந்தான். பணத்தைப் பார்த்துவிட்டுப் பானையைத் திரும்ப வைக்கும் போது செங்கற்களை வைத்து அவற்றின் மேல் மணலைப் போட்டு மூடிவிடுவான். ஊரில் திருட்டுப் பயம் இருந்தது என்று சொல்லமுடியாது. அக்காலத்தில் சேர்த்துவைத்தல் என்பது நாட்டுப்புறங்களில் பொதுவானதொரு வழக்கமாகவே இருந்தது. ராவிலோவில் வேறுசிலர் தங்கள் பணத்தைப் படுக்கைப்பாயின் அடியிலேயே வைத்துக்கொண்டனர். அக்காலத்துச் சிற்றூரினர் திருட்டைப்பற்றிக் கற்பனை செய்ததுகூட இல்லை. யாரேனும் திருடினால், அவ்வூரில் அவர்கள் தங்களைக் காட்டிக் கொடுத்துவிடாமல் செலவிட முடியாது. எனவே திருடுவது என்றால் ஊரைவிட்டு ஓடுவது என்றுதான் அக் காலத்தில் பொருள்பட்டது. அக்காலத்தில் ஓர் ஊரைவிட்டு வேறு

ஊருக்குச் சென்றுவாழ்தல் துன்பம் நிறைந்ததாகவே இருந்தது.

ஆண்டுகள் கழிந்துகொண்டிருந்தன. மார்னர் தனிமையாகவே வாழ்ந்துவந்தான். அவனுடைய தங்க நாணயங்கள் இரும்புப் பெட்டியில் வளர்ந்து வந்தன. வெறும் பண ஆசையும், பணத்தைப் பார்த்து மகிழும் ஆசையும் தவிர வேறொன்றும் இல்லாத அவனது குறுகியமனம் உலகில் வேறெந்த உயிரோடும் தொடர்பு கொண்டிருக்க விரும்பவில்லை. அவன் வாழ்க்கை நெசவு செய்தலிலும் பணம் குவிப்பதிலுமே கழிந்து வந்தது. பணத்தால் எய்தும் பயன்களைப்பற்றிய எண்ணமே அவனுள்ளத்தில் எழவில்லை. நம்பிக்கை, அன்பு இவற்றை இழந்துவிட்ட சிலருக்கு இப்படிப்பட்ட வாழ்க்கை அமைந்து விடுவதுண்டு. மார்னரைப் போலத் தறியும், பணக்குவியலும் இல்லாவிடில் அவர்கள் ஏதாவதொரு சீரிய ஆராய்ச்சி, புதிய செயற்பாடு அல்லது ஏதாவதொரு நல்ல கொள்கையில் ஈடுபட்டு வாழ்வார்கள்.

நாளடைவில் மார்னரின் உருவமும் முகமும் சுருங்கிவந்தன. அவன் பிற வாழ்க்கைப் பொருள்களோடு தொடர்புகொள்ளாமல் தறியோடேயே இடையறாத தொடர்பு கொண்டிருந்தான். அதனால் அவனுக்கு மாறாத எந்திரம்போன்ற உடல் உருவமே அமைந்துவிட்டது நம்பிக்கையுடன் எதிர்காலக் கனவு கண்டு கொண்டிருந்த அவன் தடங்கண்கள் இப்போது தானியத்தைப்போலச் சிறுத்து, ஏதோ ஒரு பொருளையே பார்ப்பதற்குரியவை போன்று அதையே எங்கும் தேடிக் கொண்டிருந்தன. நாற்பது வயது நிரம்பாதவனாயினும், அவன் உடல் மெலிந்து மஞ்சள் நிறம் அடைந்து விட்டது ஊர்க்குழந்தைகள் அவனை மார்னர் தாத்தா என்று அழைக்கத் தொடங்கிவிட்டன.



நைந்துபோன இந்த நிலைமையிலும், அவனுடைய உள்ளத்தில் அன்புத்துளி முற்றிலும் அழிந்துவிடவில்லை என்பதைக் காட்டும் ஒரு சிறு நிகழ்ச்சி நடந்தது. அவன் நாள்தோறும் இரண்டு காடு தூரமுள்ள ஒரு கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவருவது வழக்கம். இதற்காக ராவிலோ வந்த நாளிலிருந்து ஒரு கறுப்பு மண்குடம் வாங்கி வைத்திருந்தான். அவன் தனக்கென வைத்துக் கொண்ட மிகச்சில தேவைகளுள் மிகச்சிறந்த மதிப்புள்ளதாக அக் குடத்தைப் போற்றி வந்தான். பன்னிரண்டு ஆண்டுகளாக அக் குடம் அவனுடைய நண்பனாக இருந்துவந்திருக்கிறது. அது எப்போதும் ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே வைக்கப்பட்டு வந்தது. நாள்தோறும் அதிகாலையில் தன் கைப்பிடியை அவனுக்கு நீட்டி வரவேற்கும் முறையில் வைக்கப்பட்டிருந்தது. அக் குடத்தில் புதிய தெள்ளிய நீரைக் கொண்டு வரும்போது அதைப் பற்றிக்கொண்டு வந்த தன் உள்ளங்கையில் குடத்தின்வடு படிந்திருந்தது அவனுக்கு ஒருவித மகிழ்ச்சியைத் தந்தது. ஒருநாள் அவன் கிணற்றிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கும்பொழுது வழியில் கிடந்த ஓர் ஓட்டினால் தடுக்கப்பட, அவன் கையிலிருந்த குடம் கீழே கிடந்த கல்லின் மீது வேகமாக மோதி மூன்றாக உடைந்து விட்டது. மார்னர் உடைந்துபோன பகுதிகளையெல்லாம் பொறுக்கிக் கொண்டு துயரம் சார்ந்த நெஞ்சினனாய் வீடு திரும்பினான். இனிமேல் அக் கருங்குடம் அவனுக்குப் பயன்படப் போவதில்லை. ஆனால் உடைந்த துண்டுகளையெல்லாம் சேர்த்து ஒட்ட

வைத்துக் குச்சிகளை முட்டக் கொடுத்து அதை நினைவுச் சின்னமாகப் பாதுகாத்து வந்தான்.

இதுதான் மார்னர் ராவிலோவுக்கு வந்து பதினைந் தாண்டுகள் வரை நிகழ்ந்த வரலாறு ஆகும். நாள் முழுதும் அவன் தறியிலேயே உட்கார்ந்திருப்பான். அதன் ஒலியே அவன் காதுகளில் நிரம்பியிருந்தது. அவன் கண்கள் நீலநிற ஆடையின் மீது குனிந்து குனிந்து பார்த்துப் பழக்கப்பட்டிருந்தன. மூச்சு விடுவதைப்போலவே ஒரே சீராக இயங்கிவந்த அவன் உடல்தசைகளின் அசைவைச் சிறிதுநேரம் நிறுத்தி வைப்பது என்பது மூச்சையே நிறுத்திவைப்பது போலத்தான். அவனுக்கு இன்பம் தருவது இரவே. இரவில் தாழ்ப்பாளைப் போட்டுக் கதவை இறுகமூடி விட்டுத் தன் பொன்காசுகளை வெளியே எடுப்பான். நீண்ட காலத்திற்கு முன்பே இரும்புப்பானையின் கொள்ளளவுக்கு மிகுதியாகக் காசுகள் சேர்ந்துவிட்டன. அதனால் அவற்றிற்காக மேலும் இரண்டு பெரிய தோல் பைகளைச் செய்தான். அவை எவ்வளவு கொள்ளுமோ அவ்வளவு காசுகளைப்போட்டுத் திணித்து வைத்தான். கரிய தோல்பையின் வாயிலிருந்து வெளிவந்த அந்தத் தங்கக் காசுகள் எவ்வளவு ஒளியாகச் சுடர்விட்டன! வெள்ளிக் காசுகள் தங்கத்தைப்போல அவ்வளவு மிகுதியாக இல்லை ஏனெனில் அவன் நெய்து விற்கும் லினன் துணிகளுக்குப் பெரும்பாலும் பொன்காசுகளாகவே கூலி கொடுக்கப்பட்டது. தன் தேவைகளுக்காகச் செலவுசெய்வதற்கு அவன் வெள்ளிக் காசுகளையே பயன்படுத்தி வந்தான்.

பொன்னைப் போற்றியது போலவே அவன் வெள்ளியையும் போற்றினன். ஏனெனில் அவையும் அவன் உழைப்பால் கிடைத்தவையே. எல்லாவற்றையும் அவன் பரிவுடன் பாதுகாத்தான். அவற்றைக் குவியலாகக் குவித்துவைத்து அதில் தன் கையை வைத்துக் குளிப்பாட்டுவான்! பிறகு அவற்றை எண்ணிப் பார்ப்பான்; வரிசை வரிசையாக வைத்து அடுக்கிப் பார்ப்பான்; ஒவ்வொன்ருய் எடுத்து அதைத் தன் கட்டைவிரலுக்கும் மற்ற விரல்களுக்குமிடையே வைத்து அதன் வட்டத்தைக் கையாலுணர்ந்து இன்புறுவான். கருவில் உருவாகிநின்று பிறக்காத குழந்தைகளைப் போலவே பொன்நாணயங்களைப் பெரிதும் விருப்புடன் நோக்கினன். ஆண்டாண்டாகச் சிறிது சிறிதாகச் சேர்க்கப்பட்ட பொன்னைப்பற்றி நினைக்கும் போது தன் மனக்கண்முன் விரிந்து கிடந்த கடந்தகாலத்தையும் பார்த்தான். அதன் மறு கோடி, எண்ணில்லாத நாட்கள் நெசவுத் தொழில் செய்துவந்தமையால் முனை மழுங்கிய வையா யிருந்தது. அவன் எண்ணங்கள் எல்லாம்இன்னும் தறியிலும் பணத்திலுமே இருந்தன. இஃது ஒரு வியப்பன்று. முன்புபோல அவன் இப்போது மருந்து மூலிகைகளைக் கொண்டு வருவதற்காக ஏரிப் பக்கமோ, வயல்பக்கமோ நடந்து செல்வதில்லை. அப்படிச் சென்றதெல்லாம் பழங் கதையாகிவிட்டது. அதிலிருந்து அவன் வாழ்க்கை சுருங்கிவிட்டது. ஆடி மாதத்தில் அகன்ற காவிரியாய்க் கரையை மோதித்தள்ளும் ஆறு கோடைகாலத்தில் வற்றிச் சிறு ஓடையாய் மணலை ஊடறுத்து ஓடுவது போலவே அவன் வாழ்க்கையும் அமைந்திருந்தது. அந்தப் பதினைந்தாம் ஆண்டுக் கிறித்துமசுப் பண்டிகையின் போது இரண்டாவது பெரிய மாறுதல் அவன் வாழ்க்கையில் ஏற்பட்டது.

---

## 3. நிலக்கிழாரின் இருபிள்ளைகள்

ராவிலோவின் மிக முக்கியமான மனிதர் நிலக்கிழார் காஸ் என்பவராவர். அவர் மாதா கோவிலுக்கருகே அமைந்திருந்த ஒரு மாளிகையில் வாழ்ந்தார். அம்மாளிகையின் முன்புறம் அழகிய வளைந்த மாடிப்படியும், பின்புறம் சிறந்த ஒரு குதிரைக் கொட்டிலும் இருந்தன. அவ்வூரில் வேறுபல நிலக்கிழார்கள் இருப்பினும், இவரே நிலக்கிழார் என்ற சிறப்புப் பட்டத்திற்கு உரியவராய் விளங்கினர். ஓரிரு வீடுகளை வாடகைக்கு விட்டிருந்தார்.

பழங்கால முறையில் அமைந்திருந்த இவ்வூர் பல திறப்பட்ட மக்களைப் பெற்றிருந்தது. அடர்ந்த மரங்களால் சூழப்பட்டிருந்தது. இதன் தெருக்களில் வண்டிகள் சென்று சென்று பாதைகள் தேய்ந்து இருந்தன. செல்வமிக்கவர்கள் கொழுக்கத் தின்று வயிறு பெருக்கக் குடித்தார்கள். அவர்களுக்கு உடல் வீக்கமும், காக்கை வலிப்பும் இயல்பான நோய்களாக அடிக்கடி வந்தன. ஏழைகளோ, பணம் படைத்தவர்கள் இன்பவாழ்வு வாழ்வதற்கு உரிமையுடையவர்களே என்று எண்ணினர். செல்வர்களால் அடிக்கடி நிகழ்த்தப்படும் விருந்துகளில் மீதியானவையே பல ஏழைகளுக்கு அமிழ்தமாக இருந்தன.

நிலக்கிழாரின் மனைவி இறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அதனால் சிவப்பு மாளிகை, வீட்டுக்கும் அதன் சமையலறைக்கும் விளக்கமாயும், அன்பு அச்சம் இவற்றின் ஊற்றாயும் விளங்கிய மனைவியையும் அன்னையையும் இழந்து பொலிவின்றி யிருந்தது. இதனால் போலும் நிலக்கிழாரின் இருபிள்ளைகளும் இயல்பிலாதவர்களாக மாறிவிட்டனர். ராவிலோவில் ஒழுக்கக் கட்டுப்பாடு உறுதியாக வேண்டப்படாது போயினும், நிலக்கிழார் தம் மக்களைச் சோம்பேறிகளாக வைத்திருந்தது அவருக்கு ஓர் இழிவையே தேடிக்கொடுத்தது. பணக்காரப் பிள்ளைகளுக்கு எதிலும் சிறு சலுகை கொடுப்பது இயல்பாயினும், நிலக்கிழாரின் இரண்டாவது மகனை டன்சேவின் நடத்தையும் போக்கும் ஊரில் பலருக்கும் பிடிக்காதிருந்தது. எப்போதும் குடியையும் குதிரைப்பந்தயப் பிரியனையுமிருந்த டன்சேவை அவ்வூரிலுள்ளோர் விரும்பவில்லை. ஆனால் அவன் அண்ணன் காட்பிரே இன்முகமும் நற்குணமும் உடைய இளைஞனையிருந்தான். தன் தம்பியுடன் சாலைவழியே உலாப்போய் வரும்போது அடிக்கடி கன்னி நான்சி லாம்மீட்டரைக் கண்ணுறுவான். இவனைக்கண்டதும் அவள் காதல்மீதூர வெட்கமுறுவாள். பலநாட்கள் காட்பிரே தன் வீட்டிற்குத் திரும்பி வராமல் இருந்ததையறிந்த ஊரினர் அம்பலும் அலரும் பேசத்தொடங்கினர். சிவப்பு மாளிகைக்கு அரசியாய் வரக்கூடிய தகுதி வாய்ந்தவள் அவளே என்றும், காட்பிரே அவளையே திருமணம் செய்துகொள்வான் என்றும் ஊரினர் பேசிக்கொண்டனர். ஆனால் சிலகாலமாகக் காட்பிரேவின் முகம் முன்பு போல மலர்ந்து காணப்படாமல் உலர்ந்தே காணப்பட்டது.

முன்பெல்லாம் ஊரினர் இவ்விருவரையும் பார்த்து எவ்வளவு பொருத்தமான இணை! என்று வியந்து பேசினர். சிவப்பு மாளிகையின் சிறப்பு இவளால் உயர்வடையும் என்றும், குடும்பச் செலவுகள் வீணாகாமல் குறையும் என்றும் கருதினர்.

மார்னரின் ராவிலோ வாழ்க்கையில் அது பதினேந்தாம்ஆண்டு. ஒருநாள் நவம்பர் மாதப்பிற்பகலில் தன் சட்டைப்பைகளில் இரண்டுகைகளையும் விட்டுக்கொண்டு நின்று கொண்டிருந்தான் காட்பிரே. அவன் முகத்தில் கவலைத் திரைகள் படர்ந்திருந்தன. யாரோ ஒருவரை எதிர்பார்ப்பதுபோல நின்று கொண்டிருந்தான். விரைவிலேயே பெரிய காலடிச் சத்தமும், அதைத்தொடர்ந்து ஒரு சீழ்க்கை ஒலியும் ஆளில்லாத அம் மாளிகையின் அறையில் கேட்டது. கதவு திறந்தது. பருத்த, தடுமாற்ற நடையுடைய ஓர் இளைஞன் உள்ளே நுழைந்தான். அவனுடைய வீங்கிய முகம் அவன் நிறையக் குடித்திருந்ததைக் காட்டிக்கொடுத்தது. அவன் வேறுயாருமில்லை; காட்பிரேவின் தம்பி டன்சேதான். தம்பியைக் கண்டதும் அண்ணனின் முகம் சினங்கொள்முகமாக மாறியது.

"உன்னை இதற்காகத்தான் வரவழைத்தேன். நன்றாகக் காது கொடுத்து நான் சொல்வதைக் கேட்பாயா?" என்று உரத்துப் பேசினான் காட்பிரே. அவனும் வழக்கத்திற்கு மேலாகவே குடித்திருந்தான். இப்போது அவன் மனக்கவலை கோபமாக மாறியிருந்தது. டன்சேவைப் பார்த்து, "பவுலரிடமிருந்து வந்த இந்த வாடகைப் பணத்தை நான் அப்பாவிடம் கொடுக்கவேண்டும். இதை நான் கொடுத்ததாக அவரிடம் கூறு. உடனே பணம் யாரிடமிருந்து வந்தது என்று அவருக்குத் தெரிந்துவிடும். அவருக்கு இப்போது பணம் மிகத்தேவையாயிருக்கிறது. அதனால் கோபமாயிருக்கிறார். இந்தப் பணத்திலிருந்தும் நீ ஏதாவது திருடிக்கொண்டால் பிறகு அவர் சொன்னது போலவே செய்துவிடுவார், சாக்கிரதை. அதனால்



உடனே அவரிடம் கொடுத்துவிடு. என்ன தெரிகிறதா?" என்றான்.

டன்சே தன் அண்ணனுக்கருகில் வந்து அவன் முகத்தைப் பார்த்து, "எனக்குத் தொந்தரவு கொடுக்காமல் நீயே பணத்தைக் கொண்டுபோய்க் கொடுத்தால் நன்றாயிருக்குமே. நீ என்னிடம் அன்புடன் இதைக் கொடுத்தாய். இப்போது நான் கொடுப்பதை அன்புடன் திரும்ப ஏற்றுக்கொள். சகோதர அன்பினால்தான் இப்படிச் சொல்லத் துணிந்தேன்" என்றான்.

காட்பிரே உதட்டைக் கடித்தான்; கையை மடக்கினான். தம்பியை நோக்கி, "என் பக்கத்தில் வராதே, வந்தால் உன்னை அடித்துப் போடுவேன்" என்றான்.

டன்சே சிறிது பின்வாங்கிக் கொண்டே, "அப்படி எல்லாம் செய்யவேண்டாம். ஏனென்றால் நான் அவ்வளவு நல்ல தம்பி. நீ அந்தக் குடிகார இளம்பெண் டாலி பாரனிடம் மறைமுகமாகத் தொடர்புகொண்டிருப்பதை அப்பாவிடம் தெரியப்படுத்தினால் பிறகு அவர் உன்னை வீட்டைவிட்டே துரத்திவிடுவார். பிறகு நானே வீட்டுக்கு மூத்தமகனாகி விடுவேன்; ஆனால் நான் அப்படி ஒன்றும் சொல்லிவிடமாட்டேன். நான் நல்லவன். எனக்காக எப்படியாவது சிரமப்பட்டு ஒரு நூறு பவுன்களை மட்டும் கொடுத்துவிடு" என்றான்.

"நான் பணத்திற்கு எங்கே போவேன்? என்னிடம் ஒரு ஷில்லிங்குகூட இல்லையே" என்றான் காட்பிரே.

அதற்கு டன்சே, "பரவாயில்லை. உன்னோடு புறப்பட்டுச் செல்வது எனக்கு எப்போதும் மகிழ்ச்சிதருவதே. நீ ஒரு நல்ல அண்ணன். நாம் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக் கொள்வதில் விருப்பமுடையவராய்

இருந்து வந்திருக்கிறோம். நீ இல்லாவிடில் என்ன செய்வது என்று எனக்குத் தெரியாது. நாம் இருவரும் ஒன்றாக வீட்டில் இருப்பதே நல்லது. அதுவே உனக்கும் பிடித்தமாயிருக்கும் என நினைக்கிறேன். உன்னைப் பிரிவதற்காக வருந்தினாலும் உனக்கு நல் விடை கொடுக்கிறேன்'' என்றான்.

டன்சே அப்பால் நகர்ந்து கொண்டிருந்தான். ஆனால் காட்பிரே அவனைத் தொடர்ந்து ஓடி அவன் கையைப்பிடித்துக் கொண்டான். "நான் மெய்யாகச் சொல்கிறேன்; என்னிடம் பணமில்லை; எனக்குப் பணமும் கிடைக்காது'' என்றான்.

''கிம்பிளிடமிருந்து கடன் வாங்கு.''

''இனிமேல் அவன் எனக்கு ஒன்றும் கடன் தர மாட்டான். அவனை நான் கேட்கப் போவதில்லை.''

''சரி. அப்படியானால் உன் குதிரையை விற்றுவிடு.''

'' ஆமாம், அதுதான் இப்பொழுது நடக்கக் கூடியது. நான் நேரடியாகப் பணம்பெற அதுவே சிறந்தவழி.''

''நாளைக்கு நீ குதிரையேறிச் சந்தைக்குப் போ. அங்கே பிரைசும், கீட்டிங்கும் இருப்பார்கள். அவர்கள் போட்டி போட்டுக்கொண்டு உன் குதிரையை வாங்கக் காத்திருக்கிறார்கள்.''

''சரி, இன்று நான் வீட்டிற்குத் திரும்பிவர வெகு நேரமாகும். திருமதி ஆஸ்காட்டின் பிறந்த நாள் ஆட்டத்திற்குப் போகிறேன்'' என்றான் காட்பிரே.

''ஓகோ, அங்கே அன்புக்கன்னி நான்சி வருவாள். அவளுடன் சேர்ந்து நடனமாடி அவளை மீண்டும் கவரலாம் என்று நினைக்கிறாய் இல்லையா ?''



''நான்சியைப்பற்றி நீ ஒன்றும் பேசக்கூடாது. பேசினால் உன் நாக்கைத் துண்டித்துவிடுவேன்.''

''எதற்காக? இன்று டாலி அதிகமாகக் கஞ்சா குடித்துவிட்டிருப்பாள் என்று நினைக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். குமாரி நான்சி உனக்கு இரண்டாவது மனைவியாய் இருப்பதை வெறுக்க மாட்டாள். உனக்கு நல்ல மனைவியாகக் கிடைத்திருக்கிறாள். நான் உன் இரகசியங்களை யாரிடமும் சொல்ல மாட்டேன். ஏனெனில் எனக்கு வேண்டியதையெல்லாம் நீ கொடுக்கிறாய்'' என்றான் டன்சே.

''என் பொறுமை அதன் எல்லையை அடைந்து விட்டது. நானே அப்பாவிடம் எல்லாவற்றையும் சொல்லித் தீர்த்துவிடுவது நல்லது என நினைக்கிறேன். பிறகு உன்னைப் பற்றியே கவலைப்படாமல் இருக்கலாம். அவருக்கு எப்போதாவது ஒருநாள் தெரியத்தானே போகிறது? டாலியே ஒருநாள் இங்கு வந்து அப்பாவிடம் சொல்லுகிறேன், என்று பய முறுத்திவருகிறாள். அதனால் நீ இதை மறைத்து வைத்துக்கொண்டிருப்பது ஒரு பெரிய காரியம் என்று நினைக்காதே. உன்னிடம் பணத்தைக் கொடுத்து விட்டால், அவள் பயமுறுத்துவதை நிறுத்தி விடுவாளா? அவள் சொன்னதுபோலவே ஒருநாள் செய்துவிடுவாள்; எல்லாம் ஒன்றுதான். நானே அப்பாவிடம் போய் எல்லாம் சொல்லிவிடுகிறேன். உன் வேலையைப் பார்த்துக்கொண்டு நீ போ'' என்றான் காட்பிரே.

அளவுக்குக் கொஞ்சம் அதிகமாகவே தான் போய்விட்டதை டன்சே உணர்ந்தான். அதனால்

அண்ணனைப்பார்த்து, "உன் விருப்பப்படியே செய்" என்றான்.

காட்பிரே சட்டைப்பையில் விட்டிருந்த கையை எடுக்காமலேயே இன்னும் வைத்துக்கொண்டு தரையைப்பார்த்து நின்றிருந்தான். அவனுக்கும் உள்ளூரப் பயம் இருந்தது. எனவே ஒரு முடிவுக்கும் வராமல் தத்தளித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு எல்லாப் பக்கங்களிலிருந்தும் துன்பங்கள் வருவதாகக் காணப்பட்டன. அதனால் தன் தம்பி கேட்டதெல்லாம் தருவதாக ஒப்புக்கொண்டான். பயங்கொள்ளியான அவன் தன் தந்தையின் சொத்துரிமையை இழந்து பின் இரந்துவாழ நேரும் என்று எண்ணியும், நான்சி தனக்குக் கிடைக்காமல் போய்விடுவாளோ என்று அஞ்சியும் தம்பி சொன்னதைக் கேட்பதாக உறுதி கூறினான். டன்சே கூறியது போலத் தன் குதிரையை விற்றுவருவதற்காகப் புறப்படத் தயாராயிருந்தான். தன் அருமைக் குதிரையை இழப்பதற்கு மனம்வராதவனாய்ச் சிறிது சினம் கலந்த குரலில் டன்சேவைப் பார்த்து, "நான் இதுவரை பார்த்த குதிரைகளுள் இதுவே எல்லாவகையிலும் சிறந்தது. நீ இதை விற்கச் சொல்கிறாய்; சரி, அதை நீயே விற்றுவிட்டுப் பணத்தைக் கொண்டுவா" என்றான்.

"நல்லது, அண்ணா" என்று மகிழ்ச்சியுடன் கூறினான்டன்சே; "நான் நாளைக்கு நன்றாகப் பேரம் பேசிக் குதிரையை நல்ல விலைக்கு விற்று வருவேன்" என்றான்.

"அதை விற்றுப் பணத்தை என்னிடம் கொண்டு வந்து கொடுப்பாயா?" என்று கேட்டான் காட்பிரே.

"அப்படியே கொண்டுவருகிறேன். குதிரையை விற்று நூற்றிருபது பவுன்கள் கொண்டுவருகிறேன்" என்றான்.

கதவை வேகமாகச் சாத்திவிட்டு இருபத்தாறு வயதுடைய காட்பிரேவைத் தன் துன்ப எண்ணங்களில் உழன்றுகொண்டு இருக்கும்படி விட்டு விட்டு டன்சே புறப்பட்டான். இன்பத்துறையில் எளியனாகும் இயல்புடையனாதலின், காட்பிரே அவசரப்பட்டு ஏற்கெனவே மறைமுகமாக ஒரு தகுதியில்லாத பெண்ணைத் திருமணம் புரிந்து கொண்டுவிட்டான். உண்மையில் அவன் நான்சி லாம்மீட்டரைக் காதலித்தானாயினும், அவளை மணந்துகொண்டால் எய்தப்போகும் அளவிலா உவகையையும், நலத்தையும் எண்ணிப்பார்த்திருந்தானாயினும், அதுவரை அவனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்க முடியவில்லை. இச்செய்தி தன் தந்தைக்குத் தெரிந்துவிடுமாயின்பழிப்புக்குரியதாக நேரிடுமே என்று பெரிதும் கவன்றான். அவன் செய்த செயல் குடும்பப் பெருமைக்கு இழுக்குத்தரத் தக்கதே. அச்செய்தி வெளிப்பட்டால் அவன் இனி நான்சியைப் பார்க்கவும் முடியாது. இவற்றால் காட்பிரே நிலை கொள்ளா மனத்தினனாய் உழன்றான். தான் செய்த தகாச் செயலால் வருந்தித் தவித்துக் கொண்டிருந்தான்.

---

அண்ணனைப்பார்த்து, "உன் விருப்பப்படியே செய்" என்ருன்.

காட்பிரே சட்டைப்பையில் விட்டிருந்த கையை எடுக்காமலேயே இன்னும் வைத்துக்கொண்டு தரையைப்பார்த்து நின்றிருந்தான். அவனுக்கும் உள்ளூரப் பயம் இருந்தது. எனவே ஒரு முடிவுக்கும் வராமல் தத்தளித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு எல்லாப் பக்கங்களிலிருந்தும் துன்பங்கள் வருவதாகக் காணப் பட்டன. அதனுல் தன் தம்பி கேட்டதெல்லாம் தருவதாக ஒப்புக்கொண்டான். பயங் கொள்ளியான அவன் தன் தந்தையின் சொத்துரிமையை இழந்து பின் இரந்துவாழ நேரும் என்று எண்ணியும், நான்சி தனக்குக் கிடைக்காமல் போய்விடுவாளோ என்று அஞ்சியும் தம்பி சொன்னதைக் கேட்பதாக உறுதி கூறினுன். டன்சே கூறியது போலத் தன் குதிரையை விற்றுவருவதற்காகப் புறப்படத் தயாராயிருந்தான். தன் அருமைக் குதிரையை இழப்பதற்கு மனம்வராதவனுய்ச் சிறிது சினம் கலந்த குரலில் டன்சேவைப் பார்த்து, "நான் இதுவரை பார்த்த குதிரைகளுள் இதுவே எல்லாவகையிலும் சிறந்தது. நீ இதை விற்கச் சொல்கிருய் ; சரி, அதை நீயே விற்றுவிட்டுப் பணத்தைக் கொண்டுவா" என்ருன்.

"நல்லது, அண்ணு" என்று மகிழ்ச்சியுடன் கூறினுன் டன்சே ; "நான் நாளைக்கு நன்ருகப் பேரம் பேசிக் குதிரையை நல்ல விலைக்கு விற்று வருவேன்" என்ருன்.

"அதை விற்றுப் பணத்தை என்னிடம் கொண்டு வந்து கொடுப்பாயா ?" என்று கேட்டான் காட்பிரே.



"அப்படியே கொண்டுவருகிறேன். குதிரையை விற்று நூற்றிருபது பவுன்கள் கொண்டுவருகிறேன்" என்ருன்.

கதவை வேகமாகச் சாத்திவிட்டு இருபத்தாறு வயதுடைய காட்பிரேவைத் தன் துன்ப எண்ணங்களில் உழன்றுகொண்டு இருக்கும்படி விட்டு விட்டு டன்சே புறப்பட்டான். இன்பத்துறையில் எளியனுகும் இயல்புடையனுதலின், காட்பிரே அவசரப்பட்டு ஏற்கெனவே மறைமுகமாக ஒரு தகுதியில்லாத பெண்ணைத் திருமணம் புரிந்து கொண்டுவிட்டான். உண்மையில் அவன் நான்சி லாம்மீட்டரைக் காதலித்தானுயினும், அவளை மணந்துகொண்டால் எய்தப்போகும் அளவிலா உவகையையும், நலத்தையும் எண்ணிப்பார்த்திருந்தானுயினும், அதுவரை அவனுல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்க முடியவில்லை. இச்செய்தி தன் தந்தைக்குத் தெரிந்து விடுமாயின்பழிப்புக்குரியதாக நேரிடுமே என்று பெரிதும் கவன்ருன். அவன் செய்த செயல் குடும்பப் பெருமைக்கு இழுக்குத்தரத் தக்கதே. அச்செய்தி வெளிப்பட்டால் அவன் இனி நான்சியைப் பார்க்கவும் முடியாது. இவற்ருல் காட்பிரே நிலை கொள்ளா மனத்தினனுய் உழன்ருன். தான் செய்த தகாச் செயலால் வருந்தித் தவித்துக் கொண்டிருந்தான்.

# 4. டன்சேவின் முயற்சியும் முடிவும்

மறுநாள் டன்சே அதிகாலையிலேயே எழுந்து குதிரையை விற்றுவருவதற்காக அதன்மீதேறிச் சென்றான். செல்லும் வழியில் அவன் மார்னரின் குடிசையைத் தாண்டிச் செல்ல நேரிட்டது. மழைக்காலமானதால் அந்த இடம் சேறுநிறைந்த நிலப்பகுதியால் சூழப்பட்டிருந்தது. அவ்விடத்தை நோக்கிச் சென்றபோது டன்சேவின் மனத்தில் தோன்றிய முதல் எண்ணம் இதுதான்: முதியவனான இந்த முட்டாள் நெசவாளி இடைவிடாது தறிநெய்து நிறையப் பணம் சேகரித்து அதை எங்கேனும் ஒளித்து வைத்திருப்பான் என்பதே.

இதுவரை தன் அண்ணனிடம் மார்னரின் கருமித்தனத்தைப் பற்றிக் கூறிப் பயமுறுத்தியோ, நயங்காட்டியோ அவனிடமிருந்து கடனாகப் பணம் வாங்கச் செய்யாமல் போய்விட்டோமே என்று வருந்தினான். குதிரையை விற்க வேண்டாமென்றும், மார்னரிடமிருந்தே இப்போது வேண்டிய பெருந்தொகையைக் கடன் வாங்கிக் கொள்ளலாமென்றும் நினைத்துக் குதிரையை வீடுநோக்கித் திருப்ப நினைத்தான். காட்பிரேவுக்கும் அந்த யோசனை வரவேற்கத்தக்கதாயிருக்கும்; தன் அன்புக் குதிரையைப் பிரிய மனமில்லாத அவன் ஆவலுடன் மார்னரிடமிருந்தே பணம்பெறும் வழியைப்பற்றி உடனடியாகத் தீர்மானிப்பான் என்றே டன்சே நினைத்தான். ஆனால் எதற்கும் திரும்பிப் போகக்கூடாது என்ற எண்ணம் அவனிடம் வலுத்திருந்தது. தன் அண்ணன் மார்னரிடமிருந்து கடன் பெறும் வாய்ப்பைப்பெற அவன் விரும்பவில்லை.



அண்ணனுக்குத் துன்பம்தரவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு இருந்தது. மேலும் குதிரையை விற்கப் போகிறோம், பேரம் பேசும் வாய்ப்பைப் பெறப்போகிறோம் என்ற பெருமித ஆசை அவனுக்கு ஏற்பட்டிருந்தது. தன் அண்ணனின் குதிரையைத் தான் விற்கப் போவதை எண்ணி மகிழ்ச்சியடைந்தான். ஆனால் எப்படியாவது மார்னரிடமிருந்து காட்பிரே பணம் கடன் வாங்கவேண்டும் என்ற எண்ணமும் அவனுக்கு இருந்து வந்தது.

டன்சே எதிர்பார்த்த இடத்தில் பிரைசும், கீட்டிங்கும் இருந்தனர். அவர்கள் டன்சேவை நல்வரவேற்றனர். “ஓ, நீ உன் அண்ணனின் குதிரைமீது வந்திருக்கிறாயே, எப்படி?” என்று கேட்டான் பிரைசு.

“இது எனக்குச் சொந்தமான குதிரைதான்” என்று ஒரு பொய் சொன்னான் டன்சே. பிறகு, “இக்குதிரையை ஒருவர் நூற்றைம்பது பவுனுக்குக் கேட்டார். ஆனால் நான் இதை விற்கவிரும்பவில்லை” என்றான்.

டன்சே குதிரையை விற்பதற்காகவே வந்திருக்கிறான் என்பதைப் பிரைசு ஊகித்துக்கொண்டான்.

“எனக்கு வியப்பாயிருக்கிறது. நீ ஏன் அதை அவ்வளவு விலைக்குக் கொடுத்துவிடாமல் நீயே வைத்துக்கொண்டிருக்கிறாய்? குதிரையின் பெறுவிலைக்குமேல் அரைமடங்கு அதிகமாகப் பணம் வரும்போது அதை வேண்டாமென்று யாரேனும் மறுப்பார்களா? நூறு பவுன் கிடைத்தால் நீ அதிர்ஷ்டக்காரன்” என்றான் பிரைசு.

இப்படியே பேரம் வளர்ந்து வந்தது. கடைசியில் நூற்றிருபது பவுன் கொடுத்துக் குதிரையை வாங்கிக்

கொள்ளப் பிரைசு ஒப்புக்கொண்டான். டன்சேவிடம் அக்குதிரையைத் தன் வீட்டில் பாதுகாப்பாகக் கொண்டு வந்து விட்டுவிட்டுப் பணத்தை வாங்கிக்கொள்ளலாம் என்று கூறினன். டன்சேவும் பிரைசு வாழும் வீட்டிற்குக் குதிரையைக் கொண்டுபோய் அவன் திரும்பிவரும் வரை காத்திருந்து பணத்தை வாங்கிக்கொண்டு, பிறகு வாடகைக்கு ஒரு குதிரையை அமர்த்திக்கொண்டு வீடு செல்வதே நல்லது என்று முதலில் எண்ணினன். ஆனல் தன் நல்வினையில் நல்ல நம்பிக்கைகொண்டிருந்ததனுலும், பேரத்தின் முடிவில் பிராந்தியைக் குடித்திருந்ததினுலும், குதிரைமீது ஏறி எவ்வளவு வேகமாகக் குதிரை ஓடுமோ அவ்வளவு வேகமாக அதை ஓட்டிப்பார்க்கவேண்டும் என்ற எண்ணம் அவனிடத்தில் தோன்றி வலுப்பெற்றது. அதனல் குதிரை மீது ஏறி வேகமாக ஓட்டினன். வழியில் ஓர் உயரமான முள்வேலி இருந்தது. அதைத் தாண்டும்போது குதிரை காலிடறிக் கீழே விழுந்து அங்கேயே மாண்டுவிட்டது. கண்மூடித்தனமாகக் குதிரையை ஓட்டிவந்து அதன் உயிருக்கு உலைவைத்துவிட்டமைக்காகத் தன்னைப் பெரிதும் நொந்து கொண்டான். பின்னல் வரக்கூடிய தீங்குகளை எண்ணிப்பார்ப்பதைக் காட்டிலும், அப்போது நேரும் அவமானத்திற்காகவே பெரிதும் கவலைப்படும் இயல்பினனை டன்சே விரைவில் நிலத்திலிருந்து எழுந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். நல்லவேளை அங்கு ஒருவருமில்லை. அப்போது அந்நிகழ்ச்சியைப் பார்த்துவிட யாரும் இல்லாததுகண்டு மனநிறைவு கொண்டான்.

அதிர்ச்சியிலிருந்து விடுபட்டு விரைவில் பழைய நிலையை அடைந்த டன்சே விரைவாக ராவிலோவை



நோக்கி நடந்து வந்தான். முதலில் அவன் ஒரு குதிரையை அமர்த்திக்கொண்டு உடனே வீட்டுக்குச் செல்லலாம் என்று நினைத்தான். ஏனெனில் காட்டு வழியே தன்னந்தனியாகக் கையில் துப்பாக்கியில்லாமல் செல்வது துன்பத்திற்கிடமானது என்று பயந்தான்.

காட்பிரேவிடம் இத்துயரச் செய்தியைச் சொல்லியாகவேண்டுமே என்று எண்ணி மனங்கலங்கினன். ஆனல் மார்னரின் பணத்தைப்பற்றிச் சொல்லிவிடலாம் என்று மனந்தேறினன். புதிய இடத்தில் கடன் வாங்கும் வழியைக் கூறிவிட்டு டன்சே தனக்கும் பங்கு கேட்க முற்படும்பொழுதெல்லாம் காட்பிரேவுக்குக் கோபம் வந்துவிடும்; தம்பியை அடிக்கவும் முற்பட்டுவிடுவான். இப்போதும் அப்படியே செய்தாலும் செய்யட்டும், பொறுத்துக்கொள்ளலாம் என்று உறுதிப்பாட்டுடன் இருந்தான். மார்னரின் பணத்தைப்பற்றிய எண்ணமே இவன் உள்ளத்தில் கொழுந்துவிட்டுச் சுடர்விட்டுக் கொண்டிருந்தது. இப்போது அவன் பணம் டன்சேவுக்குத் உடனடியாகத் தேவையாயிருந்தது. சேறுநிறைந்த தொடுதோலுடன் சென்று, குதிரைக் கொட்டிலில் இருப்போர் கேட்கும் கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்ல நேருமே என்று நினைத்து, இந்த அலங்கோலத்தில் ராவிலோவுக்குப் போவதை வெறுத்தான். தன் மேலங்கியில் கையை விட்டுப் பார்த்தான். அங்கே கிடந்த இரண்டு மூன்று நாணயங்களும் குதிரைக் கொட்டில்காரருக்குக் கொடுப்பதற்குக்கூடப் போதா.

இப்போது டன்சே தன்னூருக்கு அருகேயே வந்துவிட்டான். எப்போதும் தெளிவில்லாத மனமுடைய

அவன் துணிந்து வீட்டுக்குச் செல்வதென முடிவு கட்டினுன். கையில் சவுக்கை எடுத்து ஒருமுறை நொடித்துக் கொண்டான். எப்படியும் நிலைமையைச் சமாளித்துவிடுவது என்ற உறுதியுடன் நடை போட்டான். அவன் கையில் ஏந்தியிருந்த சவுக்கு அண்ணன் காட்பிரேவினுடையது. காட்பிரேவின் பெயர் அதில் கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருப் பினும், அப்பெயர் கைபிடிக்கும் இடத்தில் இருந்ததால் அதை எவரும் எளிதில் படித்துத் தெரிந்துகொள்ள முடியாது. அச் சவுக்கு தங்கப்பிடியுள்ளதா யிருந் தமையின், அண்ணனுக்குத் தெரியாமலேயே அதை எடுத்துக்கொண்டு வந்திருந்தான். அப்போது பனிப் படலம் பூமியைச் சூழ்ந்திருந்தது. தூரத்தில் வருவது யார் என்பதுகூட அறிந்து கொள்ளமுடியாத அளவு மூடுபனி பரந்திருந்தது. முகத்துக்கு முகம் நெருங்கிப் பார்த்தால்தான் ஆள் அடையாளம் கண்டுபிடிக்க முடியும். தன் இரங்கத்தக்க நிலைமையை எவரேனும் கண்டுவிடப் போகின்றனர் என்று பயந்து கொண்டே நடந்து வந்தான். ஆனுல் வழியில் அவன் யாரையும் எதிர்ப்படவில்லை. இது வழக்கம்போலத் தனது நற்பேற்றின் சிறப்பே எனக்கருதி மகிழ்ந்தான். மாலை இருட்டு விரைந்து சூழ்ந்து கொண்டிருந்தது. பல புதர்களைத் தாண்டித் தனியே வந்துகொண்டிருந்தான். 'கற்குழி'யை நெருங்கிவிட்டான்.

தூரத்திலே விளக்கு வெளிச்சம் தெரிந்தது. அந்த ஒளி மார்னரின் குடிசையிலிருந்துதான் வந்துகொண் டிருந்தது. அவன் நடந்துவரும்போதெல்லாம் அவன் மனம் மார்னரின் குடிசையையும், அக்குடிசைக்குள் மறைந்து கொண்டிருக்கும் பணத்தையும்பற்றியே



நினைத்துக் கொண்டிருந்தது. மார்னரை எப்படியாவது தன் வழிக்குத்திருப்பி வட்டிக்குப் பணத்தை உடனே கடன்கொடுக்குமாறு செய்துவிடலாம் என்றே அவன் தன்மனத்துக்குள் திட்டமிட்டுக் கொண்டிருந்தான். அவனிடம் நயவுரையும் சிறிது பயவுரையும் கூறித்தான் அவன் பணத்தைக் கடன் வாங்கமுடியும் என்று அவனுக்குத் தோன்றியது. கடன் வாங்கும்போது அவன் ஈடு காட்டும்படி கேட்டால் என்ன செய்வது? அவன்பணம் உறுதியாகத் திருப்பிக் கொடுக்கப்படும் என்பதை அவன் நம்புமாறு ஏமாற்றுச்சொல் கூறுவதே செய்யத்தக்கது என்று கருதினுன். மொத்தத்தில் தன் அண்ணனைக் காட்டிலும் துணிவும் சூழ்ச்சியும் மிக்க தானே கஞ்சனுகிய மார்னருக்குத் தகுதியானவன் என்றும் கருதினுன். இவ்வாறு முடிவு செய்திருந்தான். மார்னரின் குடிசைச் சன்னல் வழியே ஒளிவிடும் விளக் கைப் பார்த்ததும், அவனிடம் எப்படி உரையாடுவது, அவனை எப்படி வயப்படுத்துவது என்றெல்லாம் அவனுள்ளத்தில் உடனே தெளிவாய்த் தோன்றி விட்டன.

டன்சேவின் எண்ணங்களுக்குச் சாதகமான சூழ் நிலைகளே ஏற்பட்டன. மார்னரின் விளக்கு அவனுக்கு வழிகாட்டியாயிருந்தது. ஆனுல் இன்னும் முக்கால் மைல் தூரம் நடக்கவேண்டியிருந்தது. ஏற்கெனவே அவன் கால்களில் வலி ஏற்பட்டு விட்டது. தரைவேறு சேறும் சகதியுமாய் இருந்தது. மழையும் தூறிக் கொண் டிருந்தது. விளக்கொளி வரும் திசைநோக்கியே நடந்து வந்து மார்னரின் குடிசையை நெருங்கிவிட்டான். குடிசையின் முன்நின்று பலமாகக் கதவைத்தட்டினுன். திடீரெனக் கதவைத் தட்டுவதால் மார்னர் பயப்

படுவான் என்று எண்ணினான். ஆனால் உள்ளேயிருந்து பதில் ஒன்றும் வரவில்லை. எல்லாம் அமைதியாகவே இருந்தது. 'ஒருவேளை மார்னர் படுக்கப் போயிருப்பாரோ? போயிருந்தால் விளக்கை ஏன் இப்படி எரியவிட்டிருக்க வேண்டும்? ஒருவேளை அக் கருமி விளக்கையணைக்க மறந்து போயிருக்கலாம்'



டன்சே மார்னரின் குடிசையை நெருங்குதல்

என்று எண்ணினான். டன்சே இன்னும் பலமாகக் கதவைத் தட்டினான். பதிலுக்குக் காத்திராமல் தாழ்ப்பாளின் துவாரம் வழியாகக் கைவிரலை விட்டுத் தாழ்ப்பாளை மேலும் கீழும் ஆட்டினான். உடனே அவனுக்கு வியப்புண்டாகும் வண்ணம் கதவு திறந்து விட்டது. அவன் விளக்கொளியின் அருகே வந்து விட்டான். அவ் விளக்கு, மார்னரின் படுக்கை, தறி, மூன்று நாற்காலிகள், ஒரு மேசை இவற்றிற்கு ஒளி கொடுத்து ஒளிர்ந்துகொண்டிருந்தது. டன்சே விரைவில் உள்ளே சென்று விளக்கின் அருகே உட்கார்ந்தான். அப்போது அங்கே மார்னர் இல்லை.

அந்தவேளையில் டன்சேவுக்கு வெப்பத்தைத் தவிர வேறு இனிமையான பொருள் இருக்கமுடியாது. அவன் தணலடுப்பருகே சென்று அமர்ந்தான். தீயடுப்பின்முன்னே உணவுக்குரிய ஒரு பொருள்



தொங்க விடப்பட்டிருந்தது. அந்தக் கிழ மார்னர் இரவுணவுக்கு இறைச்சி சாப்பிடுவதில்லைபோலும். மக்கள் பேசிக் கொள்வதுபோல அவன் பசியைக் குறைத்துக் கொள்வதற்காக ஒருவகை ரொட்டியையே உண்டு வருவதாக ஊகித்தான். இந்த இருட்டு வேளையில் சாப்பிடாமலும், கதவைத் தாழிடாமலும் கூட அவன் எங்கே போயிருப்பான்? விறகு கொண்டு வருவதற்கோ அல்லது அதுபோன்ற சிறு காரியத்திற்காகவோ வெளியே போயிருப்பான் என்றே டன்சே நினைத்தான்.

அவ்வெண்ணம் அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. 'மார்னர் இறந்துவிட்டால் அவனுடைய பணத்துக்கு உரிமையுடையவர் யார்? அவன் பணம் எங்கே ஒளிந்திருக்கிறது என்று யாருக்குத் தெரியும்? யாராவது அப்பணத்தை எடுத்துக் கொண்டு போய் விட்டார்களா என்றாவது யாருக்கேனும் தெரியுமா?' என்றெல்லாம் அவன் கேள்விகள் போட்டுக்கொண்டிருக்கவில்லை. 'பணம் எங்கே இருக்கிறது?' என்பதைப் பற்றியே அவன் எண்ணமெல்லாம் இருந்தது. பொதுவாகப் பணத்தைத் தரைக்குள்ளோ, படுக்கையின் அடியிலோ, கூரையிலோ ஒளித்துவைப்பது வழக்கம் என்று அவன் கேள்விப்பட்டிருந்தான். பணத்தாசை பிடித்து உந்த டன்சே மார்னரின் படுக்கையருகே சென்றான். அப்போது அவன் கண்கள் படுக்கையருகேயுள்ள தரையின்மீது பதிந்தன. அங்கே ஓரிடத்தில் மணல் பரப்பப்பட்டிருந்தமை விளக்கு வெளிச்சத்தில் தெளிவாகத் தெரிந்தது. தரையில் வேறு எந்த இடத்திலும் மணல் இல்லை! ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் மணல் விரிக்கப்பட்டிருந்ததாலும், கைவிரல்

களின் அடையாளம் அதில் பதிந்திருந்ததாலும் அவனுக்கு ஐயம் வலுத்தது.

ஒருகணத்தில் டன்சே அந்த இடத்திற்குப் பாய்ந்தான். சவுக்கினுல் மணலை அப்புறமாகத் தள்ளினுன். அதன் கொக்கிமுனையினுல் மணலுக்குக் கீழ் இருந்த செங்கற்களைப் புரட்டினுன். விரைவாக இரு செங்கற்களைப் புரட்டி மேலே எடுத்தான். உள்ளே



டன்சே மார்னரின் புதையலைக் கண்டுபிடித்தல்

அவன் ஆவலுடன் தேடிக்கொண்டிருந்த பொருள் இருப்பதைக் கண்டான். இரண்டு தோல்பைகளில் பணம் நிறைந்து இருந்தது. அவை மிகவும் கனமாக இருந்ததால்எல்லாம் தங்கநாணயங்களாகவே இருக்கும் என்று எண்ணினுன். டன்சே கதவிடுக்கின் வழியே பார்த்தான். யாரும் வெளியே இல்லை. விரைவாகச்



செங்கற்களைப் பழையபடியே அடுக்கி மணலால் மூடிவிட்டான். மார்னரின் குடிசைக்கு வந்து ஐந்து மணித்துளிகள்தாம் ஆயிருக்கும். ஆனுல் அதற்குள் எவ்வளவோ நேரமாகிவிட்டதாக உணர்ந்தான். பைகளை இரண்டு கைகளிலும் தூக்கிக்கொண்டான். மார்னர் திடீரென வந்துவிட்டால் என்ன செய்வ தென்று எண்ணும்போது அவனுக்குப் பயம் மிகுதி யாயிற்று. விரைந்து இருட்டுக்குள்ளே மறைந்து விட்டுப் பிறகு அந்தப் பைகளைக் கொண்டு என்ன செய்யலாம் என்பதைப்பற்றி யோசிக்கலாம் என்று எண்ணினுன்.

உடனே கதவைச் சாத்திவிட்டு வெளியேறினுன். மார்னரின் பணத்தைக் காட்டிக் கொடுத்த கதவிடுக்கும், விளக்கு வெளிச்சமும் தன்னையும் காட்டிக் கொடுத்து விடக்கூடாது என்று கருதி மறைந்து வேறு வழியாகச் சென்றுன். மழையும் இருட்டும் மிகுதியாகிவிட்டன. இரு கைகளிலும் கனமான பைகளை ஏந்திக் கொண்டு செல்வது மிகவும் துன்பமானதாக இருந்தது. தன் சவுக்கையும் ஒரு கையில் பையுடன் சேர்த்துப் பிடித்துக்கொண்டிருந்தான். சிறிது தூரம் சென்ற பிறகு துன்பத்தைப் பற்றியெல்லாம் யோசிக்கலா மென்று எண்ணிக்கொண்டு இருட்டில் வேகமாக அடி யெடுத்து வைத்துச் சென்றுன்.

# 5. பணங் காணாதது கண்டு மார்னர் மனங் குமுறுதல்

டன்சே குடிசையைவிட்டு வெளியேறும்போது மார்னர் குடிசைக்கு முந்நூறு அடி தூரத்தில்தான் இருந்தான். முதுகில் ஒரு சாக்குப் பையைச் சுமந்து கையில் ஒரு சிறு லாந்தரைப் பிடித்துக் கொண்டு தள்ளாடிக் கொண்டே நடந்து வந்தான். அவன் உடல் சோர்வுற்றிருந்தது. ஆனால் உள்ளம் சோர்வுற்றிருக்கவில்லை. பாதுகாப்புணர்ச்சி என்பது பழக்கம் காரணமாக ஏற்படுவதே. இதுவரை பாதுகாப்பிற்கு ஊறுநேராததால் இனியும் நேராது என்ற எண்ணமே யாருக்கும் ஏற்பட்டு விடுகிறது. நாற்பதாண்டுகளாகச் சுரங்கத்தில் ஆபத்தின்றி வேலை செய்த ஒருவன், மேல் தளம் சரிந்துகொண்டிருக்கும்போதும், அதையுணராது தனக்கு இனி எவ்வித ஊறும் நேராது என்ற துணிவுள்ளத்தோடு காணப்படுகிறான்.

பல்லாண்டுகளாகப் புதிய மனிதர்களையோ, புதிய நிகழ்ச்சிகளையோ கண்டிராத ஒரேபடித்தான வாழ்க்கையைப் பெற்றிருந்த மார்னர் தனக்கு இனி எதிர்பாராத நிகழ்ச்சிகள் ஏற்படவுங் கூடுமென எதிர்பார்க்கவில்லை. அதனால்தான் அவன் தன் வீட்டையும், புதையலையும், வழக்கத்திற்கு மாறாகப் பாதுகாப்பின்றி விட்டுவிட்டு வந்திருப்பினும் மனச்சஞ்சலம் இல்லாமல் இருந்தான். வழி நடந்து வரும்போது மார்னர் தன் இரவுணவைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தான். அவ்விறைச்சியுணவு சூடாயும் சுவையாயும் இருக்கும் என்றும், அது பணச் செலவு இல்லாமல் கிடைத்தது என்றும் எண்ணி மகிழ்ந்தான். ஏனெனில் அந்த



உணவு குமாரி பிரிசில்லா லாம்மீட்டர் என்ற பெண்மணி அன்று பரிசாகக் கொடுத்தது. அவளுக்கு மார்னர் இன்று ஒரு லினன் புடைவை நெய்துகொண்டு போய்க் கொடுத்திருந்தான். இதுபோன்று பரிசாகக் கிடைக்கும்போதுதான் அவன் சூடான இறைச்சியைச் சுவைக்க நேரும். மார்னருக்கு இரவுணவுதான் விருப்பமிக்கதாயிருக்கும். ஏனெனில் அப்போது அவன் தன் தங்கப் புதையலையும் பார்த்துக்கொண்டே சாப்பிடலாமல்லவா? அதனால் ஆட்டிறைச்சி கிடைக்கும் போதெல்லாம் அதை அவன் இரவுணவுக்காகவே வைத்துக்கொள்வான்.

அன்று மாலையில் அவன் பன்றியிறைச்சியை நூலால் இறுகக் கட்டித் தறிமேலே தொங்கும் கம்பியொன்றில் சுற்றிக் கட்டி வைத்திருந்தான். வீட்டிற்குள் நுழைந்ததும் முதல் வேலையாக அந்த இறைச்சித் துண்டை அவிழ்த்துச் சுவை பார்த்த பிறகே கதவைக் கூட மூடவேண்டும் என்று நாக்கில் நீரூற எண்ணிக் கொண்டு வந்தான். கடந்த பதினைந்து ஆண்டுகளாக வராத திருடன் இன்று—அதுவும் மழையும் பனியும் மிகுந்த இந்த இருட்டில்—ஏன் வரப்போகிறான்? அதனால் சாப்பிடும் வரை கதவு திறந்திருந்தாலும் பரவாயில்லை என்று நினைத்தான். இவ்வாறு கவலையில்லாத மனத்துடன் வீட்டை நெருங்கினான்.

கதவருகே வந்ததும் அவன் கண்டது என்ன? கதவைத்திறந்து பார்த்தபோது எல்லாப் பொருள்களும் அவன் விட்டுச் சென்றபடியே இருந்தன; தீ மட்டும் சிறிது மிக்க வெப்பத்துடன் கொழுந்துவிட்டெரிந்தது. டன்சேவின் செருப்படையாளங்களை மார்னர் நடந்து

வரும்போது அவன் கால்களே அழித்துவிட்டன. மணல்மேலும் மார்னர் நடந்தாளுகலின், டன்சேவின் கையடையாளப் பதிவுகளும் தெளிவாகத் தெரியாது போய்விட்டன. மார்னர் தொப்பியையும், சாக்குப் பையையும் தூர எறிந்துவிட்டுத் தணலில் குளிர் காய்ந்து இன்பமுடன் பன்றியிறைச்சியை உண்ணலாம் என்று இருக்கையில் உட்கார்ந்தான்.

விளக்கின் ஒளியில் மார்னரின் வெளிறிய முகத்தையும், மெல்லிய உருவத்தையும் குழிந்த கண்களேயும் கண்டவர்கள் இரக்கம், பயம், ஐயம் இவையெல்லாம் கலந்த பார்வையுடன் ஏன் ராவிலோ மக்கள் அவனேப் பார்த்தனர் என்பதைப் புரிந்துகொள்வார்கள். ஆனல் மார்னரைப் போலச் சிறிதும் குற்றமற்றவர்கள் ஒரு சிலருக்குமேல் இருக்க முடியாது. அவனது பண ஆசை வளர்ச்சியும், பொன்னேயே கடவுளாய்க் கருதித் தொழுதலும் பிறருக்கு எவ்விதத்திலும் எத்தீங்கும் பயப்பனவாக இருக்கவில்லே.

மார்னரின் உள்ளத்தில் நம்பிக்கை என்னும் ஒளி அவிந்திருந்தது. அன்பு பாழடிக்கப்பட்டிருந்தது. அதனல் பணத்தையே நம்பி உயிர் வாழ்ந்து வந்தான். மனிதர்கள் விரும்பித் தொழும் பிற பொருள்களேப் போலவே பணமும் மார்னருக்கு இப்படிப்பட்ட ஒருருவத்தை அவனுக்கு அளித்தது. இடையீடின்றி எப்போதும் அவன் நாடாவையெறிந்து நெய்துவந்த தறியானது அவன் காது வேறு எந்த ஒலியையும் கேட்பதற்கு வாய்ப்பளிக்கவில்லே. வளர்ந்து வரும் அவனுடைய பொன் நாணயங்களும் தம்மைப் போல மார்னரும் தனிமை வாழ்வு எய்தும்படி செய்தன.



அடுப்பனலின் வெப்பம் சிறிது உடம்பில் ஏறிய பிறகு இரவு உணவை முடித்துக் கொண்டு பின்னர்ப் பொன் நாணயங்களே எடுத்துப் பார்ப்பதாயின் நேரங் கடந்துவிடும். அதனல் அவ்வினிய உணவை உண்ணும்போது வழக்கத்திற்கு மாருக மேசையின்மேல் பணத்தைப் பரப்பி வைத்து அதைப் பார்த்துக் கொண்டே சாப்பிடலாம் என்று எண்ணினன். இப்படி எண்ணிக் கொண்டே அவன் தன் இருக்கையினின்றும் எழுந்தான். ஐயப்பாடு எதுவுமின்றி விளக்கைத் தன் தறிக்கருகே எடுத்துச் சென்று தரையில் வைத்தான். மாறுதல் எதனேயும் கவனியாமல் செங்கற்களே அகற்றினன். உள்ளே ஒன்றுமில்லாததைக் கண்டதும் அவன் இதயமே வெடித்துச் சுக்குநூருகிவிடும் போலிருந்தது. ஆனல் பணம் களவு போயிருக்கும் என்ற எண்ணம் அவனுக்கு உடனே வந்துவிடவில்லே எனினும் பயங்கொண்ட நெஞ்சத்துடன் பை வைக்கப்பட்டிருந்த இடத்தில் தன் நடுங்கும் கையை விட்டு நன்ருகத் துழாவினன். தன் கண்களே தன்னே ஏமாற்றுகின்றனவோ என்று நினேக்கவும் முற்பட்டான். பிறகு விளக்கைக் கையில் எடுத்துப் புதையல் வைத்திருந்த இடத்தை நன்ருகக் கவனித்துப் பார்த்தான். அவனுக்குப் பயம் மேலிட்டுக் கொண்டே வந்தது. கடைசியில் அவனுடம்பெல்லாம் அதிர்ச்சியால் ஒரேயடியாக நடுங்கியது. அவன் கையிலிருந்த விளக்கும் கீழே விழுந்தது. கைகளேத் தலேமேல் வைத்துக் கொண்டே, ஒன்றும் புரியாதவனுய்ப் பணப் பைகளே வேறு எங்கேனும் வைத்துவிட்டிருப்போமோ என்று எண்ணிப் பார்க்கத் தொடங்கினன். சென்ற இரவு திடீரெனப் பைகளே இடமாற்றி வைக்கலாம்

என்று எடுத்து வைத்துவிட்டுப் பின் அவற்றை மறந்துவிட்டோமா என்றெல்லாம் எண்ணினன். ஆழமான குளத்தில் தவறி விழுந்துவிட்ட ஒருவன் தன் கைக்கு ஒரு வழுக்குக் கல் கிடைத்தாலும் அதைப் பற்றிக் கொள்ள முயல்வானல்லவா? அதுபோலவே மார்னரும் தன் ஞாபக மறதியால் வேறெங்கேனும் பணத்தை வைத்திருக்கவுங் கூடும் என்று எண்ணிய வனய்த் தனக்கு நேர்ந்த பேரிடியைச் சமாளிக்க முற் பட்டான். வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் தேடினன். படுக்கையைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தான்; உதறிப் பார்த்தான்; தட்டிப் பார்த்தான். விறகுக் குச்சிகள் வைத்திருந்த செங்கல்லடுப்பைப் போய்ப் பார்த்தான். இனிமேல் வீட்டுக்குள் தேடிப் பார்ப்பதற்கு வேறு எவ்விடமும் இல்லாது போகவே அவன் மீண்டும் மண்டியிட்டுக் குனிந்து புதையலிருந்த இடத்தைச் சுற்றிலும் கைவிட்டுத் துழாவித் துழாவிப் பார்த்தான். ஆனல் பணத்தைப்பற்றிய துப்பே ஒன்றும் தெரிய வில்லை.

அரிய பொருள் ஒன்றை இழந்தவர்கள் அதை வைக்காத இடத்தில் எல்லாம் போய்த் தேடுவதுபோல மார்னரும் மேசை முழுவதையும் துருவியாராய்ந்தான். வீட்டுக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்தான். வீணகத் தேடித்தேடிப் பார்த்து அவன் கண்கள் வலி எடுத்தது தான் கண்ட பலன். அவன் வீட்டில் பொன்னைத் தவிர மற்ற எல்லாப் பொருள்களும் அப்படியே இருந்தன.

மீண்டும் தன் நடுங்கும் கைகளைத் தலைமீது வைத்துக்கொண்டான்; கோவெனக் கதறியழத்



தொடங்கினன். பின் சிறிது நேரம் அசைவற்றுப் பித்துப் பிடித்தவன்போல நின்முன்; பின்னர்த் திடீ ரென்று திரும்பினன். தறியருகே ஓடினன். தான் உட்கார்ந்து தறி நெய்யும் இருக்கைக்கு அடியில் பொன் இருக்கிறதா என்று ஆவலுடன் பார்த்தான். அங்கேயும் அது இல்லை. அவனது கடைசி ஒரே நம்பிக்கையும் வீணயிற்று.

மார்னரின் எல்லா நம்பிக்கைகளும் அழிந்தன. இப்போதுதான் திருடனைப்பற்றிய நினைவு அவன் மனத்துள் தோன்றியது. திருடன்தான் பொன்னைத் திருடிக் கொண்டு போயிருக்க வேண்டும்; எப்படி யாவது அவனைக் கண்டுபிடித்துப் பணத்தைத் திரும்பப் பெறலாம் என்ற நம்பிக்கை அவன் மனத்தில் சிறிது துளிர்விட்டது. இந்த நம்பிக்கை அவனுக்குச் சிறிது புதிய பலத்தையும் கொடுத்தது. அதனல் தறிக்கருகேயிருந்த அவன் கதவருகே ஓடினன். கதவைத் திறந்தபோது வெளியில் கல் மாரி பெய்து கொண்டிருந்தது. சடார் சடாரென மழைத்தாரைகள் விழுந்து கொண்டிருந்தன. அந்த இருட்டில் திருடனின் காலடி அடையாளத்தைக் கண்டுபிடிக்க முடியாது. காலடி அடையாளமா? திருடன் எப்போது வந்தான்? காலையில் அவன் வீட்டை விட்டுப் புறப் பட்டுப்போய் மாலையில் திரும்பி வந்து பார்க்கும்போது, யாருடைய காலடியும் அங்குக் காணப்படவில்லை. மாலையில் நாம் வைத்த பொருள்கள் கூட எல்லாம் அப்படியேதாம் இருக்கின்றன என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். மணலும் செங்கல்லும் வேறு யாருடைய கையும் படாதவையாகவே அவனுக்குப் பட்டன. பைகளைத் தூக்கிக் கொண்டு

போனது திருடனு? அல்லது இரண்டாவது முறை யாகத் தன்னைத் தனித்துயருள் ஆழ்த்த விரும்பிய கொடிய மாயச் சக்தியா? என்று எண்ணினுன். பயத் தினுல் அவன் உள்ளமும் உடலும் ஒரேயடியாய்ச் சுருங்கின. திருடனை எப்படியும் கண்டுபிடிக்கவேண்டும் என்ற உறுதி கொண்டான். தன்னைப் பற்றிப் பலவித மாகச் சொல்லிய அண்டை அயலாரின் வார்த்தைகளை இப்போது நினைவுபடுத்திப் பார்த்தான்; இப்போது தான் ஐயங் கொள்ளும்படியாக முன்பு தன்னைப்பற்றி யாரேனும் பேசினுர்களா? என்று நினைவு கூர்ந்து பார்த்தான். "ஆம். ஜெம் ரோட்னி என்னும் பெட்டிக் கடைக்காரனுகத்தான் இருக்க வேண்டும். அவன்தான் என் பணத்தைப் பற்றிப் பலமுறை நான் வழியில் செல்லும்போது கேலியாகக் குறிப்பிட்டுப் பேசியிருக் கிருன். ஒருநாள் சுருட்டுப் பற்றுவதற்காக வந்து வெகுநேரம் வெளியே போகாமல் வீட்டுக்குள்ளேயே நின்று கொண்டிருந்தவனும் அவன்தான். அவன் தான் திருடியிருக்க வேண்டும்" என்று உறுதியாக எண்ணினுன் மார்னர்.

ரோட்னியை எப்படியும் கண்டுபிடித்துப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கச் செய்துவிடலாம் என்று எண்ணிய மார்னர் அவன் பணத்தைத் திருப்பித் தந்தால் போதும், பணம் திருடியதற்காகத் தண்டனை எதுவும் அவனுக்குக் கொடுக்கப்பட வேண்டியதில்லை என்றும் எண்ணினுன். கள்வனைக் கைப்பிடியாகப் பிடித்தே தீரவேண்டும். எப்படியாயினும் ராவிலோ ஊர்ப் பெருமக்களிடம்—மதகுரு, ஊர்க் காவலாளர், ஸ்கொயர் காஸ் இவர்களிடம்—திருட்டைப் பற்றித் தெரிவித்து ரோட்னியாவது வேறு எவனுவது



தன்னிடமிருந்து திருடிய பணத்தைத் திருப்பிக் கொடுக்கச் செய்யவேண்டும் என்று முறையிட வேண்டு மென்று தீர்மானித்தான். இந்த நம்பிக்கையில் அவன் தன் தொப்பியைக்கூட எடுத்துக் கொள்ளாமல், கதவையும் மூடாமல், உணர்ச்சியாலுந்தப்பட்டு வெளியே ஓடினுன். சிறிது தூரம் ஓடியதும், மேல் மூச்சும் கீழ் மூச்சும் வாங்கியதால் அவனுல் மேலே போக முடியவில்லை. அதனுல் ஊரின் எல்லைக்குள் வந்தும் சிறிது தூரம் மெதுவாகவே நடந்தான். 'வான வில்' என்ற விடுதியை அடைந்தான்.

மார்னரின் கருத்துப்படி, 'வான வில்' என்ற இடம் செல்வமும், உடற்செழிப்பும் மிக்க ஆடவர்களுக் குரிய இடமாகும். அவர்கள் மனைவியர் விலையுயர்ந்த பட்டுத் துணிகளை அணிந்து அங்கே நடமாடுவர். அவ் விடத்தில்தான் ஊர்ப் பெருமக்கள் எல்லாரிடமும் தன் இழப்பினைத் தெரியப்படுத்தித் திருட்டுப் போன பொருளைத் திரும்பிப் பெற எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும் என்று எண்ணினுன். வானவில்லில் மன்றம் கூடுமிடத்தை அடைந்தான். வானவில்லின் ஒரு பகுதியில்தான் அவ்வூர்ப் பெருமக்கள் ஒன்றுகூடிக் குடித்தும் பேசியும் களிப்புறுவர். அம் மன்றத்திற் கருகேதான் நிலக்கிழார் காஸின் மாளிகை அமைந் திருந்தது. அன்று அம்மாளிகை வழக்கத்திற்கு மாருக இருட்டாயிருந்தது. காட்பிரே போன்ற பலரும் ஆஸ்காட் அம்மையாரின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடப் போய்விட்டனர் என்றறிந்தான். எனினும் ஒரு சிலர் அம் மன்றத்தில் இருந்தனர். அவர்கள் பேய்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது மார்னரும் ஒரு பேய்போலத் தலைவிரி

கோலமாக அங்கே வந்தான். சில மணித்துளிகள் அங்கே அமைதி நிலவியது. ஓடி வந்ததால் மூச்சு இரைத்துக் கொண்டிருந்ததாலும், தாங்க முடியாத துக்கத்தாலும் மார்னரால் வாய் திறந்து சிறிது நேரம் ஒன்றும் பேச முடியவில்லை. பிறகு சினெல் என்பவன் மார்னரைப் பார்த்து, "என்ன வேண்டும், எதற்காக இங்கு ஓடி வருகிருய்?" என்று கேட்டான்.

"திருடிவிட்டார்கள்!" என்று இன்னும் மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கக் கூறினன் மார்னர்; "என்னிட மிருந்த பணத்தை எல்லாம் திருடிவிட்டார்கள். போலீசின் உதவி எனக்கு வேண்டும்—நீதி வேண்டும் —ஸ்கொயர் காஸ், கிராக்கன் தார்ப்..........." என்று புலம்பினன்.

"ரோனி, அவனைப் பிடித்து நிறுத்து. அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று நினைக்கிறேன். அவன் உடல்எல்லாம் ஈரமாய் நனைந்திருக்கிறது" என்ருன் சினெல்.

மார்னர் நிற்கும் இடத்திற்கருகேதான் ரோட்னி அமர்ந்திருந்தான். ஆனல் மார்னருக்கு உதவிபுரியும் விருப்பம் அவனுக்குச் சிறிதும் இல்லை. அதனல் அவன் சினெல்லைப்பார்த்து, "சினெல், விருப்பமிருந்தால் நீயே வந்து அவனுக்கு உதவிசெய். அவனிடம் திருடியிருக்கிருர்கள்; கொலையும் செய்திருக்கிருர்கள் என நினைக்கிறேன்" என்ருன்.

"ஜெம் ரோட்னி!" என்று அவனைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே கத்தினன் மார்னர். இதற்குமுன் ஒரு முறையோ இருமுறையோ ரோட்னி மார்னரின் குடிசைக்குப் போயிருக்கிருன்.



"ஏ, மார்னர், என்னை என்னசெய்யச் சொல் கிருய்?" என்று பதிலுக்கு இரைந்து கத்தினன் ரோட்னி.

மார்னர் ரோட்னியைப் பார்த்து, "நீதான் என் பணத்தைத் திருடியிருக்கிருய். அதைத் திருப்பிக் கொடுத்துவிடு. உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன். போலீசைக் கூப்பிட்டு உன்மீது ஏவிவிடமாட்டேன். அதைத் திருப்பிக்கொடுத்துவிடு. உனக்கு நான்-உனக்கு ஒரு தங்க நாணயம் தருகிறேன்" என்ருன்.

"நானு உன் பணத்தைத் திருடினேன்! நான் பணத்தைத் திருடினேன் என்று இன்னொரு முறை சொன்னல் இதோ என் கையிலிருக்கும் கோப்பையை உன் முகத்தின்மீது விட்டு வீசி எறிவேன்" என்று கோபத்தோடு கூறினன் ரோட்னி.

நிலக்கிழாரான சினெல் அருகில் வந்து மார்னரின் தோளைப் பிடித்துக் கொண்டு, "நில் மார்னர், நில். ஏதாவது நீ சொல்ல வேண்டுமானல் புரியும் படியாகச் சொல், நீ சொல்வதை நாங்கள் கேட்க வேண்டுமானல் நிதானமாக நின்று பேசு. நீ தெப்பக்கட்டைபோல் நனைந்திருக்கிருய். உட்கார். நெருப்பில் உன்னை உலரவைத்துக்கொள். சொல்லவந்ததை நேரடியாகச் சொல்" என்ருன்.

நிலக்கிழாரின் அருகிலிருந்த குதிரை இலாடக் காரன் ஒருவன் மார்னரைப் பார்த்து, "முறைப்பும் உறுமலும் இங்கே வேண்டாம். உன்னைப் பைத்திய மென்றே எல்லோரும் நினைத்து விடுவர். அதனல் தான் உன்னிடம் நான் முதலில் பேசவில்லை" என்று மொழிந்தான்.

"அவரை முதலில் உட்காரச் சொல்லுங்கள்" என்று சூழ இருந்தோரெல்லாம் குரல் எழுப்பினர்.

நிலக்கிழார் மார்னரை மேலங்கியைக் கழற்றுமாறு செய்து நெருப்பருகே ஒரு நாற்காலியின் மேல் அமர வைத்தார். தன் பணத்தைத் திரும்பப் பெறும் ஒரே நோக்கத்தைத் தவிர வேறு கருத்தொன்றுமில்லாத மார்னரும் தடையின்றி அங்கிருப்போரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தான்.

நிலக்கிழார் மார்னரின் அருகில் உட்கார்ந்து கொண்டு, "சரி, இப்போது நீ சொல்ல வேண்டியதைச் சொல். உன்னிடம் யாராவது திருடிவிட்டார்களா? தெளிவாகச் சொல்" என்று கேட்டார்.

அதற்குள் ரோட்னி, "மீண்டும் நான்தான் பணத்தைத் திருடினேன் என்று சொல்லப் போகிறான். அவன் பணத்தை எடுத்துக் கொண்டு நான் என்ன செய்திருக்கிறேன்? அவன் பணத்தை எடுப்பதைவிட மதகுருவின் அங்கியை எடுத்து அணிந்து கொள்ளலாம்" என்றான்.

"நீ பேசாதிரு ஜெம். அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்போம்" என்றார் நிலக்கிழார்.

அப்போது மார்னர் தன் கதையைக் கூறினான். சுற்றியிருந்தோர் பணம் எப்படி மாயமாய்க் காணாது போயிற்று என்பதைப்பற்றிப் பல குறுக்குக் கேள்விகள் கேட்டனர். அவன் உண்மையாக நடந்தவற்றை எல்லாம் உரைத்ததைக் கேட்ட கூட்டத்தினர் அவன் மேல் இரக்கம் கொள்ளலாயினர். முதலில் சிறிது ஐயுறவு கொண்டிருந்தவர்கள் அது நீங்கப் பெற்றனர்.



மார்னர் உண்மைக்கு மாறாக எதுவும் கூறமாட்டான் என்றுதான் எல்லோரும் நம்பினர். ஆனால் மார்னர் கதவைச் சாத்தாமல் போகும் தருணத்தை எதிர் பார்த்துக்கொண்டே திருடன் எப்படிக் காத்திருந்திருக்க முடியும் என்று கூட்டத்தினர் வியந்து விட்டு, "இது மார்னருக்குப் போதாத காலம். இனி என்ன செய்வது? வீணாகப் போலீசுக்குத் தொந்தரவு கொடுப்பதிலும் பயனில்லை" என்று முடிவுகட்டினர்.

நிலக்கிழார் மார்னரைப் பார்த்து, "இக்காரியம் செய்தது ரோட்னியல்லன். நீர் வீணாக ரோட்னியைச் சந்தேகப்படக் கூடாது. நீர் வீட்டை விட்டுப் புறப்படு வதற்கு வெகு நேரத்திற்கு முன்பிருந்தே ரோட்னி என்னுடன் இங்கேதான் இருந்திருக்கிறார்" என்றார்.

'குற்றமற்றவனைப் போய் ஐயுறக்கூடாது' என்று ஒத்தூதினார் கூட்டத்திலிருந்த ஒருவர்.

மார்னருக்குத் தானே ஒருமுறை வீணாக ஐயுறப் பட்டுக் குற்றஞ் சாட்டப்பட்டது திடீரென நினைவுக்கு வந்தது. உடனே நாற்காலியைவிட்டு எழுந்து ரோட்னி இருக்குமிடம் சென்று, "என்னை மன்னித்து விடு, ரோட்னி. நான் தவறாக உன்னை ஐயுற்று விட்டேன். நீ திருடியதாகக் கூறமுடியாது. திருடியதைப் பார்த்தவர் ஒருவருமில்லை. நீ ஒருவன்தான் என் வீட்டுக்கு அடிக்கடி வந்திருக்கிறாய். ஆனால் நான் உன் மீது குற்றம் சுமத்தவில்லை. யார்மீதும் குற்றம் சுமத்த வில்லை. நான்...." என்று துயரமிகுந்தவனாய்க் கைகளைத் தலைமேல் வைத்துக் கொண்டு, "நான் பணத்தை எங்கே வைத்திருப்பேன் என்று நினைத்துப்பார்க்க முயல்கிறேன்" என்று முடித்தான்.

''அந்தப் பைகளில் எவ்வளவு பணம் இருக்கும்?'' என்று ஆவலுடன் கேட்டான் இலாடக்காரன்.

''இருநூற்று எழுபத்திரண்டு பவுன், பன்னிரண்டு ஷில்லிங்கு, ஆறு பென்சு. நேற்று இரவுதான் நான் கணக்கிட்டுப் பார்த்து வைத்திருந்தேன்'' என்று உட்கார்ந்து கொண்டு புலம்பியவாறு கூறினன் மார்னர்.

இலாடக்காரன், ''ஏன், அவற்றைத் தூக்கிப் போவதற்கு அவ்வளவு ஒன்றும் கனமாய் இருந்திருக்காது. யாரோ வழியில் போகிறவன் உள்ளே நுழைந்திருப்பான், எடுத்துக்கொண்டு போய்விட்டான். உன் மங்கிய பார்வையால் அவனுடைய காலடையாளத்தைக்கூடக் கண்டுபிடிக்கவில்லை. சரி, இப்போது ஊர்க்காவலன் வீட்டிற்குக் கூட்டத்திலிருந்து இரண்டு பேர் வந்தால் போகலாம். அவன் உடல் நலமில்லாது படுக்கையில் கிடக்கிருன். எதற்கும் அவனிடம் போய் உன் கதையைச் சொல்லலாம்'' என்ருன்.

மழை இன்னும் பெய்து கொண்டிருந்தது. மார்னருக்குச் சில பழைய உலர்ந்த துணிகள் கொடுக்கப் பட்டன. இருவர் உடன்வர, மார்னர் மழையில் நனைந்து கொண்டே வெளியே புறப்பட்டான்.

---

## 6. காட்பிரே குதிரையை இழந்து வருந்துதல்

ஆஸ்காட் அம்மையாரின் வீட்டில் விருந்தும் நடனமும் முடிந்து நடு இரவில் திரும்பிய காட்பிரே, டன்சே வீட்டுக்குத் திரும்பி வராதது குறித்து வியப்புக் கொள்ளவில்லை. ஒரு வேளை அவன் குதிரையை விற்காமல் இருந்திருக்கலாம்; அதனுல் அதை விற்பதற்காக அங்கேயே காத்துக் கொண்டிருக்கலாம்; அல்லது மூடுபனியும் மழையும் பெய்யும் இரவில் திரும்பி வர விரும்பாது வழியில் உள்ள ஏதாவது ஓர் ஊரில் விடுதியில் தங்கியிருக்கலாம் என்று நினைத்தான். எனவே அவன் வராததற்காகச் சிறிதும் கவலைப்படவில்லை. அவன் மனம் நான்சியின் கடைக்கண் பார்வையையும், நடையையும் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது. அவளருகே யிருக்கும்போது குதிரையைப் பற்றியும், டன்சேவைப் பற்றியும் எண்ணங்கள் மனத்தில் தோன்றியதற்காகத் தன்னையே கோபித்துக் கொண்டான்; தன் வாழ்க்கையினையே கடிந்து கொண்டான்.

அடுத்த நாள் அவ்வூர் முழுதும் மார்னரின் திருட்டைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. மற்றவர்களைப் போலவே காட்பிரேவும், அத்திருட்டைப் பற்றிய செய்திகளைக் கேட்டறிவதிலும், அதைப்பற்றிப் பேசுவதிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தான். பெய்த மழை கள்வனின் காலடி அடையாளங்களை எல்லாம் அழித்துவிட்டது. ஆனல் மார்னர் ஊன்றிப் பார்த்துக் கொண்டே வந்தபோது ஓரிடத்தில் ஊரின் எதிர்த் திசையில் ஒரு சக்கிமுக்கிக் கல் கீழே விழுந்து சேற்றில் புதைந்து கிடந்ததைக் கண்டான். அது அவனுடைய

தன்று. அவனிடமிருந்த ஒரே ஒரு தீ மூட்டிக் கல் இன்னும் அவன் அலமாரியிலேயே இருந்தது. ஊரிலுள்ளோரிற் பலர் அந்தத் தீ மூட்டிக் கல்லுக்கும் திருட்டுக்கும் கொஞ்சமேனும் தொடர்பு இருக்கும் என்று பேசிக் கொண்டனர். ஒரு சிலர் அக் கல்லுக்கும் கள்வனுக்கும் எவ்விதத் தொடர்பும் இருக்க முடியாது என்று பேசிக் கொண்டனர். சரியோ, தப்போ, ஊரில் ஒவ்வொருவரும் தமக்குத் தோன்றியபடி எண்ணிக் கொள்ள உரிமை உண்டல்லவா? ஒரு சிலர்க்கு இதெல்லாம் ஒரே மாயமாகவே இருந்தது.

'வானவில்'லில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அதற்குச் சமயத் தலைவர் இராக்கன்தார்ப்பே தலைமை தாங்கினார். நிலக்கிழார் காஸம், பிற ஊர்ப் பெரு மக்களும் கூடியிருந்தனர். அங்குக் கூடியிருந்தவருள் சினெல் என்ற நிலக்கிழாருக்கு அப்போதுதான் ஒரு செய்தி நினைவுக்கு வந்தது. ஒருநாள் நரிக்குறவன் ஒருவன் மார்னர் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்ததைப் பார்த்ததாகவும், அவன் ஒரு தீமூட்டிக் கல்லை வைத்திருந்ததாகவும் கூறினார். அந்தக் குறவனின் பார்வையே ஒரு மாதிரியாயும் ஐயமூட்டுவதாயும் இருந்ததென்றும் கூறினார். மற்றவர்களும் தாங்களும் அக்குறவனைப் பற்றி அப்போதே ஐயுறவு கொண்டதாக நினைவு கூர்ந்தனர். ஆனால் மார்னரே இந்த ஐயுறவுகளையெல்லாம் ஒரு கணத்தில் தகர்த்தெறிந்துவிட்டான். ஒருநாள் அக்குறவன் தன் வீட்டுப் பக்கம் வந்தது உண்மையென்றும், ஆனால் வீட்டுக்குள்ளே நுழையவில்லை என்றும் கூறினான். தான் கதவைத் திறந்து ஒன்றும் வாங்கவில்லை என்று சொன்னதும் அவன் திரும்பிப் போய்விட்டான் என்றும் கூறினான்.



நரிக்குறவனை ஐயுறுவது பொருந்தாது என்றே காட்பிரேவும் கருதினான். அக் குறவனிடமிருந்து தான் ஒரு கத்தி வாங்கியதாகவும், அவன் பார்வைக்கு நல்லவனாயும், கண்டாரால் விரும்பத்தக்கவனாயுமே இருந்தான் என்று கூறினான். ஆனால் அங்கிருந்த மற்றையோர் 'காட்பிரே வயதில் இளையவன்; உலக அனுபவம் இல்லாதவன்' என்று கூறிவிட்டனர்.

இப்போது காட்பிரேவுக்கு டன்சேவையும், தன் குதிரையையும் பற்றிய கவலை வரவர மிகுதியாகிக் கொண்டே வந்தது. அவனைப்பற்றி ஏதாவது செய்தி கிடைக்குமா எனக் கருதி நண்பகலில் ஒரு குதிரை மீதமர்ந்து அருகிலுள்ள பாதர்லி என்ற ஊருக்குப் போனான். அவன் குதிரை விற்ற பணத்தைக் கொண்டு ஒருமாதம் வரை வேறிடத்தில் தங்கிச் செலவழிக்கலாம் என்று திட்டம்போட்டுக் கொண்டுதான் திரும்பிவரவில்லை போலும் என்ற பயம் அவனுக்கு ஏற்பட்டுக் கொண்டு வந்தது. வழியில் ஏதேனும் தீங்கு ஏற்பட்டிருக்கும் என்று நினைத்துப் பார்க்க அவனுக்குத் தோன்றவில்லை. திருமதி ஆஸ்காட் வீட்டில் நடனம் முடிந்து வந்து தனிமையாய் இருக்கும் இவனுக்குத் தன் குதிரையை அவனிடம் ஒப்படைத்துவிட்டோமே என்ற கவலையே துணையாக இருந்தது. அவன் கவலையும் பயமும் மிகுதியாகிக்கொண்டே வந்தன. அப்போது ஒரு குதிரை அவனை நோக்கி வருவதைக் கண்டான். அது தன் குதிரையாகத்தான் இருக்கும் என்று நம்பினான். ஆனால் அருகில் வந்ததும் அது தன் குதிரையன்று என்று அறிந்தான். அதன்மேல் ஏறி வந்தவனும் டன்சே அல்லன்; ஆனால் காட்பிரேவின் குதிரையை வாங்க விரும்பிய பிரைசி என்பவன்தான்

அவன் காட்பிரேயைக் கண்டதும், தன் குதிரையினின்று இறங்கிக் காட்பிரேவுடன் பேச்சுக் கொடுத்தான்.

"காட்பிரே, உன் தம்பி நல்ல அதிர்ஷ்டக்காரன், இல்லையா?" என்று தொடங்கினான்.

"என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான் காட்பிரே.

"உன் தம்பி இன்னும் வீடு திரும்பவில்லையா?" என்று கேட்டான் பிரைசி.

"என்ன நடந்தது? விரைவாகச் சொல். என் குதிரையை அவன் என்ன பண்ணினான்?" என்று துடித்தான் காட்பிரே.

"ஆ, உன் குதிரை என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் அதை நீ அவனிடமே கொடுத்து விட்டதாக டன்சே கூறினான்" என்றான் பிரைசி.

"குதிரையைக் கீழே வீழ்த்தி அதன் கால்களைப் போக்கடித்துவிட்டானா?" என்று பதட்டத்துடன் கேட்டான் காட்பிரே.

"அதைக் காட்டிலும் மோசமானது நடந்து விட்டது. இதைக் கேள், அக்குதிரையை மிக அதிக விலை கொடுத்து நூற்றிருபது பவுனுக்கு வாங்கிக் கொள்வதாக நான் ஒப்புக்கொண்டேன். ஏனெனில் அக் குதிரையை நான் வெகுகாலமாக வாங்கவேண்டும் என்று இருந்தேன். ஆனால் உன் தம்பி இருக்கிறானே, அவன் குதிரைமேல் ஏறிக் கொண்டு காற்றாய்ப் பறந்தான். வழியில் ஓர் உயரமான முள் வேலியைத் தாண்டும்போது காலிடறிக் கீழே பள்ளமான குழியில் விழுந்து குதிரை இறந்துவிட்டது. சிறிது நேரம் குதிரை அங்கேயே கிடந்தது. டன்சே இன்னும் வீடு திரும்பவில்லையா?" என்றான் பிரைசி.



"வீட்டுக்கா? இல்லையே. அவன் வராதிருப்பதே நல்லது. நான் எவ்வளவு பெரிய முட்டாள்! இக் குதிரைக்கு இப்படி நேரும் என்று முன்கூட்டியே எனக்குப் பட்டிருந்தால், எவ்வளவு கவனமாய் இருந்திருப்பேன்!" என்றான் காட்பிரே.

பிரைசி அவனைப் பார்த்து, "ஆனால் அவன் எங்கே போயிருக்கக்கூடும்? 'பாதர்லி'யில் அவனைக் காணவே இல்லையே. அவனுக்குக் காயம் ஒன்றும் பட்டிருக்காது. ஏனெனில் அவன் விரைவிலேயே எழுந்து நடந்து போய்விட்டான்" என்றான்.

"காயமா? அவனுக்கா? அவனுக்கு எப்போதும் காயம் ஏற்படாது. பிறருக்குக் காயம் ஏற்படுத்துவதற்காகவே அவன் இருக்கிறான். சரி, நான் இப்போது திரும்பிப் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே தான் வந்த வழியே குதிரையைத் திருப்பினான். பிரைசியிடமிருந்து அகன்று போதற்கு விரும்பினானேனும், அவனைப் பார்த்து, "நீயும் ராவிலோவுக்கு வருகிறாயா?" என்று கேட்டான்.

"இல்லை. நான் அவ்வூரைச் சுற்றிக்கொண்டு இப்போது தான் வந்தேன். இந்தச் செய்தி எல்லாரிடமும் பரவிப் பழைய செய்தியாகும்வரை தலைமறைவாயிருக்கவேண்டும் என்று டன்சே விரும்பியிருக்கிறான் போலும். ஒருவேளை அவன் விட்பிரிட்ஜிலுள்ள விடுதிக்குப் போய்த் தங்கியிருக்கலாம். அவ்விடுதிதான் அவனுக்கு மிகவும் பிடித்தமான இடம்" என்றான் பிரைசி.

"இருக்கலாம்" என்று சிந்தனையில்லாமலே பதிலுரைத்தான் காட்பிரே.

இவ்வாறு கூறிவிட்டுக் காட்பிரே வீடுநோக்கி மெதுவாகத் திரும்பினான். இனிமேல் தந்தையிடம் எதையும் மறைத்துவைத்துக் கொண்டிருக்கக் கூடாது என்றும், எல்லாவற்றையும் அவரிடம் சொல்லிவிட வேண்டியதுதான் என்றும் முடிவுசெய்தான். 'அடுத்த நாள் காலையிலேயே பணத்தைப்பற்றிச் சொல்லிவிட வேண்டும். அதையடுத்து உடனே மற்றவற்றையும் சொல்லிவிடவேண்டும். ஏனெனில் அதற்குள் டன்சே வந்துவிட்டால் அவன் இச்சமயத்தில் கோபத்தில் வேறுவிதமாகத் திரித்தும் கூட்டியும் சொல்லிவிடுவான். இதற்குள் அவளே வந்து சொல்லிவிட்டால், நிலைமை இதைவிட மோசமாகிவிடும். அவள்வேறு சொல்லிவிடப் போவதாகப் பலமுறை பயமுறுத்தியிருக்கிறாள்' என்று தனக்குள் நினைத்துக் கொண்டிருந்தான். எப்படித் தன் கதையை அப்பாவிடம் நல்ல முறையில் எடுத்துக் கூறுவது என்பதைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தான். 'தந்தை தம் குடும்பப் பெருமையை எண்ணியாவது என் திருமண இரகசியத்தை யாரிடமும் வெளியிட மாட்டார். என்னையும் வீட்டைவிட்டுத் துரத்திவிட மாட்டார். ஏனெனில், இச்செய்தி ஊரிலுள்ளோர்க்கெல்லாம் தெரிந்துவிட்டால் பத்துமைல் வட்டாரத்தில் ஒவ்வொருவரும் இதைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பார்கள்' என்று எண்ணினான்.

மறுநாள் செய்யவேண்டிய செயல்களைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்தவனாய்ப் படுக்கைக்குச் சென்றான். ஆனால் காலையில் எழுந்ததும் முதல்நாள் செய்த



முடிவினை மாற்றிவிடத் தீர்மானித்தான். ஏனெனில் தந்தைக்குத் தெரிந்துவிட்டால் பிறகு பின்னால் ஏற்படும் விளைவுகள் எல்லாம் கொடுமையானவையாகவே இருக்கும் என்று எண்ணிப்பார்த்துக் கொண்டிருந்தான். டன்சேவின்மேல் அவர் கொண்டிருக்கும் கோபத்தை எப்படியாவது குறைத்துவிட முயல்வதே நல்லது எனத் தீர்மானித்தான். டன்சே சிலநாட்கள் வரை வீட்டுக்கு வராமலிருப்பதே மிக நல்லது என்று எண்ணினான்.

# 7. காட்பிரே உண்மையை ஒளிக்காது உரைத்தல்

காட்பிரே மறுநாட்காலையில் வழக்கத்திற்கு முன்னதாகவே படுக்கையைவிட்டெழுந்து காலையுணவு கொண்டான். பிறகு தன் தந்தையின் அறைக்குச் சென்று அவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஸ்கொயர்—அவன் தந்தை—எப்போதுமே அந்தச் சிவப்புமாளிகையில் எல்லோரும் சாப்பிட்ட பிறகு கடைசியாகச் சாப்பிடுபவர். நல்ல உயரமும் பருமனும் உடையவர். அதிகாரப் பார்வையுடையவர். அவர் தம் அறைக்குள் நுழையும்போதே அங்குத் தம் மகன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டார். அன்புச்சொல் எதுவும் முதலில் சொல்லாதவராய் மகனைப் பார்த்து, "என்ன, காலையுணவு இன்னும் ஆகவில்லையா?" என்று கேட்டார்.

"ஆய்விட்டது. நான் சாப்பிட்டு விட்டேன். உங்களைப் பார்த்துப் பேசுவதற்காகவே இங்கே காத்திருக்கிறேன். நேற்றுக்கு முந்தியநாள் என் குதிரைக்குப் போதாதகாலம் ஏற்பட்டு விட்டது" என்றான்.

"என்ன, காலை ஒடித்துக்கொண்டதா? உனக்கு நன்றாகச் சவாரி செய்யத்தெரியும் என்றுதான் நினைத்து வந்திருக்கிறேன். என் வாழ்க்கையில் ஒருநாள்கூட என்குதிரை கீழே விழுந்தது கிடையாது. அப்படிக் குதிரை கீழே விழும்படி செய்திருந்தால் என் தந்தை எனக்கு ஒருபுதிய குதிரை வாங்கித் தந்திருக்கமாட்டார். என்னிடம் இப்போது பணமில்லை. அந்தப்பயல்



பவுலரை இனியும் நம்பிக்கொண்டிருக்க முடியாது. போனமாதமே எனக்கு நூறு பவுன் தருவதாகச் சொல்லியிருந்தான். இன்னும் தரவில்லை. இனிப் பொறுக்க முடியாது. எனக்குப் பணம் மிக முடையாக இருக்கிறது" என்றார்.

அப்பாவிடம் பேசுவதற்கு இதைவிட மோசமான சந்தர்ப்பம் இருக்கமுடியாது என்று நினைத்தான் காட்பிரே. என்றாலும் பேசத்தொடங்கியாகிவிட்டது; அதனால் வந்தபேச்சைச் சொல்லி முடித்துவிட வேண்டும் என்று நினைத்தான்.

"குதிரையின் கால்கள் ஒடிவதினும் மோசமான துரதிர்ஷ்டம். குதிரையே இடறிவீழ்ந்து இறந்துவிட்டது" என்றான்.

தந்தை மௌனமாயிருந்தார். காட்பிரே தொடர்ந்தான்: "ஆனால் எனக்காக இன்னொரு குதிரை வாங்கப் பணம் கேட்க வந்திருப்பதாக எண்ணாதீர்கள். டன்சே குதிரையை விற்பதற்காக ஏறிச்சென்று நூற்றிருபது பவுனுக்குப் பேரம்பேசினான். ஆனால் உடனே அவனே குதிரைமீது ஏறிச்சென்று அதைக் கொன்றுவிட்டான். அப்படிக் குதிரை சாகாதிருந்தால் உங்கட்கு இப்போது நூற்றிருபது பவுன்கள் கொண்டுவந்து கொடுத்திருப்பேன்."

உடனே தந்தை வியப்புமிக்கவராய்க் காட்பிரேவைப் பார்த்தார். தம்மிடம் நூற்றிருபது பவுன் தருமளவுக்கு அவன் அன்பு மிகுதியானது எப்படி என்பது அவருக்கு வியப்புக்குரியதாகவே இருந்தது.

"நடந்தது இதுதான். என்னை மன்னிக்க வேண்டும். குற்றம் என்மேல்தான். பவுலர் நூறுபவுன்

களையும் வாடகைக்காகக் கொடுத்துவிட்டார். சென்ற மாதமே ஒருநாள் நான் பண்ணைத் தோட்டத்திலிருக்கும் போது அவற்றைக் கொடுத்துவிட்டார். டன்சே அப் பணத்தைக் கேட்டான். நானும் கொடுத்துவிட்டேன். ஏனெனில் இதற்குள் உங்களிடம் எப்படியாவது பணத்தைக் கொடுத்துவிடலாமென்று நினைத்தேன்" என்ருன் காட்பிரே.

ஸ்கொயரின் முகம் கோபத்தால் சிவந்து காட்டியது. காட்பிரே பேசி முடிப்பதற்குள்ளாகவே, "நீ டன்சேவுக்குக் கொடுத்தாயா? எவ்வளவு நாளாய் டன்சேவும் நீயும் இணைபிரியாத நட்புக் கொண்டிருக்கிறீர்கள்? என் பணத்தைக் கையாடிக் கொண்டும் வருகிறீர்கள்? வரவரப் போக்கிரிகளாகிக்கொண்டு வருகிறீர்களா? உங்களையெல்லாம் வீட்டைவிட்டே துரத்திவிட்டு இரண்டாம் முறையாகத் திருமணம் செய்துகொண்டு விடுவேன். டன்சே வேண்டுமென்ருனும், இவன் கொடுத்துவிட்டானும். இதில் ஏதோ இருக்கிறது" என்று படபடத்துப் பேசினர்.

"இதில் சூது ஒன்றுமில்லை. நானே பணத்தையெல்லாம் செலவு செய்திருக்க முடியாது. டன்சே பணம் கொடு என்று கேட்டுக்கொண்டேயிருந்தான். நான் ஒரு முட்டாள். அவன் கேட்டதும் கொடுத்து விட்டேன். ஆனல் நான் திருப்பிக் கொடுத்து விடலாம் என்றிருந்தேன். திருடிக்கொள்ளவேண்டும் என்று எப்போதும் நினைத்ததேயில்லை. இதுதான் உண்மை" என்ருன் காட்பிரே.

"அப்படியானல் டன்சே இப்போது எங்கேயிருக்கிருன்? அவனைப் போய் இழுத்துக்கொண்டுவா. எதற்காக அவனுக்குப் பணம் என்று கேட்கிறேன். அவன் மனம்வருந்தி மன்னிப்புக் கேட்பான். ஆனல் நான் முன்பு சொன்னதுபோல் அவனை வீட்டை விட்டே துரத்திவிடுகிறேன், பார். போய் அவனை இங்கே கொண்டுவா" என்ருர்.



"டன்சே இன்னும் திரும்பிவரவேயில்லை, ஐயா," என்ருன் காட்பிரே.

"அப்படியானல் அவன் தன் கழுத்தையும் நெரித்துக் கொண்டானு?" என்று கேட்டார் தந்தை.

"இல்லை. அவனுக்குத் தீங்கு ஏதும் ஏற்படவில்லை. குதிரை மட்டும் இறந்து கிடந்தது. டன்சே நடந்து போயிருக்க வேண்டும். எப்படியும் அவனை இங்கே பார்க்கலாம். இப்போது அவன் எங்கே இருக்கிருன் என்று எனக்குத் தெரியாது" என்ருன் காட்பிரே.

டன்சேவை இப்போது கண்டுபிடிக்க முடியாது என்பதை உணர்ந்த ஸ்கொயர், "சரி, நீ எதற்காக அவனிடம் பணத்தைக் கொடுத்தாய்? அதை முதலில் எனக்குச் சொல்" என்று காட்பிரேவைத் திட்டிக் கொண்டே கேட்டார்.

காட்பிரேவுக்குப் பொய் சொல்ல விருப்பமில்லை. அதனல் தயங்கிக் கொண்டே, "எனக்குத் தெரியாது" என்று மெதுவாகச் சொன்னன்.

"உனக்குத் தெரியாதா? நீ எதற்காகக் கொடுத்தாய் என்பது எனக்குத் தெரியும். நீ ஏதாவது சூழ்ச்சி செய்து கொண்டிருந்திருப்பாய். அதை ஒருவரிடமும் சொல்லிவிட வேண்டாமென்று அவனுக்குக் கையூட்டுத் தந்திருப்பாய்" என்று காட்பிரே திடுக்கிடும்படியாகப்

பேசினர். தந்தையின் ஊகம் ஏறக்குறையச் சரியாக இருப்பதைப் பார்த்து அவன் நெஞ்சம் படக்படக் கென்று மிக வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. இந் திடீர்ப் பயம் அவனை அடுத்த படிக்குப் போகும்படி உந்தியது.

சிறிதும் கவலை கொள்ளாதவனைப் போலச் சமா ளிக்க முயன்று கொண்டே, "டன்சேவுக்கும் எனக்கு மிடையே ஒரு சிறு ஒப்பந்தம். அது வேறு யாருக்கும் முக்கியமில்லை. உங்களுக்கும் அது தெரிவது அவசிய மில்லை. குதிரை சாகும்படியான தீவினை எனக்கு நேரா திருந்தால் நீங்கள் கேட்கு முன்பே உங்களிடமே பணத்தைத் திருப்பிக் கொடுத்திருப்பேன்'' என்றான் காட்பிரே.

"முட்டாள்! உன் ஏமாற்றுத்தனத்தை யெல்லாம் இங்கே மறைக்க வேண்டாம். இனிமேல் அவைகளுக் கெல்லாம் நான் பணம் தர முடியாது. இவ்வளவு நாள் உங்களுக்கு எது வேண்டுமானாலும் அட்டியின்றிக் கொடுக்கும் தந்தையாக இருந்தேன். இனிமேல் அப்படி யொன்றும் கொடுக்கமாட்டேன். நீ ஏன் லாம்மீட்டரின் மகளை மணந்து கொள்ளக் கூடாது? நீ அதைப்பற்றித் தான் எண்ணிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்கு நான் ஒன்றும் தடையாக இருக்கவில்லை. உன்னை மணப்பதற்கு அவள் மறுக்கிறாளா?'' என்று கேட்டார் தந்தை.

காட்பிரேவின் உணர்ச்சி பொங்கியது. மன மகிழ்ச்சி சிறிதும் இல்லாதவனாய், "அவள் ஒப்புக் கொள்வாள் என்று நான் நினைக்கவில்லை'' என்றான் தந்தையிடம்.



"நன்றாய்ச் சிந்தித்துப் பார்! அவளையே நீ நேரில் கேட்டுப் பார்த்தால் என்ன? அந்த அளவுக்கு உனக் குத் துணிச்சல் இல்லையா? அவளை மணந்துகொள்ள உனக்கு விருப்பமிருக்கிறதா, இல்லையா?" என்று கேட்டார் தந்தை.

"அவளைத் தவிர வேறு யாரையும் மணந்து கொள்ள எனக்கு விருப்பமில்லை'' என்றான் காட்பிரே.

"சரி. நீயே அவளிடம் கேட்டுப் பார்க்கத் துணிய வில்லையானால், உனக்காக நானே போய்க் கேட்டு வருகிறேன். நம் குடும்பத்தில் பெண் கொடுப்பதற்கு லாம்மீட்டருக்கு விருப்பமில்லாமல் போகாது என்று தான் நம்புகிறேன்'' என்றார்.

காட்பிரேவின் மனம் பயத்தால் முழுதும் பீடிக்கப் பட்டது. "இந்தச் சமயத்தில் தயவுசெய்து போக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரி யான செய்திகளை ஒருவன் தானே சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்றான்.

"சரி நீயே போய்ப் பேசிச் சரிப்படுத்திக்கொள். மேலான வாழ்க்கையை நடத்துவதற்கு நீயே முயற்சி எடுத்துக் கொள். திருமணம் செய்துகொள்ள நினைக் கும்போது ஒருவன் செய்ய வேண்டியதும் அதுதான். சரி. டன்சே குதிரை விற்ற பணத்தைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்துவிடு. இனிமேல் அவன் என் செலவில் எந்தக் குதிரையையும் வைத்திருக்கக் கூடாது. அவனை நீ எங்காவது பார்த்தால், இனிமேல் வீட்டுக்கு வர வேண்டாமென்று சொல்லிவிடு. அவன் தனியாக எக்கேடாவது கெட்டுப் போகட்டும்'' என்றார்.

காட்பிரே அறையைவிட்டு வெளியேறினன். இச் சந்திப்பு தன் நிலைமையில் ஏதாவது மாறுதலை உண்டாக்கியதா அல்லது சொல்ல வந்த கருத்தை விட்டுவிட்டு வேறு செய்தியில் இறங்கிவிட்டோமா என்று அறியாது நடந்து சென்ருன். நான்சியைப் பற்றி அவர் சொன்னது அவனுக்குப் புதியவோர் அச்சத்தையே உண்டாக்கிவிட்டது. ஏனெனில் ஏதாவது விருந்துக்குப் பிறகு தன் தந்தை லாம்மீட்டருடன் பேசிக் கொண்டிருக்கும்போது அவர் தம் மகளைத் தர ஒப்புக் கொண்டுவிட்டால் பிறகு தான் மறுக்க வேண்டிய சங்கடமான நிலை ஏற்பட்டுவிடுமோ என்று பயந்தான். வழக்கம்போல அவன் 'கடவுள் நல்ல வழியே விடுவார்' என்று எண்ணிக் கொண்டு சிறிது மன ஆறுதல் அடைந்தான்.

---

# 8. ரெவிலோ ஊரில் கிறித்துமசுத் திருவிழா

மார்னர் சக்கிமுக்கிக்கல்லைத் தொலைத்துவிட்டுப் போன நாடோடி யாரெனப் பலவிடங்களில் விசாரித்தும் தேடியும் ஒருவரும் அகப்படவில்லை. பல வாரங்கள் கடந்துவிட்டன. ஆனல் திருடனைப் பற்றிய துப்பு ஒன்றும் தெரியவில்லை. வரவரத் திருட்டைப்பற்றிய உணர்ச்சியே மக்களிடமிருந்து மறையத் தொடங்கிற்று. டன்சேவின் மறைவு ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகவே கருதப்படவில்லை. இதற்குமுன் அவன் ஒரு முறை தன் தந்தையிடம் சண்டையிட்டுக் கொண்டு ஆறு வாரம் வரை வீட்டுக்குத் திரும்பிவராமலேயே யிருந்தான். பிறகு திரும்பிவந்து சிவப்புமாளிகையில் வழக்கம்போலவே தங்கிவிட்டான். இந்தச் சமயத்தில் அவன் தந்தையே அவன் திரும்பிவருவதை விரும்பவில்லை. அதனல் அவன் காணுமலிருப்பதைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை. மார்னரின் பணம் திருட்டுப் போன அதே நாளிலிருந்தே டன்சேவும் தலைமறைவாயிருந்து வந்தாலும், யாரும் திருட்டையும் அவனையும் தொடர்புபடுத்திப் பேசுவதில்லை. தன் தம்பியின் மனத்தை நன்ருக அறிந்து கொள்ளும் வல்லமையுள்ள காட்பிரேகூட இதைப்பற்றி ஐயங் கொள்ளாதிருந்தான்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்குமுன்பு சிறுபிள்ளைகளாக இருக்கும்போது அண்ணனும், தம்பியும் மார்னரைப் பார்த்துக் கேலிசெய்து வந்ததுண்டு. ஆனல் அதற்குப்பிறகு அவர்கள் இவ்வளவுகாலமாக அவனைப்பற்றிப் பேசிக் கொள்ளவேயில்லை. டன்சே எங்காவது வசதியான இடத்தில்தான் ஒளிந்து கொண்டிருப்பான் என்று காட்பிரே நம்பிக்கொண்

டிருந்தான். திடீரென்று ஒருநாள் எல்லாரும் வியக்கும்படி வீடு திரும்புவான் என்று எண்ணினான். மதிப்புமிக்க இக்குடும்பத்திற் பிறந்த டன்சே அத்தகைய இழிசெயலில் ஈடுபட்டிருப்பான் என்று யாரும் கருதத் துணியவில்லை. இதற்குள் கிறித்துமசு வந்துவிட்டது. ஊரினர் எல்லாரும் உண்டாட்டிலும் களியாட்டத்திலும் ஈடுபடத் தொடங்கி விட்டனர்.

ராவிலோ ஊரினர் மார்னரின் திருட்டைப்பற்றிப் பேச மறந்துவிட்டனராயினும், மார்னரின் மனத்தில் மட்டும் இப்பேரிழப்பு சொல்ல முடியாத மனத்துன்பத்தைக் கொடுத்துக்கொண்டே யிருந்தது. அதனை யிழப்பதற்குமுன்பு அவன்பட்ட அரும்பாட்டை அறிந்தவர்கள் எவரும், அவ்வளவு உழைத்து இளைத்து நைந்த அவன் வாழ்க்கையில் இப்பேரிழப்புத் தாங்கொணாத தொன்றே என்று ஒப்புக்கொள்வர். இப்பணத்தை இழப்பதினும் அவன் தன்னுயிரைக்கூடத் துறந்திருக்கலாம் என்று பிறர் எண்ணவும் தோன்றும். பணமே அவன்றன் குறுகிய வாழ்க்கையின் உயிர்நிலையாயிருந்து வந்தது. இப்போது மார்னரின் எண்ணங்கள் முன்புபோலப் பணத்தைப் பார்த்து மகிழும் மகிழ்ச்சியில் வட்டமிட முடிவதில்லை. தானியமணியை வாயில் தாங்கி நடந்துவரும் சிற்றெறும்பு வழியில் படுகுழியில் ஆழ்ந்துவிடுவதைப்போல அவன் மனம் தத்தளித்துக் கொண்டிருந்தது. அவன் தறி அங்கே தான் இருந்தது. நெசவும் நடைபெற்றுக்கொண்டு தான் வந்தது. ஆனால் அவனது ஆசை யுணர்ச்சிக்கு ஊற்றுநீராக இருக்கும் அந்தப் பணம்தான் அங்கேயில்லை. துன்பப்பட்டுச் சேகரித்து வந்த பணத்தைப், பெற்ற மகவைத் தீண்டி யின்புறுதல்போலத் தொட்டுப்



பார்த்து இப்போது அவனால் மகிழமுடியாது. நாடோறும் சேர்ந்த பணத்தையெல்லாம் எண்ணி எண்ணிப் பார்த்து இன்புறமுடியாது. ஒவ்வொரு மாலைப்போதும் அவனுக்குத் துன்பந் தருவதாகவே இருந்தது. இனிமேல் அவன் உழைத்துப் பெறும் சிறுபணம் அவனுக்கு மகிழ்ச்சியை ஊட்டமுடியாது. ஏனெனில் அப்பணம் அவனுக்குப் பழைய பொற்குவியலை நினைவூட்டிக் கொண்டே இருக்கும். இனியாவது சிறிது சிறிதாகப் பணத்தைச் சேர்த்துக் குவிக்கலாம் என்று அவன் கற்பனையாக நினைத்துப் பார்த்த போதிலும், பழைய பணத்தின் நினைவு அவனை வாட்டிக் கொண்டேயிருந்தது.

அவன் தன் உள்ளத்தைக் கவலையாலேயே நிரப்பியிருந்தான். தறியில் உட்கார்ந்து நெய்ய நினைக்கும்போதெல்லாம் அடிக்கடி அவன் பெருந்துன்பச்சூழலில் அகப்பட்டுக் கொண்டவனைப் போலத் துன்ப முனகலை எழுப்புவான். ஒவ்வொரு மாலைப் போதும் அவன் இழந்த பணத்தை நினைவூட்டும் துன்பவருகையாகவே இருந்தது. வேலை முடிந்தபிறகு ஒவ்வொரு நாளும் இரவில் கையால் தீண்டி, எண்ணிப் பார்த்து இன்புறுதற்குப் பொற்காசுகள் கையில் இல்லாமையால், தணலுக்கருகே தனியாக அமர்ந்து, 'காலது கொண்டு மேலது தழீஇத்' தலையைக் கையால் பற்றிக்கொண்டு ஆற்றாது புலம்பினான். பிறர் கேட்காதவாறு வருத்தம் நிரம்பிய முனகலை எழுப்பினான்.

ஆனால் விரைவில் மார்னரின் வாழ்க்கை வேறு விதமாக மாறத் தொடங்கியது. ஊரிலுள்ள மற்றையோர் அவன் இவ்வாறு துன்பத்திலேயே மூழ்கிக்

கொண்டிருக்கும்படி விட்டுவிடவில்லை. இதுவரை ஊரிலுள்ளோர் அவன்பால் கொண்டிருந்த வெறுப்புணர்ச்சி இப்போது குறைந்துவிட்டது. அவனுடைய புதிய துன்பத்தைக் கண்டு எல்லோரும் அவன்மேல் இரக்கம் கொண்டனர். முன்புபோல ஊரினர் இவனை இப்போது தந்திரக்காரன் என்று நினைப்பதில்லை. ஆனால் தான் வருந்திப் பெற்றுக் குவித்த பணத்தைக் கூடக் காப்பாற்றிக் கொள்ள முடியாதவன் என்று இரங்கினர். இவ்விரக்கவுணர்ச்சி பலவகையாக அவர்களிடமிருந்து வெளிப்பட்டது. பல செல்வர்கள் அவனுக்கு நிறைய இறைச்சியுணவைக் கொடுத்தனர்.

இப்போது கிறித்துமசு சமயமானதால் பெரிய வீடுகளில் மிகுதியான அளவு உணவு ஆக்கப்பட்டு ஏழை எளியோர்க்கு அறக்கொடையாக வழங்கப்பெறும். சிறிது ஏழையான மக்கள் மார்னரைக் கண்டால் தங்கள் வீட்டுக்கு வரவழைத்து உட்காரச்செய்து அவன் துன்பக் கதையை அவனே சொல்லக் கேட்பர். அல்லது வழியிலேயே நிறுத்தி அவன் சொல்லுவதைக் கேட்டு இரக்கம் தெரிவிப்பர். பிறகு அவர்கள் அவனைப் பார்த்து, “சரி, மார்னர்! இப்போது என்ன குறை ஏற்பட்டு விட்டது? மற்ற ஏழைகளைக் காட்டிலும் நீ ஒன்றும் அவ்வளவு மோசமாகப் போய்விடவில்லை” என்று கூறித் தேற்ற முற்படுவர்.

ஒன்றிரண்டு பேர் அவனை ஞாயிற்றுக்கிழமை தோறும் மாதா கோவிலுக்குச் செல்லும்படி வற்புறுத்தினர். கிராக்கன்தார்ப் என்பவர், அப்படி மார்னர் இதுவரை மாதா கோவிலுக்கு வராததாலும், எப்போதும் பணத்தையே பெரிதாக நினைத்துக் கொண்டிருந்த



தாலுமே பணம் களவு போயிற்று என்றும், இனிமேலாயினும் ஒழுங்காகக் கோவிலுக்கு வரவேண்டுமென்றும் சொல்லித் தூண்டினார். இவ்வாறு தூண்டிய மற்றையோர்களுள் மிகவும் குறிப்பிடத் தக்கவர் வின்த்ராப் அம்மையாராவர். அவர் மிகவும் நல்ல உள்ளம் படைத்தவர்; சலியாதுழைப்பவர்; துன்பப்படுவோரை நாடிச் சென்று அவர்களுக்கு ஆறுதலும் உதவியும் அளிக்கும் பண்புடையவர். இனிமையாகப் பழகும் பண்பும், மென்மையுள்ளமும் கொண்டவர். ராவிலோவில் எங்கேனும் நோயோ பிற துன்பமோ எக்குடும்பத்திலேனும் ஏற்பட்டால் அங்கே முன் வந்து நிற்பவர் இந்த அம்மையாரே என்று எல்லோரும் அறிவர். துன்பமுறுவோரைக் கண்டு இரங்கி அவர் துன்பத்தில் தாமும் பங்கு கொள்ளும் இயல்புடையவர்.

இவ்வளவு நல்லியல்பு கொண்ட அம்மையாரின் உள்ளம் சைலசு மார்னரின் துன்பத்திற்குத் துணை செய்ய முன் வராமலிருக்குமா? இப்போது மார்னர் அம்மையாரைப் போல ஆறுதல் தருவோரை மிகவும் வேண்டி நிற்கிறான். ஒருநாள் ஞாயிற்றுக் கிழமை மாலை. அம்மையார் தம் ஏழுவயதுப் பையனை உடனழைத்துக் கொண்டு மார்னரைப் பார்க்க அவன் குடிசைக்குச் சென்றார். அன்று தயாரித்த சில அப்பங்களையும் உடன் எடுத்துக்கொண்டு சென்றார்.

தறி நெய்யும் ஓசை கேட்கும் குடிசைக்கருகே அம்மையாரும் பையனும் வந்து நின்றனர். மார்னரின் காதில் விழுவதற்காக அம்மையார் பலமாகக் கதவைத் தட்ட வேண்டியிருந்தது. தறியை விட்டு இறங்கிவந்த போது அவனுள்ளம் சிறிதும் சஞ்சலம் அடையவில்லை.

முன்பு போல அவன்மனம் பணப் புதையல் தங்கி யிருக்கும் பெட்டியாக இருந்திருப்பின், எதிர்பாராது வந்த அழையா விருந்தாளிகளைக் கண்டு அச்சங் கொண்டிருக்கும். இப்போது பணப்பெட்டி காலியாக இருந்தது; பூட்டும் உடைக்கப்பட்டிருந்தது. ஆதரவு ஏதுமின்றி இருளில் உழன்று கொண்டிருந்த தனக்கு இப்போது ஏதேனும் உதவி கிடைக்கக்கூடுமாயின் அது வெளியிலிருந்துதான் வரும் என்று எண்ணினான். ஊரினரின் இரக்கத்தைக் கண்டு அவனுள்ளத்தில் சிறிது நம்பிக்கை ஒளி பிறந்தது. அம்மையாருக்குக் கதவை அகலத் திறந்துவிட்டான். ஒரு நாற்காலியைத் தனக்கருகில் இழுத்துப்போட்டு அதில் அம்மையாரை உட்காரும்படி கூறினான். நாற்காலியிலமர்ந்த உடனே அம்மையார் தாம் கொண்டு வந்திருந்த பொட்டலத்தை அவிழ்த்து அப்பங்களை எடுத்து அவனுக் களித்தார். அவற்றை வாங்கிக் கொண்ட மார்னர் அம்மையாருக்குத் தன் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டான்.

அம்மையார் மார்னரைப் பார்த்து ஞாயிற்றுக் கிழமைகளில் கோவிலுக்குச் சென்று மனத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ளாது வேலை செய்துகொண்டிருப்பது இரங்கத்தக்கது என்றும், இந்தக் கிறித்துமசி லிருந்தாவது கோவிலுக்குப் போவதை வழக்கமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் மிகவும் பரிவுடன் கூறிக் கேட்டுக்கொண்டார். இதற்கு முன்பு யாரும், இப்படி மார்னரை வற்புறுத்திக் கோவிலுக்கு வரும்படி சொன்னதில்லை. கோவிலுக்கு வராதிருப்பது அவன் றன் தனிப் பண்புகளுள் ஒன்று என்றே எல்லோரும் கருதி யிருந்தனர். இப்போது மார்னர் அம்மையாரின்



வேண்டுகோளை நேரடியாகவும், உறுதியாகவும் ஏற்க மறுத்தான்.

''முடியாது. எனக்கு இவ்வூர்க் கோவிலைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஒருபோதும் நான் அங்கே போனதில்லை" என்றான்.

இதைக் கேட்டதும் அம்மையாருக்கு வியப்புண்டாயிற்று. அம்மையாருக்கு அப்போதுதான் மார்னர் வெளியூரிலிருந்து இங்கே குடியேறியவன் என்ற எண்ணம் நினைவுக்கு வந்தது. அவனைப் பார்த்து, "நீ பிறந்த ஊரிலே கோவிலே இல்லையா?" என்று கேட்டார்.

''இருந்தது. நிறைய இருந்தது. நானும் சிறு கோவில்களுக்குப் போயிருக்கிறேன்" என்றான்.

"சரி. மார்னர், புது வாழ்க்கை தொடங்குவதற்குத் தாமதம் என்பதே இல்லை. நீ இவ்வூரில் கோவிலுக்கே போனதில்லை என்று சொல்லுவதால் உனக்கு எவ்வித நன்மையும் ஏற்பட்டுவிடாது. என்னைப் பொறுத்த வரை ஆலயமணியின் ஓசையும், பிரார்த்தனையின் இன்னிசையும் கேட்டாலன்றி மனத்திற்கு அமைதி ஏற்படாது.''

அம்மையாரின் அறிவுரைகள் ஏழை மார்னரின் செவிப் பாறையில் விழுந்து பயனளிக்கவில்லை; பழைய சமய உணர்ச்சியை மீண்டும் அவனுள்ளத்தில் சிறிதும் கிளறிவிட முடியவில்லை.

முதலில் மார்னரைப் பார்த்துப் பயம் கொண்டிருந்த சிறுவன் ஆரான் இப்போது பயந்தெளிந்தவனாய் அன்னையின் பக்கலில் சென்று நின்றான். இப்போது

தான் மார்னர் முதன் முதலாக அவனைக் கவனித்தான். அக்குழந்தை அவனுக்கு ஒரு பொம்மையாகவே காணப்பட்டது. தான் வைத்திருந்த அப்பத்தில் சிறிது பிட்டு அக்குழந்தைக்குக் கொடுத்தான். குழந்தை அதை வாங்க முயன்றபோது அம்மையார் தடுத்தார்: "கொஞ்ச நேரம் அப்பம் சாப்பிடாமல் இருக்க முடியாதா? வீட்டுக்குப் போனதும் நிறையச் சாப்பிடலாம். அதை வாங்காதே" என்று சொல்லிப் பார்த்தார். ஆனால் சிறுவனுக்கு அப்போதே சிறிது சாப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்ற விருப்பமிருந்தது. அம்மையார் சிறுவனைப் பார்த்து, "மார்னருக்காகக் கிறித்துமசுக் கீதம் பாடிக் காண்பி" என்று கூறினார். முதலில் அவன் அன்னையின் தோள்பட்டையில் தன் முகத்தை வைத்துச் சாய்ந்து கொண்டு தன் மறுப்பைத் தெரிவித்தான். ஆனால் அம்மையார் விட்டபாடில்லை. "எழுந்து நின்று அப்பாட்டைப் பாடு. உனக்கு இந்த அப்பம் தருகிறேன். பாடும்வரை இந்த அப்பம் என் கையிலேயே இருக்கட்டும்" என்று சொன்னார். ஆரான் சிறிது நேரம் தயங்கிய பிறகு எழுந்து நின்று கீச்சுக் குரலில் கிறித்துமசுக் கீதத்தைத் தன்னால் முடிந்தவளவு பாடி நிறுத்திவிட்டு அப்பத்தை வாங்கிக் கொண்டான்.

கிறித்துமசு இசை கேட்ட பின் மார்னர் கிறித்துமசு நாளன்று கோவிலுக்கு வர ஒப்புக்கொள்வான் என்று எதிர்பார்த்த அம்மையார் ஏமாற்றமே அடைந்தார். எனினும் மார்னர் தன் நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்ள விரும்பினான். மேலும் சிறிது அப்பம் பிட்டு ஆரான் கையில் கொடுத்தான். வாங்கும் சிறுவனின் கைகளைப் பிடித்து நிறுத்தி, "வேண்டாம் மார்னர். நாங்கள் இப்போது வீட்டுக்குப் போக



வேண்டும். உன்னிடம் விடை பெறுகிறேன். ஏதாவது உனக்குத் தேவையாயிருந்தால் எனக்குத் தெரியப்படுத்துங்கள். உனக்கு வேண்டியது உணவாயினும் வேறெதுவாயினும் உடனே விரைந்தனுப்புவேன். ஆனால் நான் மிகவும் பணிவுடன் ஒன்று வேண்டிக் கொள்கிறேன். ஞாயிற்றுக் கிழமை மட்டும் தறி நெய்ய வேண்டாம். அப்படிச் செய்வது உடலுக்கும் உயிருக்கும் நன்மை பயப்பதன்று. அன்றைக்கு நெய்வதால் கிடைக்கும் வருமானம் கெட்ட காரியங்களுக்கே பயன்படுத்த நேரும். உன்னிடம் இவ்வளவு நேரடியாகச் சொல்லுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும். மார்னர், உன்னுடைய நன்மைதான் நான் விரும்புவது. போய் வருகிறேன். ஆரான், ஐயாவுக்கு வணக்கம் செய்" என்றார்.

'வணக்கம், அன்புநன்றி' என்று பதிலுக்குக் கூறினான் மார்னர். பின்னர் எழுந்து கதவைத் திறந்து விட்டான். அப்போதுதான் அவனுக்கு விடுதலையுணர்ச்சி பிறந்தது. முன்புபோலத் தறியில் நெய்து கொண்டும் புலம்பிக்கொண்டும் இருக்கவுமே அவன் மனம் விரும்பியது. வாழ்க்கையையும் அதன் எளிய இன்பங்களையும் பற்றி அம்மையார் கொண்டிருந்த எண்ணங்கள் அவனுக்கு நம்பிக்கையும் உற்சாகமும் ஊட்டுவதற்காகக் கூறப்பட்டவையாயினும், அவை அவனுக்குக் கற்பனைக் கனவாகவே தோன்றின. தெய்வீக அன்பை மலர்வித்து அதில் மனித அன்பையும் நம்பிக்கையையும் மார்னரிடம் ஊற்றெழும்படி செய்ய முடியவில்லை. அவனுடைய ஆன்மா வற்றிச் சுருங்கி, வண்டல்மண் படிந்த சிற்றோடையாகச் சிறுத்திருந்தது. அது நேர்வழி யறியாது திசைமாறிச் சென்று கொண்டிருந்தது.

எனவே அம்மையாரும் அவரைப்போலவே மாசி என்பாரும் மார்னரை வற்புறுத்தி வேண்டிநின்ற போதிலும், அவன் கிறித்துமசைத் தனியாகவே வீட்டில் தங்கிக் கழித்தான். ஊரிலுள்ளோர் அளித்த இறைச்சித் துண்டங்களை வருந்தும் இதயத்துடனே எடுத்து அயின்றான்.

கிறித்துமசு நாளன்று காலை பசும்புற்றரை எங்கும் மூடுபனி பரந்திருந்தது. பாதி உறைந்துவிட்ட சிறு குளம் சில்லிடுங் காற்றால் நடுங்கியது. மாலைப்போதில் பனி பெய்யத் தொடங்கியது. அவன கண் பார்வைக்கு இப்போது எதுவும் தெரியவில்லை. அவனும் அவனுக்குத் துணையான அவன் துயரமுமே அவன் குடிசையில் தனித்திருந்தனர். மாலைப்பொழுது முழுதிலும் திருடப்பட்ட அக் குடிலினுள்ளே தலையைச் சுற்றிக் கைகளை வளைத்து வைத்துக்கொண்டு கதவை மூடுவதற்கோ, தாளிடுவதற்கோ சிறிதும் விரும்பாதவனாய்ப் புலம்பிய வண்ணம் உட்கார்ந்திருந்தான். கடைசியில் சில்லென்று வீசிய குளிர்காற்றும் பனிச்சாரலும் அவனை உலுக்கியதுடன் அவன் குடிலின் அடுப்பையும் அணைத்தபோது தான் தன்னுணர்வை யடைந்தான்.

ஒருகாலத்தில் மற்றவர்கள் எல்லாரையும் விரும்பி அன்பு காட்டியதுடன், காணப்படாத கடவுளிடத்தும் நம்பிக்கை கொண்டிருந்த அதே சைலசு மார்னர்தான் இப்போது இருப்பது என்ற எண்ணம் அவனைத்தவிர இவ்வுலகில் வேறு யாருக்கும் தெரியாது. அவனுக்குக் கூடப் பழைய அனுபவம் மக்கி மங்கிய பழங்கனவாகப் போய்விட்டது.

ஆனால் ராவிலோ ஊரில் கோவில் மணிகள் கணங்கணங்கென மகிழ்ச்சியுடன் ஒலித்தன. ஆண்டின்



மற்ற நாட்களைவிட அன்றுதான் கோவிலில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. கோவில் பூசையும் நீண்ட நேரம் நடைபெற்றது. கிறித்துமசு நாளில் மட்டும் பாடப்படும் கீதங்களும் இன்னிசைப்பாட்டும் மக்களுக்குக் கிளர்ச்சியைக் கொடுத்தன. பூசை முடிந்ததும் நாளின் மீதிப்பகுதியையெல்லாம் விரும்பியபடி உண்டு களித்துக் கூத்தாடலாம் என்ற மகிழ்ச்சி மீக்கூர்ந்து மக்கள் தத்தம் வீடுகளை நோக்கித் திரும்பிவந்தனர்.

ஸ்கொயரின் வீட்டிலோ யாரும் டன்சேவைப் பற்றி நினைக்கவில்லை. அவன் இல்லாதுபோனமைக்காக வருந்தவுமில்லை. மருத்துவரும் அவர் மனைவியும் அங்கிருந்தனர். மருத்துவர் கிம்பிளின் மனைவிதான் ஸ்கொயரின் உடன்பிறந்தார். ஸ்கொயர் விருந்து நடத்தும்போதெல்லாம் விருந்துபசரிப்பவராக இருப்பவர் மருத்துவர் கிம்பிளின் துணைவியாரே. ஆனால் ஒவ்வோர் ஆண்டிலும் பெரிய நிகழ்ச்சியாக விளங்குவது புத்தாண்டு நாளின் முன்னிரவு நடைபெறும் நடனம்தான். அப்போது சுற்றுப்புறத்திலுள்ள பெரிய மனிதர்கள் எல்லாரும் வந்திருந்து பல நாட்கள் ஸ்கொயரின் வீட்டிலேயே தங்கிவிடுவார்கள். பெரிய அளவில் உணவு வகைகள் தயாரிக்கப்படும் விருந்தினருக்காக நிலத்தில் மெத்தென்ற இறகுக் கம்பளங்கள் விரிக்கப்படும். காட்பிரே இவற்றையெல்லாம் இவ்வாண்டும் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

"டன்சே விரைவில் வீட்டுக்குத் திரும்பிவிடுவான்; வீடெல்லாம் ஒரே அமளியாயிருக்கும்; அவனுடைய கோபத்தை யாற்றிச் சமாதானப்படுத்த அவனுக்கு எப்படிக் கையூட்டளிப்பாய்?" என்று காட்பிரேவைப் பார்த்துக் கேட்டது அவன் கவலை.

"ஓ, அவன் புத்தாண்டு முன்னிரவுவரை திரும்பி வரமாட்டான். நானும் நான்சிக்கருகில் அமர்வேன். அவளோடு சேர்ந்து ஆடுவேன். அவளிடமிருந்து கடைக்கண் பார்வை பெற்று அகமிக மகிழ்வேன்" என்றான் காட்பிரே தனக்குள்.

"ஆனால் அதற்கெல்லாம் பணம் வேண்டுமே! அம்மாவின் வைர மோதிரத்தை விற்றாலன்றிப் பணத்திற்கு எங்கே போவது?" என்று கவலை இன்னும் பலமாக அவனைப் பார்த்துக் கேட்டது.

"சரி, எப்படியும் நல்லதே விளையும் என நம்பலாம். இப்போது நான்சியே இங்கு வந்துகொண்டிருக்கிறாள். அந்த இன்பம் இப்போதைக்குப் போதும்" என்றான் காட்பிரே.

"ஆமாம், இப்போது உன் அப்பா வேறு ஏதாவது செய்தி கொண்டுவந்து, அவளை நீ மணக்க மறுக்கும் போது அதற்கான காரணங்களைச் சொல்லும்படி உன்னைக்கேட்டால்....?" என்று இழுத்துக்கொண்டே கேட்டது கவலை.

"உன் வாயை மூடு. சும்மா என்னைத் தொந்தரவு செய்யாதே. நான்சியின் கண்கள் என்மேல் விழும் போது நானும் அவள் கண்களைப் பார்ப்பேன்; அவள் கைகளை என் கைகளுடன் கோத்து மகிழ்வேன்" என்று கூறினான் காட்பிரே.

ஆனால் கவலை தொடர்ந்து இன்னும் பேசிற்று. ஆர்ப்புமிக்க கிறித்துமசு நாளாயிருந்தும், காட்பிரே மிக்குக் குடித்திருந்தும், அவனால் கவலையினின்று முற்றிலும் விடுபட முடியவில்லை.

---

# 9. புத்தாண்டு விருந்தும் பொலிவுறு நடனமும்

நடனத்தன்று மாலை நான்சி லாம்மீட்டர் குதிரை மீது உயரமான தன் தந்தைக்குப்பின் அமர்ந்து கொண்டு சிவப்பு மாளிகையை நோக்கிப் புறப்பட்டாள். தந்தையை ஒருகையால் அணைத்துப் பிடித்துக்கொண்டு பனியால் மூடப்பட்டிருந்த குளங்களையும், சிறு குழிகளையும், பள்ளங்களையும் பார்த்துக்கொண்டே வந்தாள். வேகமாகச் சென்ற குதிரையின் கால்கள் தூக்கி எறிந்த சேற்றுத்துளிகள் அவள்மீது புள்ளிகளாக விழுந்தன. பயணஉடையில் அவள் பார்ப்பதற்குக் கவர்ச்சியாக இருந்தாள். சிவப்புமாளிகையில் அவள் வருகைக்காகக் காட்பிரே காத்துக்கொண்டிருந்தான். குதிரை வந்து நின்றதும் அவளை இறக்கி விட்டான். பனிமழை பெய்து கொண்டிருந்ததனால் அவள் தந்தையும் விரைந்து மாளிகைக்குள் புகுந்தார்.

நான்சி தன் அக்காளும் வேலைக்காரனுடன் அப்போது வந்திருந்தால், காட்பிரே முதலில் தன் அக்காவை இறக்கிவிட்டிருப்பார் என்று எண்ணிப் பார்த்தாள். தான் காட்பிரேவைத் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று முடிவாகக் கூறியிருந்தும் அவன் தனக்கு இதுபோன்ற பணிவிடைகளைச் செய்யவேண்டுமென எதிர்ப்பார்ப்பது நல்லதன்று என்று தனக்குள் நினைத்தாள். "காட்பிரே ஏன் சிலசமயம் காதல் மிக்குடையவராயும், சிலசமயம் அஃதில்லாதவராயும் காணப்படுகிறார்? சிலசமயம் வாரக்கணக்காக என்னைப் பற்றிய எண்ணமே இல்லாதிருக்கிறார். ஆனால் திடீரென்று ஒருநாள் மறுபடியும் காதல் செய்யத் தொடங்கி

விடுகிறார். ஊரினர் எல்லாரும் அவரைப்பற்றி மோசமாகவே பேசுகின்றனர். அவர் என்னை உண்மையாகக் காதலிப்பதாயிருந்தால் ஊராரெல்லாம் இப்படிப் பேசிக் கொண்டிருப்பார்களா?'' என்று தன் மனத்துக்குள் எண்ணினாள்.

இவ்வெண்ணங்கள் எல்லாம் அவள் காட்பிரேவைத் தூரத்தில் கண்டதுமுதல் தன் வீட்டிற்குள் தன் முன்னால் அவன் வந்து நிற்கும்வரை எண்ணியவையே. அதற்குள் நல்லவேளையாகக் காட்பிரேவின் தந்தை அவள் தந்தையை வரவேற்க வந்துவிட்டார். காட்பிரேவும் அவளைத் தன் வலிய கைகளைக் கொடுத்து அவளை இறக்கி வீட்டிற்குள் அழைத்துச்சென்றான். தூரத்திலிருந்து வந்த பிற மகளிரும் வேறுடை மாற்றிக் கொள்ளக்கூட நேரமில்லை. அதற்குள் எல்லார்க்கும் நடனத்திற்குமுன் கொடுக்கப்படும் தேநீர் வழங்கப் பட்டது.

திருமதி கிம்பிள் அறைக்குள் வந்து நான்சியை எதிர்கொண்டழைத்தாள். அவளை மேன் மாடியிலுள்ள நீல அறைக்கு அழைத்துச் சென்றாள். அங்கேதான் லாம்மீட்டரின் துணிகளடங்கிய பெட்டி இருந்தது. மேல்மாடியின் நீல அறையில் மகளிர் நிறைந்திருந்தனர்; தேநீருக்குப்பின் நடனத்திற்காக உடைகள் மாற்றிக் கொண்டிருந்தனர்.

நான்சிக்கு நடனஆடை யுடுத்துவதற்காக அவள் அத்தை திருமதி ஆஸ்டுட்டும், குன் என்பாரின் இரு மகளிரும் முன்வந்தனர். நாகரிகப் பகட்டாடை யுடுத்தியிருந்த குன் மகளிர் இருவரும் நகரத்திலிருந்து வந்தவர்கள். பட்டிக்காட்டு நான்சி எப்படி உடையுடுத்திக் கொள்வாள் என்று பார்ப்பதில் அவர்களுக்கு ஆசையிருந்தது. ஆனால் நான்சியின் உடைகள் எல்லாம் தூய்மையாகவும், புதிதாகவுமிருந்தன. அவள் வெள்ளிப் பட்டாடை யுடுத்திக் கழுத்தில் அட்டிகையும், காதில் தோடுகளும் அணிந்து ஒளிர்வதைப் பார்த்த அவர்கள் அவளை வியந்தவண்ணமாயிருந்தனர்.



கடைசியில் நான்சியின் அக்காளும் வந்துவிட்டாள். குதிரைப் பயணத்திற்குப் பிறகும் மகிழ்ச்சியாகவே காணப்பட்டாள். நான்சி தன்னைப் போலவே தன் அக்காளுக்கும் அதேமாதிரியான உடைகளை அணிவித்தாள். ஆனால் அழகுமங்கை நான்சியைப்போல அவள் அக்காள் அழகில்லாதவளாகலின் அவ்வுடையில் அவள் பிரகாசிக்கவில்லை. நான்சியே இருவரிலும் அழகு மிக்கவளாயிருந்தாள். ஆனால் அவள் கடவுள் தன்னைத் தனிமையாக வாழ்வதற்காகவே படைத்துள்ளார் என்று எண்ணியவளாய்த் திருமணத்தை வெறுத்தாள். திருமணம் செய்து கொள்ளாமல் இருந்தால்தான் வழக்கமாகத் தனக்குள்ள மகிழ்ச்சி நிலைத்திருக்கும் என்று எண்ணினாள்.

நான்சியும் அவள் அக்காளும் பெரிய, கூட்டம் நிரம்பிய நடன அறைக்குள் சென்றனர். அவ்வறை மகிழ்ச்சியும் பொலிவும் நிறைந்து காணப்பட்டது. காட்பிரே அங்குவந்து நான்சியைத் தன் இடத்திற்கருகிலுள்ள இருக்கைக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்தான். அவள் அக்காளோ தன் தந்தைக்கும், காட்பிரேவின் தந்தைக்குமிடையே உட்கார்ந்தாள். காட்பிரே நான்சியை அடிக்கடி பார்த்துப் புன்முறுவல் செய்து மகிழாது சும்மாயிருந்தான். இதைப் பார்த்

ததும், அக் கூட்டத்தினரைக் கண்டு மகிழ்ச்சி கொண் டிருந்த அவன் தந்தை எரிச்சலடைந்தார். எல்லார்க் கும் கேட்கும்படியாக நான்சியைப்பற்றி அவள் தந்தை யிடம் புகழ்ந்துரைத்தார். இதைக்கேட்டு மகிழ்ச்சி யடைந்தாராயினும் லாம்மீட்டர், தன் மகளுக்கும் காட்பிரேவுக்கும் திருமணம் ஏற்படுவதை விரும்புவ தாகக் காணப்படவில்லை.

''என் மகன் நான்சியுடன் முதல் நடனம் ஆடப் போகிருன்'' என்று மொழிந்தார் ஸ்கொயர். மகனைப் பார்த்து, ''என்ன சொல்கிருய், காட்பிரே?'' என்று கேட்டார். இப்படிக் கேட்டுக்கொண்டே நாற்காலிமேல் சாய்ந்தவண்ணம் காட்பிரேவைப் பார்த்தார். ''உன் னுடன் நடனமாட நான்சியைக் கூப்பிடவில்லையா?'' என்று கேட்டார்.

தந்தையின் உட்பொருள் பொதிந்த இவ்வார்த்தை யைக் கேட்டதும் சங்கடம் கொண்டவனுய், இது எங்கே போய் முடியுமோ? என்று அச்சங் கொண்டான். நான்சி யின் பக்கம் திரும்பிக்கொண்டே, ''நான் இன்னும் நான்சியிடம் கேட்கவில்லை. அவள் ஒப்புக்கொள்வாள் என்றுதான் நம்புகிறேன்—வேறு யாரும் முன் கூட்டியே ஏற்பாடு செய்து கொள்ளாதிருந்தால்'' என்ருன்.

''வேறு யாரிடமும் ஏற்பாடு செய்துகொள்ள வில்லை'' என்ருள் நான்சி அமைதியாக.

''அப்படியானுல் என்னுடன் ஆடுவதற்கு உனக்கு எவ்விதத் தடையுமில்லையே?'' என்று கேட்டான் காட் பிரே மகிழ்ச்சியாக.

''இல்லை, எத்தடையுமில்லை'' என்ருள் நான்சி.



நடனத்திற்கு முன்பு வந்த தேநீருக்குப் பிறகு எல்லாரும் அருகிலிருந்தோரிடம் பேசிக்கொண்டிருக்கத் தொடங்கினர். கடைசியில் வயலின் ஒலி கேட்டது. வயதுமுதிர்ந்த சாலமன் என்பான் வயலினை வாசித் துக் கொண்டுவந்தான். நடனமாடுவதற்காகத் திரு ஸ்கொயரும், திருமதி கிராக்கன் தார்ப்பும், திரு கிராக்கன் தார்ப்பும், திருமதி ஆஸ்காட்டும் சேர்ந்து முன்னடந் தனர். பின்னுல் இருந்த காட்பிரேவும் நான்சியும் நடனத்தைத் தொடங்கிவைத்தனர். எளிய ஊர்மக்கள் வழக்கம்போல நடனங்களைப் பார்த்துக்கொண்டும், ஆர்வமகிழ்ச்சியுடன் ஆடுவோரின் ஆடைகளையும் உருவங்களையும் நடனங்களையும் பற்றிப் பேசிச் சிரித்துக்கொண்டு மிருந்தனர். காட்பிரேவும் நான்சியும் சேர்ந்தாடுவதைப் பார்த்த திருமதி வின்த்ரோப், ''ஆ, இருவரும் எவ்வளவு பொருத்தமான இணையாக இருக் கின்றனர்! நான்சி அழகின் திருவுருவாகவே ஒளிர் கிருள். ஒருகாலத்தில் அவளே காட்பிரேவின் வீட்டரசி யாக வந்தாலும் வியப்படைவதற்கில்லை. மிகவும் பொருத்தமான இணை!'' என்று புகழ்ந்து கூறினர்.

ஆனுல் நடனம் முடிவதற்குள்ளாகவே காட்பிரே வும் நான்சியும் நடனத்திலிருந்து விலகிக்கொண்டனர். இதற்குக் காரணம் காட்பிரேவின் தந்தை நடனவேகத் தில் நான்சியின் ஆடைத் தலைப்பை அழுத்தி மிதித்து நின்றுவிட்டதுதான். அதனுல் அது சிறிது கிழிந்து விட்டது. உடனே நான்சி காட்பிரேவிடம் போய் உட்கார்ந்துகொள்ளப் போவதாகச் சொல்லிவிட்டு வெளியேறினுள். காட்பிரேவும் அவளைப் பின் தொடர்ந்து சென்ருன். இவ்வளவு நேரம் நான்சி யுடன் நடனமாடியதற்காகக் காட்பிரேவுக்கு மகிழ்ச்சியே

ஏற்பட்டது. நான்சி ஒரு சிறு அறைக்குள்சென்று ஒரு மேசைக்கருகிலுள்ள நாற்காலியொன்றில் அமர்ந்தாள். காட்பிரேவைப் பார்த்து, "நடனத்தின் இடையே வந்துவிட்டதற்காக வருந்துகிறேன்" என்றாள்.

"பரவாயில்லை. உன்னோடு நடனமாடச் சிறிது நேர வாய்ப்புக் கிடைத்ததே பெரும்பேறு" என்றான் காட்பிரே அவளருகில் நின்றுகொண்டு. மேலும், "உன்னுடன் ஒரு நடனம் ஆடுவது உலகத்திலுள்ள எல்லா இன்பங்களையும்விட மேலானது" என்றான்.

கடந்த பலகாலமாக இவ்வளவு தெளிவாகக் காட்பிரே பேசியதேயில்லை. அதனால் இப்போது நான்சிக்கு வியப்பாகவே இருந்தது. ஆனால் அதை அவள் வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. அப்போது நான்சியின் அக்காள் அங்கே வந்தாள். வந்தவளைப் பார்த்து, "சரி, நான் இப்போது போய்விடவேண்டும் இல்லையா?" என்று கேட்டான் காட்பிரே.

"நீங்கள் இருப்பதைப் பற்றியோ போவதைப் பற்றியோ எனக்கொன்றுமில்லை" என்றாள் நான்சியின் அக்காள்.

"உங்கள் விருப்பம்" என்றாள் நான்சி தன் ஆடையைப் பார்த்துக் கொண்டே.

"அப்படியானால் நான் இங்கேயே இருந்துவிட விரும்புகிறேன்" என்று சொல்லிக் காட்பிரே அவள் அருகில் இருக்கும் இன்பத்தையடைந்தான். மறு நாளைப்பற்றிய எண்ணமே அவனுக்கு ஏற்படவில்லை.

---

# 10. பெறற்கருஞ் செல்வம் மார்னர் பெறுதல்

காட்பிரே தன் துன்பங்களையெல்லாம் மறந்தவனாய் நான்சியின் அருகில் இருக்கும் இன்பத்தையே விரும்பி அமர்ந்திருந்தபோது அவன் மனைவி பனி மல்கிய பாதையில் மெல்ல அடியெடுத்து வைத்து நடந்து வந்தாள். கையில் தன் குழந்தையை எடுத்துக் கொண்டு வந்தாள்.

"உன்னை மனைவி எனப் பிறர் முன்னிலையில் ஒப்புக்கொள்வதைக் காட்டிலும் நான் சாவதே மேல்" எனக் காட்பிரே உணர்ச்சிமிக்குக் கூறிய நாளிலிருந்து அவனைப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தாள் அவன் மனைவி மோலி. புத்தாண்டு முதனாள் விருந்துச் சமயத்தில் பலரும் சிவப்பு மாளிகைக்கு வந்திருப்பர் என்றும், தன் பழியைத் தீர்த்துக் கொள்ள அதுவே நல்ல இடமாகுமென்றும் எண்ணினாள். தன்னை மறந்து களிப்புக் கொண்டிருக்கும் கணவனின் இன்பத்தைப் போக்கத் தீர்மானித்தாள். முன்பு அழகின் மெருகு கலையாத முகத்தைப் பெற்றிருந்த அவள் இப்போது நலிந்தமுகத்துடன், நைந்து, கிழிந்த ஆடையுடன் கையில் குழந்தையை ஏந்திக்கொண்டு தான் ஸ்கொயரின் மூத்த மகன் காட்பிரேவின் மனைவிதான் என்பதை எல்லோருக்கும் சொல்லி உண்மையை வெளிப்படுத்த வேண்டுமென்று வந்து கொண்டிருந்தாள். மோலி தன் துயரநிலைக்குக் காரணம் தன் கணவனல்லன் என்பதையும், தான் அபினிக்கு அடிமையாகி உடலும் உள்ளமும் அபினிப் போதையிலேயே எப்போதும் ஆழ்ந்திருக்கச் செய்வதால்தான்

கணவன் தன்னை வெறுத்தொதுக்குகிறுன் என்பதையும் உணர்ந்திருந்தாள். ஆனல் தான் பெற்ற குழந்தையைக் கணவனிடமே கொடுத்துவிட அவள் தாயுள்ளம் ஒப்பவில்லை. காட்பிரே செல்வமிக்கவன்; அவன் விரும்பினுல் தன்னையும் செல்வமிக்கவளாக ஆக்கியிருக்கலாம் என்றெண்ணினுள். காட்பிரே தன் திருமணத்தை வெறுப்பதும், அதனுல் துன்பமுறுவதும் அவளுடைய பழிவாங்கும் உணர்ச்சிக்கு உணவேயளித்தன.

அதிகாலையிலேயே அவள் தன் பயணத்தைத் தொடங்கிவிட்டாள். ஆனல் வழியில் எங்கேனும் சிறிது தங்கினுலும் நேரமாகிவிடும் என்ற எண்ணங் கொண்டவளாய் மெல்ல மெல்ல நடந்துகொண்டிருந்தாள். காலை மணி ஏழு இருக்கும் அப்போது அவள் ராவிலோவுக்கருகிலேயே வந்துவிட்டாள். பல நெடிய, குறுகிய தெருக்களும் சந்துகளும் இருந்ததால் காட்பிரேவின் மாளிகை எவ்வளவு தூரத்திலிருக்கிறது என்பதை அவளால் திட்டமாக அறிந்து கொள்ள முடியவில்லை. நடந்து நடந்து அலுப்புற்றிருந்த அவளுக்கு இப்போது ஊக்கமூட்டுவோர் தேவைப்பட்டனர். இப்போது அவளுக்கு ஊக்கமூட்டக்கூடிய ஒரே ஒரு பொருளான அபினி அவள் பையிலிருந்தது. அதைக் கையில் எடுத்துக் குடிக்குமுன் ஒரு கணம் தயங்கினுள். உடல்வசமிழந்தபின் அக்குழந்தையைக் கைநழுவவிட்டு விடுவோமோ என்ற தாய்மை யன்பின் எண்ணம் அவள் உள்ளத்தில் எழுந்தது. ஆனல் அடுத்த கணத்திலேயே அபினியைக் காலி செய்து விட்டுப் புட்டியைத் தூர எறிந்தாள். அவள் விடிவெள்ளியின் வெளிச்சத்தில் நடந்துகொண்டேயிருந்தாள். பனிமழை சிறிது நின்றிருந்தது. ஆனல் என்பினை உருக்கும் ஊதைச் சில்காற்று வீசிக்கொண்டிருந்தது. அவள் தூக்க வெறியுடனேயே நடந்து கொண்டிருந்தாள். பழக்கத்தினுலேயே அவள் குழந்தை அவள் கையிலிருந்து நழுவிவிடாமல் இருந்தது.



அபினி மெல்ல மெல்லத் தன் வேலையைத் தொடங்கிவிட்டது. அதற்குச் சில்காற்றும், அவள் உடல் அலுப்பும் உதவி புரிந்தன. விரைவிலேயே கீழே படுத்து உறங்க வேண்டும் என்ற உந்துதல் அவளுக்கு ஏற்பட்டது. அவள் நடந்து வந்த ஒற்றையடிப் பாதையும் முடிந்துவிட்டது. அவளுக்கெதிரே புதரும் காடுகளுமிருந்தன. வான்மீனின் ஒளியிருந்தும், நிறைந்த பனிக்கட்டிகளின் ஒளிச்சிதறல் இருந்தும் அவள் பொருள்களைப் பாகுபடுத்தி யறிய முடியாதவளாய் அங்குமிங்கும் அலைந்தாள். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு ஒரு தாழ்ந்த புதரின் கீழே சாய்ந்தாள். பனிக்கட்டியே படுக்கையாகப் புற்புதரே தலையணையாகக்கொண்டு சிறிதுநேரம் கண் மூடினுள். அவளுக்குப் பனிக் கட்டியின் குளிர்மையே தெரியவில்லை; தன் குழந்தை விழித்துக்கொண்டு தன்னையழைத்து அழுமே என்ற எண்ணமும் அவளுக்கு ஏற்படவில்லை. எனினும் அவள் கைகள் குழந்தையின் பிடியை விட்டுவிடவில்லை. தொட்டிலில் ஆட்டப்படும் குழந்தை தூங்குவதுபோலவே அவள் குழந்தையும் அன்னையின் அரவணைப்பில் அயர்ந்து தூங்கிவிட்டது.

ஆனல் அபினியின் முழுச் சக்தியினுல் பேருறக்கம் எய்தியபோது அவள் பிடி நழுவியது. குழந்தை கீழே விழுந்ததும் விழித்துக்கொண்டது. முதலில் அக்



மார்னரின் மனைக்குள் குழந்தை புகுதல்

OIII, 3 MFG.S



குழந்தை 'அம்மா' என்று அழைத்தது. ஆனால் அன்னையின் காது செவிடுபட்டிருந்தது. அப்போது சிறிது தூரத்தில் ஒரு சிறு வெளிச்சம் அதன் கண்ணில் பட்டது. வெளிச்சத்தைப் பிடிப்பதற்காகக் குழந்தை களுக்கு இருக்கும் இயல்பான ஆர்வத்துடன் இக் குழந்தையும் தவழ்ந்தும் நடந்தும் அவ்வொளியைப் பிடிக்கச் சென்றது. அவ்வொளி சைலசுமார்னரின் அடுப்பிலிருந்து வந்ததேயாகும். குழந்தை மெதுவாக நடந்து சென்று திறந்து கிடந்த கதவின் வழியாக அடுப்புக்கு அருகேயே சென்றுவிட்டது. அன்னையிட மிருந்து பிரிந்து பல மணி நேரம் தனித்துறங்கும் பழக்கம் அக் குழந்தைக்கு இருந்தது. அதனால் சைலசு மார்னரின் பழைய மேலங்கித் துணியில் தன் ஈரத்தைப் புலர்வித்துக் கொண்டு, அக்குழந்தை அடுப்பு வெளிச் சத்தையே மனநிறைவுடன் பார்த்துக்கொண்டு நின்றிருந்தது. விரைவிலேயே கதகதப்பான அடுப்பு வெப்பம் குழந்தைக்கு உறக்கத்தை வரவழைத்துத் தந்துவிட்டது. மார்னரின் மேலங்கியிலேயே படுத்து அக் குழந்தை உறங்கிப்போய்விட்டது.

இப்புதிய விருந்தாளி தன் வீட்டுக்குள் வந்து உறங்கிக் கொண்டிருக்கும்போது மார்னர் எங்கே போயிருந்தான்? அவன் குடிலுக்குள்ளேதான் இருந் தான். ஆனால் குழந்தை வந்ததைக் கவனிக்கவில்லை. கடந்த சில வாரங்களாக, அவன் பணம் களவு போனதி லிருந்து, போன பணம் எப்படியாவது திரும்பி வராதா என்று எதிர்பார்த்துக் கொண்டே கதவைத் திறந்து வைத்திருப்பது வழக்கம். அன்று காலையில் தான் சிலர் அன்றிரவு பழைய ஆண்டு கழிந்து புத்தாண்டு பிறக்கப் போகிறதென்றும், அவன் உறங்

110349

காமல் விழித்துக் கொண்டே யிருந்தால் போன பணம் திரும்பக் கிடைக்குமென்றும், கூறியிருந்தார்கள். இது அந்தக் கருமியின் இயல்பையறிந்து வெறும் கிண்டலாகச் சொல்லப்பட்டதுதான். ஆனால் இதை அவன் உண்மையென்றே நம்பிவிட்டான். இரவு வந்ததிலிருந்தே அவன் அடிக்கடி கதவை மூடுவதும் திறப்பதுமாக இருந்தான். வெறும் பனியே வெளியில் பெய்து கொண்டிருப்பதைக் கண்டு கதவைச் சாத்திவிட்டான். ஆனால் சிறிது நேரங்கழித்துத் திறந்தான். அப்போது பனிமழை நின்றிருந்தது. மேகங்களும் பிரிந்திருந்தன. அவன் கதவருகே நின்று உற்றுக் கவனித்தான். வெகுநேரம் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். ஏதோ ஒன்று பாதையிலிருந்து தன்னை நோக்கி நகர்ந்துவந்து கொண்டிருப்பதாகத் தெரிந்து, அவன் மீண்டும் கதவை மூடுவதற்காகக் கையை எடுத்தான். ஆனால் பணம்போன பிறகு அவனுக்குப் பலமுறை ஏற்பட்டதைப் போன்று ஒரு வலிப்பு ஏற்பட்டது. அப்படியே மரத்துப்போய்க் கைகால்களை ஆட்டமுடியாதவனாயும், ஒன்றும் காதால் கேட்கமுடியாதவனாயும் நின்று விட்டான்.

தன்னுணர்ச்சி திரும்பிவந்ததும் தனக்கு உடற்கேடு நேர்ந்துவிட்டதை உணர்ந்தான். ஆனால் இதற்கிடையில் குழந்தை உள்ளே நுழைந்து வந்ததைச் சிறிதும் அறியாதவனாய்க் கதவைத் தாளிட்டான். கதவருகே நின்று கொண்டு நீண்டநேரம் வெளியே பார்த்துக் கொண்டிருந்துவிட்டதாக எண்ணினான். அடுப்புப்பக்கம் திரும்பியபோது, விறகுக்கட்டைகள் எரிந்துமுடிந்து சாம்பல் பூத்திருந்தன. மங்கலான சிறு சிவப்பு வெளிச்சமே அடுப்பிலிருந்து வந்தது.



மார்னர் அடுப்புக்கருகேயுள்ள நாற்காலியில் உட்கார்ந்தான். குனிந்து அடுப்பிலுள்ள கட்டைகளை ஒன்று சேர்த்து நெருப்பு மிகுமாறு செய்தான். அப்போது அவனுடைய கலங்கிய கண்ணொளியில் அடுப்பின் முன்னேயுள்ள தரையில் காணாதுபோன பொற்குவியலே கொட்டியிருப்பதாகப்பட்டது. பொன்! அவனுடைய சொந்தப் பொன்! எப்படி மாயமாகக் கண்காணாது போனதோ அதுபோலவே மாயமாகத் திரும்பிவந்துவிட்டது! அவன் தன் இதயம் வேகமாகப் படபடப்பதை உணர்ந்தான். சில மணித்துளிகள் வரை அவனால் கைநீட்டிக் கீழே கிடந்த புதையலை எடுக்க முடியாமலிருந்தது. நெஞ்சுதுடிக்கும் அவன் கண்களுக்கு அப்புதையல் சுடரொளி விட்டுக் கொண்டிருப்பதாகப்பட்டது. கடைசியில் தன் கையை நீட்டித் தாவினான். ஆனால் வட்டமான கடின நாணயங்களுக்குப் பதிலாக அவன் கையில் மென்மையான, வெப்பமான மயிர்முடிதான் பட்டது.

வியப்பு மீக்கூர்ந்தவனாய் மார்னர் மண்டியிட்டுத் தலைகுனிந்து அவ்வதிசயப் பொருள் யாதாயிருக்குமோ எனக் கண்டறியத் துடித்தான். அது ஒரு தூங்கும் குழந்தை! தலைமுழுதும் பொன்போன்ற சுருள்மயிர் நிறைந்த அழகான, வளமான குழந்தை! இது என்ன கனவா? தான் சிறுவனாயிருக்கும் போது, அது இறப்பதற்கு முன்பு ஓராண்டு எடுத்துக் கொஞ்சிக் கொண்டிருந்த தங்கைதான் திரும்பிவந்துவிட்டாளோ? அல்லது கனவாகத்தான் காட்சியளிக்கிறாளோ? என்றெல்லாம் வியப்பு மீக்கூர்ந்தவனாய் எண்ணினான் மார்னர். இதுதான் அவன் உள்ளத்தில் எழுந்த முதல் எண்ணம்.

பிறகு அவன் எழுந்தான். எரியும் கட்டைகளை ஒன்ருகச் சேர்த்தான்; சில காய்ந்த சருகுகளை அடுப்பில் போட்டான். தீ வளர்ந்தது. ஆனல் அத்தீயொளி அவனுடைய காட்சியை மாற்றிவிட வில்லை. கிழிந்த பழைய துணியுடன் தூங்கும் குழந்தையைத்தான் அவ்வெளிச்சம் இன்னும் தெளிவாகக் காட்டியது. அது இறந்துபோன தன் குழந்தைத்தங்கையைப் போலவே காணப்பட்டது. விளக்கமுடியாத வியப்பும், பழைய எண்ணங்களின் விரைவு வருகையும் ஒன்று சேர்ந்து அவனைத் திக்குமுக்காடச் செய்துவிட்டன. நாற்காலியில் அப்படியே சாய்ந்து உட்கார்ந்து விட்டான். தனக்குத் தெரியாமல் இக்குழந்தை எப்படி, எப்போது இங்கே வந்தது? என்று வியந்தான். கதவைத் தாண்டி அவன் வெளியே செல்லக்கூட இல்லை.

ஆனல் அதே கேள்வியுடன், அவனுடைய பழைய வீடு, தெருக்கள் இவற்றைப்பற்றிய காட்சிகள் ஒன்றன்பின் ஒன்ருக அவன்மனத்தில் தோன்றிக் கொண்டே யிருந்தன. இறந்துபோன நண்பர்களைப் போல அப்பழைய காட்சிகளும் இனிமேல் பார்க்க முடியாதவை. ஆனல் இக்குழந்தை பழைய, கடந்த கால வாழ்க்கையி லிருந்து ஏதாவதொரு செய்தியை உணர்த்துவதற்காகவே வந்திருக்கிறது என்ற கனவுணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. இது அவன் பழைய உணர்ச்சிகளை இன்னும் நன்ருகக் கிளறி விட்டது. அக்குழந்தை நேர்வழியிலேயே வீட்டுக்குள் வந்திருக்கமுடியும் என்று உணராதவனய், மாயமாகவே வந்திருக்கவேண்டும் என்று உறுதியாக நம்பினன் ராவிலோவிலிருந்து வந்தபிறகு அவனுள்ளத்தில்



தோன்ருத ஓர் அன்புணர்ச்சி இப்போது அவனிடம் தோன்றியது.

ஆனல் இப்போது குழந்தை விழித்துக்கொண்டு ஒரு சத்தம்போட்டது. மார்னர் குனிந்து குழந்தையை எடுத்துத் தன் மடிமீது வைத்தான். அப்பெண்குழந்தை மார்னரின் கழுத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு 'அம்மா! அம்மா!' என்று தேம்பித் தேம்பியழுதது. மார்னர் தன்னை யறியாமலேயே அதைத் தன் மார்போடணைத்துக் கொண்டு ஆறுதல் மொழிகள் சில புகன்ருன். ஆறிப்போய்க் கிடக்கும் கஞ்சியைச் சிறிது சூடாக்கிக் குழந்தைக்குக் கொடுக்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது. உடனே அதைச் சூடாக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டான். கஞ்சியில் சிறிது நாட்டுச் சர்க்கரையைக் கலந்து குடிக்கச் செய்தான். குழந்தையின் அழுகை நின்றது. மார்னர் கஞ்சியைக் கொடுத்துக் கொண்டிருக்கும் போதே அது மெதுவாகத் தன் தலையைத் தூக்கி அவனைப் பார்த்தது. உடனே அது அவன் மடியிலிருந்து நழுவித் தரையில் வீழ்ந்தது. தன் காலில் இருக்கும் வார்ச்செருப்புகள் வலியைத் தருகின்றன; அவற்றைக் கழற்றவேண்டும் என்று மார்னரிடம் குறிப்பால் அறிவிக்க முயன்ற அக்குழந்தை தரையிலேயே உட்கார விரும்பியது. அவன் மீண்டும் அக்குழந்தையைக் கையிலெடுத்து மடியில் வைத்துக் கொண்டான். அப்போதுதான் திருமணமாகாத (குழந்தைபெருத) மார்னருக்குத் திடீரென்று அக்குழந்தையின் காலில் உள்ள நனைந்த வார்ச்செருப்புகள் வெப்பம் ஏறினல் வலியை உண்டாக்கும் என்று பட்டது. சிறிது சிரமப்பட்டு அவற்றைக் கழற்றினன். குழந்தையின் மகிழ்ச்சி மிகுதிப்பட்டது.

நனைந்த அந்த வார்ச்செருப்புகள் அக்குழந்தை பனிக்கட்டியிலேயே நடந்துவந்திருக்க வேண்டுமென்பதை உணர்த்தின. இதனால் அக்குழந்தை இயற்கையான வழியிலேயே தன் வீட்டிற்குள் வந்துசேர்ந்திருக்க வேண்டும் என்று தீர்மானித்தான். பிறகு குழந்தையைக் கையிலெடுத்துக்கொண்டு கதவருகே சென்றான். அவன் கதவைத் திறந்ததும், கஞ்சி குடிக்கத் தொடங்கியதிலிருந்து வாயே திறக்காத அக்குழந்தை மீண்டும் 'அம்மா' என்றது. வெளியே குனிந்து பார்க்கும்போது குழந்தை நடந்துவந்த காலடித்தாரை நன்றாகத் தெரிந்தது. அதையே பின்பற்றி வெளியே சென்றான்.

'அம்மா! அம்மா!' என்று மீண்டும் மீண்டும் கத்திக்கொண்டே அக்குழந்தை அவன் கையிலிருந்து விடுபட்டுப் போயிற்று. அதைப் பின்தொடர்ந்து சென்ற மார்னர் கடைசியில் புதருக்கருகே ஒரு மனித உருவம் இருப்பதைப் பார்த்தான். புதருக்குக் கீழே அதன் தலை தொங்கிக்கொண்டிருந்ததையும், அதன் பாதி உடல் பனிக்கட்டிகளால் மூடப்பட்டிருந்ததையும் கண்டான்.

## 11. காட்பிரே எய்திய வியப்பும் அதிர்ச்சியும்

சிவப்பு மாளிகையில் அப்போது இரவு விருந்து முடிந்திருந்த சமயம். வேலைக்காரர்கள் சமையலறையைக் கிடந்தது கிடந்தபடியே விட்டுவிட்டு 'வெள்ளையறை'யில் நடக்கும் நடனத்தைப் பார்ப்பதற்காக அங்கு வந்துவிட்டார்கள். வெள்ளையறைக்கு இரண்டு வாயில்கள் இருந்தன. கீழ்ப்புற வாயிலில் வேலைக்காரர்களும் ஊர்ப்புற மக்களும் குழுமி நின்றுகொண்டிருந்தனர். மேற்புறவாயில்தான் அடைபடாமல் இருந்தது. அவ்வாயிலின் எதிரே நின்றுகொண்டு காட்பிரேவின் தம்பி 'பரதவர் நடன'த்தை ஆடிக்கொண்டிருந்தான். காட்பிரே சிறிது தள்ளியே உட்கார்ந்திருந்தான். தம்பியின் நடனத்தைக் கண்டு மகிழ்வதற்காக வன்று; தன் தந்தையின் அருகில் உட்கார்ந்த நான்சியைப் பார்த்துக் கொண்டிருப்பதற்காகவே வசதியான இடத்தில் அமர்ந்திருந்தான். அவன் தனித்தே உட்கார்ந்திருந்தான். ஏனெனில் தந்தையின் திருமணம் பற்றிய கிண்டல் மொழிகளுக்கு இலக்காகிவிடக்கூடாதென்று எண்ணியதாலும், நான்சியின் அழகு அவன் கண்ணைப் பறிக்கக் கூடியதாயிருந்ததாலும் சிறிது தூரத்திலேயே இருந்தான். 'அந்நடனம் முடிந்ததும் அவளுடன் சேர்ந்து மீண்டும் ஆடுவதற்கு வாய்ப்பு ஏற்படப் போகிறது; அதற்குள் ஏதிலர் அறியாமல் அவளிடம் கண்களால் பேசிக் களிப்புக் கொள்ளலாம்' என்று நினைத்துக்கொண்டிருந்தான்.

ஆனால் ஒருமுறை நான்சியை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டேயிருந்துவிட்டுத் தலையைத்

தூக்கியதும், ஒரு பேயைப் போலப் பயங்கரமான, அதிர்ச்சி தரக்கூடிய உருவம் ஒன்று வந்துகொண் டிருப்பதைக் கண்டான். அவனுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது சைலசுமார்னரின் கையிலிருந்த அவன் குழந்தையேதான். கடந்த பல மாதங்களாக அக் குழந்தையை அவன் பார்க்காது போயினும், அது தன் குழந்தையே என்பதை ஐயமறத் தெரிந்து கொண் டான். திரு. கிராக்கன்தார்ப்பும் திரு. லாம்மீட்டரும் மார்னரின் அருகே சென்று அவனை வியப்புடன் நோக்கினர். காட்பிரேவும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். மார்னரிடம் எல்லா விவரங்களையும் கேட்கவேண்டுமென்று துடித்தான். ஆனால் தன்னை மிகவும் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டான். எனினும் வெளிறிய முகத்துடன் தான் நடுங்கிக் கொண்டிருப் பதையும் உணர்ந்தான்.

அப்போது அறையிலிருந்த எல்லோருடைய பார்வையும் மார்னர்மேல் விழுந்தது. ஸ்கொயர் எழுந்து கோபத்துடன், "என்ன இது ? என்ன இது ? ஏனிப்படி வருகிறாய்? உனக்கு என்ன வேண்டும் ?" என்று கேட்டார்.

உடனே மார்னர் திரு. கிராக்கன்தார்ப்பைப் பார்த்து, "நான் டாக்டருக்காக வந்திருக்கிறேன்— டாக்டர் வேண்டும் " என்றான்.

"ஏன், எதற்கு டாக்டர்?" என்று கேட்டார் மற்றொருவர்.

"டாக்டர் இதோ இருக்கிறார். என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கமாகச் சொல் " என்றார் கிராக்கன் தார்ப்.



"ஒரு பெண் பிள்ளை......." என்று மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கப் பேசத் தொடங்கினான் மார்னர். அப்போது அங்கே காட்பிரே வந்தான். "அவள் செத்துவிட்டாள் என்றுதான் நினைக்கிறேன். 'கற்குழி'க் கருகே பனிக்கட்டியில் மூழ்கிக் கிடக்கிறாள். அந்த இடம் இங்கிருந்து வெகுதூரமில்லை" என்றான் மார்னர்.

காட்பிரேவுக்கு நெஞ்சு துணுக்கென்றது. அவ னுடைய மனத்தில் அப்போது ஒரு பயம் எழுந்தது. 'அவள் இறக்காமல் இருந்துவிட்டால்?' என்று பயந்தான். இயல்பிலேயே இரக்கவுள்ளம் படைத் திருந்த அவனுக்கு இக் கொடிய எண்ணம் தோன்றக் காரணம் அவள் இறப்பதில்தான் அவனுடைய இன்ப எதிர்காலம் அமைந்திருந்தது என்பதுதான்.

திரு. கிராக்கன்தார்ப் மார்னரைப் பார்த்து, "இங்கு ஒன்றும் இரைந்து பேசவேண்டாம். அந்த அறைக்குள்ளே போயிரு. டாக்டரைக் கூட்டி வருகிறேன் " என்றான். ஸ்கொயரைப் பார்த்து, "பனிக்கட்டிகளுக்கு நடுவே ஒரு பெண் இறந்துவிட்ட தாக நினைக்கிறேன். இதை ஒன்றும் பெரிதுபடுத்த வேண்டாம். நம் பெண்களுக்கு அதிர்ச்சி உண்டாகி விடும். ஏதோ ஓர் ஏழைப் பெண் பசியாலும் குளிராலும் துன்பப்படுகிறாள் என்று மட்டும் சொல்லி வையுங்கள். நான் போய் டாக்டர் கிம்பிளைக் கூட்டி வருகிறேன்" என்றார்.

இதற்குள் பெண்கள் எல்லோரும் விழுந்தடித்துக் கொண்டு அங்கே வந்து சேர்ந்துவிட்டனர். தனிமை நெசவாளியான சைலசுமார்னர் எப்படிக்குழந்தையுடன் இந்தப் புதுமையான சூழ்நிலையில் இங்கு வந்தான்

என்பதை அறியும் ஆர்வம் கொண்டிருந்தனர். புதிய சூழ்நிலைகளைப் பார்த்துப் பாதி அச்சமும் பாதி மகிழ்ச்சியும் கொண்டிருந்த அக்குழந்தையைப் பற்றி அறியவும் அவர்கள் விரும்பினர். 'யார் குழந்தை?' என்று பல பெண்கள் ஒரே குரலில் கேட்டனர். நான்சியும் காட்பிரேயைப் பார்த்து இதே கேள்வியைக் கேட்டாள்.

மார்னர் மிக்க பெருமுயற்சியுடன், "எனக்குத் தெரியாது. யாரோ ஏழைப்பெண் ஒருத்தி—பனிக் கட்டியில் கிடக்கிருள். அவள் குழந்தையாயிருக்கும் என நினைக்கிறேன்" என்று தட்டுத் தடுமாறிச் சொன்ஞன். அவன் வாயிலிருந்து சொற்கள் துன்பப் பட்டுக் கொண்டே வெளிவந்தன. 'நான் சொல்லுவது சரிதானு?' என்று தன் மனச்சாட்சியை அமைதிப் படுத்துவதற்காகத் தனக்குள் கேட்டுக் கொண்டான்.

"ஏன், இந்தக் குழந்தையை எங்களிடமே விட்டு விடுங்களேன்" என்று திருமதி கிம்பிள் தயங்கிக் கொண்டே மார்னரிடம் கேட்டாள். ஆனால் அழுக்குத் துணியுடுத்தியிருந்த குழந்தையை எடுத்தால் தன் பட்டாடை அழுக்குப் பட்டுவிடுமென்று கருதினுள். "யாராவது ஒரு வேலைக்காரியை அனுப்பிக் குழந்தையை எடுத்துக் கொண்டு வரும்படி சொல்கிறேன்" என்ருள்.

"இல்லை, இல்லை. அதை விட்டுப் பிரிய என்னுல் முடியாது. அதைத் தனியே விட முடியாது. அதுவே என்னிடம் வந்தது. அதை வைத்திருக்க எனக்கு உரிமையுண்டு" என்று பேசினுன் மார்னர்.

சிறிது நேரத்திற்கு முன்புதான் குழந்தையை விட்டுவிடலாம் என்று மார்னர் தீர்மானித்திருந்தான்.



ஆனல் இப்போது திடீரென்று அவனையறியாமலேயே சொல்லிய பதில் அவனுக்கே வியப்பை அளித்தது. கடந்த ஒரு மணித் துளிக்கு முன்பு வரை அக்குழந்தையைப் பற்றிய திட்டம் ஒன்றும் அவனிடம் இருக்கவில்லை.

"இது மாதிரி எப்போதாவது நீ கேட்டதுண்டா?" என்று அருகிலிருந்த ஒரு பெண்ணிடம் கேட்டாள் திருமதி கிம்பிள்.

"நங்கையீர், இப்போது உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். சிறிது வழிவிட்டு விலகி நில்லுங்கள்" என்று சொல்லிக்கொண்டு அறைக்குள்ளிருந்து வெளி வந்தார் டாக்டர் கிம்பிள். இதுவரை அவர் அறைக்குள் சீட்டாடிக் கொண்டிருந்தார்.

அவர் காட்பிரேயைப் பார்த்து, "தடித்த ஓர் இணை வார்ச் செருப்புகள் கொண்டுவா. யாரிடமாவது சொல்லியனுப்பி வின்த்ரோப் வீட்டுக்குப் போய் டோலியை அழைத்துவரச் செய். அவள்தான் மிகவும் தகுதியானவள். இரவு உணவுக்கு முன்பு வின்த்ரோப் இங்கிருந்தானே, அதற்குள் போய்விட்டானு?" என்ருர்.

"ஆம், ஐயா! அவரை நான் வழியில் பார்த்தேன். ஆனல் அவரை நிறுத்தி ஒன்றும் சொல்லவில்லை. டாக்டரிடம் போகிறேன் என்பதைமட்டும்தான் சொன்னேன். அவர் டாக்டர் ஸ்கொயரின் வீட்டிலிருப்பதாகச் சொன்னுர். நான் விரைந்து இங்கே ஓடிவந்தேன். வீட்டின் பின்புறம் யாரும் இல்லை. அதனுல்தான் நேராகக் கூட்டமாயிருக்கும் இவ்விடத்திற்கு ஓடிவந்தேன்" என்ருன் காட்பிரே.

அவ் வீட்டின் விளக்கொளியும், மங்கையர் முகத்துப் புன்முறுவலும் அக்குழந்தையின் கவனத்தை நெடுநேரம் ஈர்த்துவைத்திருக்க முடியவில்லை. 'அம்மா' என்று கத்தத் தொடங்கியது. ஆனால் மார்னரிடம் ஒட்டிக்கொண்டே யிருந்தது. மார்னர் அக்குழந்தையின் முழு நம்பிக்கையையும் பெற்றுவிட்டான் போலும் !

காட்பிரே வார்ச் செருப்புக்களைக் கொண்டுவந்து விட்டான். அப்போது குழந்தையின் குரலைக்கேட்டதும் அவன் மனத்தில் ஊசி குத்துவதுபோலிருந்தது. விரைவாக அவன் "நான் போய் அந்த அம்மா திருமதி. வின்த்ரோப்பைக் கூட்டி வருகிறேன்" என்று சொன்னான்.

"ஓ! இதற்கு நீயே போகவேண்டுமா? யாரை யாவது அனுப்பினால் போதுமே" என்றார் டாக்டர் கிம்பிள்.

"நான் ஏதாவது உதவி செய்யமுடியுமானால் சொல்லுங்கள், டாக்டர்" என்றார் திரு. கிராக்கன்தார்ப். ஆனால் கிம்பிளின் காதில் அச்சொற்கள் விழவில்லை.

காட்பிரேவும் அங்கிருந்து போய்விட்டான். ஒரு பைத்தியக்காரனைப் போலத் தோற்றமளிக்கக்கூடாது என்பதற்காகத் தன் தொப்பியையும், மேலங்கியினையும் எடுத்து வருவதற்காகப் போனான். ஆனால் அவன் தன் காலில் இருந்த மெல்லிய செருப்புகளைப் பற்றிய நினைவே இல்லாமல் அவ் வீட்டிலிருந்து ஓட்டமாக வெளியேறினான்.

காட்பிரே 'கற்குழி'யை நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்தான். அவனுடன் டோலி வந்து கொண் டிருந்தாள். பனியால் இறந்துபோன யாரோ ஒரு



பெண்ணிற்காக அவன் காலில் வார்ச்செருப்பில்லாமல் நடந்து செல்வதைப் பார்த்து அவளுக்குப் பெரிதும் பரிவு உண்டாயிற்று. "நீங்கள் திரும்பிப் போங்கள் ஐயா, இல்லாவிடில் இந்தக் குளிரினால் உங்களுக்குத் தடுமல் ஏற்பட்டுவிடும்" என்றாள்.

"இல்லை. நான் புறப்பட்டு விட்டேன். இனி நிற்க மாட்டேன்." என்றான். அதற்குள் எல்லோரும் இறந்துபோய்க் கிடந்த மோலியைத் தூக்கிக்கொண்டு மார்னரின் குடிசைக்கே வந்து விட்டார்கள்.

குடிலுக்கு வெளியே நின்றுகொண்டு காட்பிரே அவளைப் பார்த்து, "நீ உள்ளே போய்ப் பார்த்துவிட்டு ஏதாவது நான் செய்யமுடியுமானால் வந்து கூப்பிடு" என்றான்.

"நல்லது ஐயா! நீங்கள் இரக்க முடையவர். அன்புள்ளம் கொண்டவர்" என்று சொல்லிவிட்டு டோலி குடிலின் கதவருகே சென்றாள்.

தனக்குக் கிடைத்த தகுதியில்லாத இப்புகழ்ச்சி யைக் கேட்டதும் காட்பிரேவுக்கு வெந்தபுண்ணில் வேலெறிவது போலிருந்தது. அவன் மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தான். முழங்கால்வரை பனிக்கட்டி இருப்பதைக்கூட அவன் உணரவில்லை. அந்தக் குடி லுக்குள் என்ன நடந்திருக்கும் என்பதைப்பற்றி அறிய விருப்புள்ளவனும், தன் எதிர்காலத்தைப் பற்றிய எண்ணம் உடையவனுமே நடந்து கொண்டிருந் தான். மற்ற எதைப்பற்றியும் அப்போது அறியாதவனா யிருந்தான்.

"என்ன நேர்ந்தாலும் நீ உன்செய்கையின் பலனை அனுபவிக்கத்தான் தயாராயிருக்கவேண்டும். துன்புறும்

உன் மனைவியை ஏற்றுக்கொள். குழந்தையும் உன்னுடையதென்று எல்லாரிடமும் கூறிவிடு” என்று அவன் ஆழ்ந்த உள்ளத்திலிருந்து மனச்சான்று கூறியது. ஆனால் மனச்சான்று சொல்லியபடி செய்வதற்கு அவனுக்குத் துணிவே இல்லை. அதன்படி நடந்து நான்சியை இழந்து விடுவதற்கும் அவன் மனம் ஒருப்படவில்லை. திடீரென்று அவனுள்ளத்திலிருந்து நெடுநாளைய துன்பத்தை யெல்லாம் போக்கக்கூடிய வேறோர் எண்ணம் முகிழ்த்தது. “மோலி இறந்து விட்டால் தாராளமாக நான்சியைத் திருமணம் செய்து கொள்ளலாம்; புதிய வாழ்க்கையைத் தொடங்கி விடலாம்; எப்படியும் குழந்தையை வளர்த்து வரலாம்” என்று எண்ணினான்.

இப்படி எண்ணிக்கொண்டு எவ்வளவுநேரம் நின்று கொண்டிருந்தான் என்பது காட்பிரேவுக்கே தெரியாது. மார்னரின் குடில்கதவு திறந்தது. உள்ளேயிருந்து திரு. கிம்பிள் வெளியே வந்தார். என்ன ஆகியிருக்குமோ என்ற துடிப்புணர்ச்சியை அடக்கிக் கொண்டவனாய் அவரிடம் கேட்பதற்காக முன்னோக்கிச் சென்றான்.

“உங்களுக்காகத்தான் இவ்வளவுதூரம் வந்து காத்திருக்கிறேன்” என்றான் காட்பிரே.

“பூ! நீ இவ்வளவுதூரம் வந்ததே அறியாமை. யாராவது ஓர் ஆளை அனுப்பியிருக்கக்கூடாது? இனிமேல் ஒன்றும் செய்வதற்கில்லை. அவள் இறந்து விட்டாள். அவள் இறந்து பலமணி நேரம் ஆகியிருக்க வேண்டும்” என்றார் கிம்பிள்.

“அவள் எப்படியிருப்பாள்?” என்று அடையாள மறிந்துகொள்ளும் ஆர்வத்துடன் கேட்டான் காட்பிரே.



“ஓர் இளம் பெண்தான். நீண்ட கருங்கூந்தல். ஒல்லியான வெளுத்த உடல். ஏதோ ஒரு நாடோடிப் பெண். கந்தல் துணிதான் உடுத்தியிருந்தாள். எனினும் அவள் கையில் திருமண அடையாள மோதிரம் இருந்தது. சரி என்னோடு வா” என்றார் திரு. கிம்பிள்.

“நான் அவளைப் பார்க்க விரும்புகிறேன். அப்படிப் பட்ட ஒருத்தியை நான் நேற்றுப் பார்த்தேன். ஒன்றிரண்டு மணித்துளியில் உங்களை வந்து பிடித்து விடுகிறேன்” என்றான் காட்பிரே.

திரு கிம்பிள் போய்க் கொண்டிருந்தார். காட்பிரே மார்னரின் குடிலுக்குத் திரும்பினான். ஒரே ஒரு முறைதான் அவன் இறந்தவளின் முகத்தைப் பார்த்தான். அதுவே அங்குக் கிடந்தவள் தன்னால் வெறுக்கப்பட்ட மனைவிதான் என்பதை அறிந்து கொள்ளப் போதுமானதாயிருந்தது.

உடனே அவன் அடுப்பருகே தன் கண்பார்வையைத் திருப்பினான். அங்கே மார்னர் தான் பெற்ற குழந்தையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டான். இப்போது அக்குழந்தை உறங்காமல் விழித்துக் கொண்டிருந்தாலும் மிக அமைதியாகவே இருந்தது. குழந்தையின் நீலநிறக் கண்கள் அகல விரிந்து காட்பிரேவை நோக்கின. ஆனால் அக்குழந்தை அதுதான் தன் அப்பா என்று அறிந்துகொள்ளவில்லை. இதைக் கண்டதும் காட்பிரேவுக்கு வருத்தமும் கவலையும் கலந்த ஓருணர்ச்சி ஏற்பட்டது. பிறகு அந்தக் குழந்தை மார்னரைத் திரும்பிப் பார்த்துத் தன் மென் சிறு கையால் அவன்றன் திரைந்த கன்னங்களை அடித்துக் கொண்டிருந்தது.

"நாளைக்கு இந்தக் குழந்தையைப் பொறுப்பேற்றுக் கொள்வோரிடம் கொண்டுவந்து விட்டுவிடுவாயா ?'' என்று கேட்டான் காட்பிரே. அக்குழந்தைமீது பேரார்வமுள்ளவனைக் தன்னைக் காட்டிக்கொள்ளக்கூடாது என்று முயற்சி செய்துகொண்டே பேசினன்.

'யாரது?' எனத் திடீரெனத் திரும்பினன் மார்னர்; ''இக் குழந்தையை நான் விட்டுவிடும்படி அவர்கள் செய்துவிடுவார்களா ?'' என்ருன்.

''இந்தக் குழந்தையை வைத்துக்கொண்டிருக்க விரும்பமாட்டாய் என்று நினைக்கிறேன். திருமணமாகாமல் மிகவும் வயதாகிவிட்ட உனக்கு எதற்கு இந்தக் குழந்தை?'' என்று கேட்டான் காட்பிரே.

''இச்குழந்தை தன்னுடையதே என்று சான்று காட்டும்வரை யாரும் என்னிடமிருந்து இதைப் பிரித்து விடமுடியாது. இதன் அம்மா இறந்து விட்டாள். இதற்கு அப்பாவும் இல்லை என்று நான் நினைக்கிறேன். பாவம்! இது ஒரு தனிமையான பொருள். நானும் தனியாக இருக்கிறேன். என் பணமும் போய்விட்டது. எங்கே என்று தெரியவில்லை. இந்தக் குழந்தையே என்னிடம் வந்தது. அது எங்கேயிருந்து வந்ததென்றும் தெரியவில்லை. எனக்கொன்றும் தெரியாது'' என்ருன் மார்னர்.

''பாவம் ஏழைக்குழந்தை. அதற்குத் துணி வாங்குவதற்காக நான் கொஞ்சம் பணம் கொடுக்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டே அவன் தன் பையில் கையை விட்டான். அரைப்பவுன் இருந்தது. அதை மார்னரின் கையில் திணித்துவிட்டுக் கிம்பளைப் பிடிப்பதற்காகக் குடிசையைவிட்டு வெளியேறி நடந்தான்.



காட்பிரே ஈரமில்லாத காலுடன் வெள்ளையறைக்குத் திரும்பிவந்தான். இனிமேல் தன்னுள்ளத்தை அலைக்கழிக்கும் பொருள் ஒன்றுமில்லை என்று பெரிய விடுதலையுணர்ச்சியும், மனமகிழ்ச்சியும் கொண்டான். 'இனிமேல் துணிந்து நான்சியிடம் திருமணம் செய்து கொண்டுவிடுவதாகச் சொல்லி விடலாம்; அவள் தன்னை எப்படி எல்லாம் இருக்கவேண்டுமென்று விரும்புகிருளோ அப்படியே நடந்துகொள்ளலாம்' என்று மகிழ்ந்தான். இறந்துபோன தன் மனைவியை யாரேனும் அடையாளமறிந்துகொண்டுவிடுவார்களோ என்ற பயம் இப்போது அவனுக்கில்லை. அவளுடைய திருமணப் பதிவேடும் இனி யாரும் பார்க்கமுடியாதபடி புதைக்கப்பட்டு விட்டது. டன்சே திரும்பி வந்தால் தன்னைக் காட்டிக் கொடுத்துவிட முடியும். ஆனல் அவன் வாயையும் எப்படியும் அடக்கிவிடலாம். எப்படியும் குழந்தையைக் கைவிடப்போவதில்லை. அப்பா இன்னரென்று அறியாமலேயே அக்குழந்தை மகிழ்ச்சியாக வளரமுடியும். தன் குழந்தையை உரிமையாகப் பெருமல் அப்பாவும் மகிழ்ச்சியாயிருக்கமுடியும்' என்று எண்ணி இன்புற்ருன்.

---

# 12. எப்பியை மார்னர் எடுத்து வளர்த்தல்

அந்த எளிய தாயின் சவ அடக்கத்திற்குப் பின்னர் மார்னர் தானே அக்குழந்தையை வைத்து வளர்க்க வேண்டுமென்று முடிவுசெய்தான். இச்செய்தி ஊரில் உள்ளோர்க்கெல்லாம் தெரிந்தது. அவன் பணம் காணாதபோது ஏற்பட்ட பரபரப்பைப் போலவே இதுவும் ஊர்மக்களிடையே பெரும் பரபரப்பை மூட்டி விட்டது. அவனுக்குத் துன்பம் தொடங்கிய நாளிலிருந்து ஊரினர் காட்டிவந்த இரக்கவுணர்ச்சி இப்போது மிகுதிப்பட்டது. குறிப்பாகப் பெண்கள் மார்னரிடம் மிகவும் இரக்கம் காட்டினர். தாய்மார்கள் எல்லாம் எப்படி ஒரு தனியான மனிதன் இரண்டரை ஆண்டு நிரம்பிய ஒரு குழந்தையை எப்போதும் தன்னிடமே வைத்துக்கொண்டே இருக்கமுடியும்? என்று வியப்புக் கொண்டனர். மார்னரிடம் பலவித யோசனைகள் கூற முன்வந்தனர். இவர்களுக்குள் டோலி வின்த்ரோப் மார்னருக்கு எவ்வித உதவியும் செய்ய எப்போதும் தயாராயிருந்தாள். மார்னரும் அவளை விரும்பி வரவேற்றான். ஏனெனில் அவள் அறிவுரை கூறுபவளாக மட்டும் இல்லாமல் அன்புமிக்குடையவளாயும் இருந்தாள். அவளிடம் மார்னர் காட்பிரே கொடுத்துவிட்டுப் போன பொன் நாணயத்தைக் காட்டினான். அக்குழந்தைக்கு எப்படித் துணிகள் வாங்கலாம் என்று அவளை ஆலோசனை கேட்டான்.

"ஓ மார்னர், ஓர் இணை காலுறைகளைத் தவிர வேறொன்றும் வாங்கவேண்டியதில்லை. ஏனெனில் எங்கள் வீட்டுக் குழந்தை ஆரான் ஐந்தாண்டுகளுக்கு



முன்பு போட்டுக்கொண்டிருந்த துணிகள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டுவந்து தருகிறேன். வேகமாக வளரும் குழந்தைகளுக்காகச் செலவு செய்து துணி வாங்கிப் போடுதல் அறியாமையே" என்றாள்.

அன்றைக்கே அவள் துணிகளை எடுத்துக்கொண்டு வந்து மார்னரிடம் காட்டினாள். பெரும்பாலானவை தையல் போடப்பட்டவையா யிருப்பினும், அவை ஒழுங்காயும் தூய்மையாயும் இருந்தன. பிறகு அவள் அக்குழந்தையைக் குளிப்பாட்டினாள். நீராடிய குழந்தை அழகாயும், தூய்தாயும் காணப்பட்டது. அதன் பொன்னிற மயிர்முடி பொலிவுடன் திகழ்ந்தது. அக்குழந்தை டோலியின் மடியில் அமர்ந்து அவள் கால் விரல்களைப் பிடித்து மகிழ்ச்சியாக விளையாடியது. தனக்குள்ளே கிச்சுப்பிச்சென்று மழலைமொழி எழுப்பிக்கொண்டிருந்தது. சிலசமயம் 'அம்மா' என்று சொல்லும். இப்போது அச்சொல் அம்மாவை அழைப்பதற்காகவோ, பயத்தை அறிவிப்பதற்காகவோ சொல்லப்படுவதில்லை.

டோலி மார்னரைப் பார்த்து, "இக்குழந்தையை வைத்துக் கொள்வதற்கு உனக்கு உரிமையுண்டு என்றுதான் நினைக்கிறேன். அது உனக்காகவே அனுப்பப்பட்டது. சிலர் வேறுவிதமாக நினைக்கலாம். இவ்வளவு சிறு குழந்தையாயிருக்கும்போது உனக்குச் சிறிது தொல்லையாகக்கூட இருக்கலாம். ஆனால் நான் மகிழ்ச்சியுடன் வந்து அக்குழந்தையைப் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள்.

"மிகவும் நன்றி. நான் செய்யவேண்டியதைப் பற்றி எல்லாம் சொன்னால் மகிழ்ச்சியுடன் செய்கிறேன்.

அக்குழந்தைக்கு வேண்டிய தெல்லாம் என் கையாலேயே செய்ய விரும்புகிறேன். இல்லாவிடில் அது வேறு யார்மேலாயினும் தன் அன்பைத் திருப்பிவிடும்; எனமேல் அன்பு காட்டாது போய்விடும். இதுவரை என்னை நானே கவனித்துக் கொண்டு வந்திருக்கிறேன். அதனால் நானே எல்லாம் செய்ய முடியும்'' என்றான் மார்னர்.

''ஆம், செய்ய முடியும். குழந்தைகளோடு மிகவும் கொஞ்சி விளையாடும் ஆண்களை நான் பார்த்திருக்கிறேன். இதோ பார், முதலில் தலையின் வழியாக இந்த துணியைக் குழந்தைக்குப் போடவேண்டும். பிறகு கைகளை அதில் நுழைக்கவேண்டும்" என்று குழந்தைக்கு உடையணிவது எப்படி என்று மார்னருக்குச் சொல்லிக்கொடுத்தாள். குழந்தையும் மார்னரிடம் தன் கைகளை நீட்டிக்கொண்டிருந்தது.

''இதோ பார், குழந்தை உன்னிடம் எவ்வளவு பிரியமாயிருக்கிறது. அதை எடுத்துக்கொள். அதற்குத் துணியெல்லாம் போடு. பிறகு அது உன்னிடம் வந்ததிலிருந்து அதற்கு நீயே எல்லாம் செய்து வருவதாகச் சொல்லிக் கொள்ளலாம்'' என்றாள் டோலி.

மார்னர் குழந்தையைக் கையில் எடுத்து டோலியின் உதவியுடன் அதற்கு உடையணிவித்தான். " இப்படித்தான் ! எளிதாகச் செய்துவிட்டாயே ! ஆனால் நீ தறியில் உட்கார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் என்ன செய்வாய்? அவள் வரவரப் பெரியவளாகி வருவாள்; அங்குமிங்கும் தத்தித் தத்தி நடந்துசெல்வாள். கீழே விழுவாள்; சாமான்களை



யெல்லாம் தூக்கிப் போடுவாள்" என்று சொன்னாள் டோலி.

மார்னரும் அதைப்பற்றிச் சிறிது நேரம் ஆழ்ந்து சிந்தித்தான். கடைசியில், ''தறியின் காலில் அவளைக் கட்டிவைத்து விடுகிறேன். ஏதாவது ஒரு நீளக் கயிற்றால் அவளைப் பிணித்து விடுகிறேன்" என்றாள்

''நல்லது; அவள் சிறு குழந்தையாயிருப்பதனால் அதுவே போதும். நான் உன்னிடம் என் சிறு நாற்காலியையும், அவளுக்கு விளையாடச் சில பொம்மைகளையும் கொண்டு வந்து தருகிறேன். அவள் நாற்காலிமேல் உட்கார்ந்துகொண்டு பொம்மைகளுடன் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருப்பாள். ஆனால் ஒரு கிறித்துவக் குழந்தையைப் போல அதை நீ வளர்த்துவர வேண்டும். அதை மாதா கோவிலுக்கு எடுத்துச் சென்று பெயர் சூட்ட வேண்டும்'' என்றாள் டோலி.

''சரி; குழந்தைக்காக என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்யத் தயாராயிருக்கிறேன். இந்த ஊரில் அவளுக்கு என்னென்ன செய்ய உரிமையிருக்கிறதோ, என்னென்ன செய்தால் நல்லதோ, அதெல்லாம் சொன்னால் அப்படியே செய்கிறேன்'' என்றான் மார்னர்.

''குழந்தையைப்பற்றி மதகுருவிடம் சொல்லும்படி என் கணவரிடம் சொல்கிறேன். அவளுக்கு ஒரு பெயரை நீயே தேர்ந்தெடுக்க வேண்டும். ஏனெனில் பெயர்சூட்டுவிழாவின்போது அப்பெயர் கொடுக்கப்பட வேண்டும்" என்றாள் டோலி.

''என் அம்மாவின் பெயர் கெபிசா; என் குழந்தைத் தங்கைக்கும் அதே பெயர்தான் வைக்கப்பட்டது

அவளை 'எப்பி' என்று சுருக்கமாக அழைத்தோம்'' என்றான் மார்னர்.

"சரி. அப்பெயரே நல்லது. நான் இப்போது போகிறேன். நான் குளிக்கும்போது அவளையும் குளிப்பாட்டி உன்னிடம் கொடுக்கிறேன். நான் என் மகன் ஆரானை ஒரு நாள் கூட்டிக் கொண்டு வருகிறேன். அவன் தன் அப்பா செய்து கொடுத்த சிறு தள்ளு வண்டியை அவளுக்குக் காட்டுவான்'' என்றாள் டோலி.

மாதாகோவிலில் குழந்தைக்கு எப்பி என்ற பெயரே வைக்கப்பட்டுவிட்டது. மார்னரும் எவ்வளவு தூய்மை



கோவிலில் குழந்தைக்குப் பெயரிடல்

யாகக் குளித்து உடையுடுத்திக் கொள்ள முடியுமோ அவ்வளவு தூய்மையுடன் முதல் தடவையாகக் கோவிலுக்குச் சென்றான். வெகு காலத்திற்கு முன்பு அவன் லாண்டர்ன் யார்டில் கேட்டதைப் போலவோ,



பார்த்ததைப் போலவோ, இவ்வூர்க் கோவிலில் ஒன்றும் நடக்கவில்லை.

மார்னர் எப்பியுடன் நாட்டணக்காக, மாதக் கணக்காகக் கோவிலுக்குப் போய்க் கொண்டிருந்ததால் அவ்வூர் மக்களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. கடந்த பதினைந்து ஆண்டுகளாக அவர்களும் இவனைப் பொருட்படுத்தவில்லை. இவனும் அவர்களிடம் நெருங்கிப் பழகவில்லை. இப்போதுதான் அவர்களுடன் கூடி வாழும் வாய்ப்பு ஏற்பட்டது. முன்பு பொன் சேர்ப்பதற்காகப் பல மணி நேரம் தறியிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தான். இப்போது பொன்னுக்குப் பதிலாக எப்பியின் பொன்முடி கிடைத்துவிட்டது. இப்போது அடிக்கடி தறியிலிருந்து இறங்கி வீட்டுக்கு வெளியே குழந்தையை எடுத்துக்கொண்டு இயற்கைக் காட்சிகளைக் காட்டுவான். எப்பி எதைப் பார்த்தாலும் அது வேண்டுமென்று கேட்பாள். குருவிகளையும் காக்கைகளையும் கண்டு களிப்புக் கொள்வாள். மார்னரின் வீட்டுக்குள்ளே ஓர் ஒளி நிலவுமாறு செய்தாள். பார்ப்பவர்கள் எல்லாரும் அவளிடம் அன்பு கொள்ளுமாறு மழலை மொழி பேசிப் பவளவாய் திறந்து சிரிப்பாள். மார்னருக்கு இப்போது இக்குழந்தையை வைத்துக் கொஞ்சுவதே இன்பப் பொழுது போக்காக இருந்தது.

முன்பு பொன்நாணயங்களைப்பற்றி எண்ணும் போது அவன் பிற எதைப்பற்றியும் எண்ண முடியாது போயிற்று. ஆனால் எப்பி வந்தவுடன் அவன் எண்ணத்திலும் செயலிலும் மாறுதல்களும் நம்பிக்கைகளும் ஏற்பட்டுவிட்டன. புதிய செயல்களில் அவன்

ஈடுபட்டான். அவன் வாழ்க்கைப் போக்கில் மறுமலர்ச்சி ஏற்பட்டுவிட்டது. ஊரினாரின் அன்பையும் இரக்கத்தையும் அவன் பெற முடிந்தது. பொன்னோ அவனை எப்போதும் தறியிலேயே உட்கார்ந்துகொண்டு துணியை மிகவும் மிகுதியாக நெய்யும்படி தூண்டிக் கொண்டேயிருந்தது. தறியின் ஒரே சத்தத்தைத் தவிர வேறொன்றையும் காதால் கேட்காதபடி செய்துவிட்டது. ஆனால் எப்பியோ நெசவிலிருந்து அவனுக்கு அடிக்கடி விடுதலையளித்து விடுமுறை நாட்களை ஏற்படுத்தினாள். அவனுடைய புலன்களுக்குப் புத்துணர்ச்சி ஏற்படுமாறு செய்தாள். அவள் எப்போதும் மகிழ்ச்சி நிறைந்தவளாயிருந்தாள். மார்னரையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கி வந்தாள்.

இளவேனிற் காலத்தே கதிரவன் தோன்றுங்கால் மலரும் மலர்களைக் கண்டு மகிழ்வாள் எப்பி. மாலையில் எப்பியைத் தூக்கிக் கொண்டு மார்னர் வயலிடங்களையெல்லாம் காட்டி அங்குப் பூத்திருக்கும் மலர்களையெல்லாம் எப்பி பார்க்குமாறு செய்தான். எப்பி வயலில் விருப்பம்போல் ஓடி விளையாடினாள். விரும்பிய பூக்களைப் பறித்தாள். இன்னிசை பாடும் வண்டுகளுடன் பேசினாள். வண்ணப் பூவிதழ்களுடன் மழலையாடினாள். பறவைகளைப் பார்த்தாள். ஏதாவது புதிய பொருள் கண்ணுக்குத் தென்படும்போதெல்லாம் ‘அப்பா, அப்பா’ என்று அவன் கவனத்தை யீர்ப்பாள். பிறகு அவள் குயில் கூவுவதைக் கூர்ந்து கேட்பாள். அவள் மகிழ்ச்சி யாரவாரம் செய்யும்போது மார்னர் ‘உஸ், பேசாதிரு’ என்று சொல்லி மீண்டும் பறவையின் பாட்டைக் கேட்கச் செய்வான். வயல்கரையில் உட்கார்ந்துகொண்டு மார்னர் தன் பழைய மூலிகைகளைத் தேடிப் பார்த்தான். அவன் கைக்கு அகப்பட்ட



போது அவை அவனிடத்துப் பழைய எண்ணங்களை அலையலையாக எழுப்பிவிடும். ஆனால் சட்டென்று அவற்றிலிருந்து விடுபட்டு எப்பியின் உலகத்திற்குத் திரும்பி அவளை எடுத்து முத்தமிட்டுக் கொஞ்சி இன்புறுவான்.

குழந்தையின் மனம் அறிவு பெறத் தொடங்கியதும் மார்னரின் மனம் பழைய நினைவுகளால் நிறையத் தொடங்கியது. அவள் வாழ்க்கை மலரும் போது, குறுகிய சிறையில் அடைபட்டுக் கிடந்த மார்னரின் உயிரும் மலர்ந்தது; முழு உணர்ச்சி பெற்றுச் சிறகடித்துப் பறந்தது.

மார்னருக்கு ஒவ்வொரு புத்தாண்டிலும் முன்னைய ஆண்டின் உற்சாகத்தினும் மிகுதியான மகிழ்ச்சியே ஏற்பட்டு வந்தது. எப்பிக்குச் சுற்றுப்புறத்திலுள்ள பொருள்களும், கேட்கும் ஒலிகளும் இன்னும் தெளிவாய்த் தெரிந்தன. அதனால் ‘அப்பா, அப்பா’ என்ற ஒலி நாடோறும் மிகுதிப்பட்டே வந்தது. மூன்று வயது ஆவதற்குள் எப்பி குறும்புச் செயல்கள் செய்வதற்கும் கற்றுக் கொண்டாள். அதற்குமேல் மார்னர் மிகவும் உன்னிப்பாக அவளைக் கவனித்துக்கொண்டிருக்க நேர்ந்தது; அவள் செயல்களைக் கண்டு சில சமயம் அவளை அடிக்கக்கூடத் தோன்றும். ஆனால் அவன் அன்பு அப்போது அவ்வாறு செய்வதைத் தடுத்துவிடும். டோலி வின்த்ரோப் எப்பியை மெல்ல அடித்து வளர்ப்பதில் தவறில்லை என்றும், செல்லமாகவே வளர்த்துக் கொண்டு வருவது நல்லதன்று என்றும் கூறிவந்தாள்.



எப்பியின் கால் கயிற்றால் கட்டப்பட்டிருத்தல்

மார்னரும் லினன் துணியை நீளமாகக் கிழித்து அவளைக் கட்டித் தறியில் அக் கயிற்றைக் கட்டி வைத்தான். கட்டியபிறகு அவளால் படுக்கைமீது ஏறி விழவோ, வேறெங்காவது ஓடி விழவோ முடியாது. ஒரு நாள் மார்னர் தறியிலேயே கண்ணுயிருந்தபோது மார்னரின் கத்தரிக்கோல்களை மாடத்திலிருந்து மெதுவாக எடுத்துத் துணிக் கயிற்றை அறுத்துக் கொண்டு வயல்வெளிக்கு ஓடிவிட்டாள். மார்னர் அவளை எல்லா இடங்களிலும் தேடினான். ஆனால் அவள் கண்ணிற்கு அகப்படவேயில்லை. மார்னர் கவலை மிகுதியால் பைத்தியம் பிடித்தவன் போலானான். கற்குழியில் உள்ள குளத்தில் தவறி விழுந்துவிட்டாளோ என்று கவலைப்பட்டான். கடைசியில் எப்பி ஒரு சிறு சேற்றுக் குளத்தின் அருகே உட்கார்ந்துகொண்டு தன் காலுறையைக் கழற்றி நீரில் விளையாடிக் கொண்டிருந்தாள். அவளுக்கருகிலேயே ஒரு காளைக்கன்று அவளை முட்டப் போவதுபோல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தது. மார்னர் அவளை விரைந்து வாரி எடுத்து அணைத்துக் கொண்டான். இழந்த புதையலைத் திரும்பப் பெற்றது போல மகிழ்ச்சியடைந்தான். அவளை உச்சிமோந்து பல முத்தங்கள் கொடுத்தான்.

வீட்டுக்கு வந்ததும் அவன் எப்பியைச் செல்லமாகச் சினந்துகொண்டான். "போக்கிரிப் பெண்ணே! இப்படியா கத்தரியை எடுத்துக் கயிற்றை அறுத்துக் கொண்டு காணாமல் ஓடிப்போய்விடுவது! இருஇரு. உனக்குத் தண்டனை கொடுக்கிறேன். அப்போதுதான் இனிமேல் சொல்லாமல் ஓடிவிடமாட்டாய்!" என்று சொன்னான். எப்பியை ஓர் அறையில் பூட்டிவைத்தால் தான் அவளுக்கு மறக்காமலிருக்கும் என்று எண்ணி

ஞன். அப்படியே ஒரு சிறு அறைக்குள் வைத்துப் பூட்டினுன். இது பெரிய தண்டனை என்றே அவன் மனம் சொல்லியது. எப்பி அழுவாள் என்று எதிர் பார்த்தான். ஆனுல் அது சிறிதுநேரம் பேசாதிருந்தது. பிறகு 'அப்பா, அப்பா' என்று கதவைத் தட்டத் தொடங்கியது. மார்னரின் மனம் இளகியது. கதவைத் திறந்துவிட்டு எப்பியை எடுத்து அணைத்துக்கொண் டான். அன்று தறிக்கு நேரங்கழித்தே போனுன். ஏனெனில் எப்பியை அவன் குளிக்கச்செய்ய வேண்டி யிருந்தது. பிறகு எப்பியைத் தறிக்கருகே ஒரு நாற் காலியைப் போட்டு அதில் உட்காரவைத்து அவளை அடிக்கடி பார்த்துக்கொண்டே யிருந்தான்.

நெய்த துணிகளையும், அவளையும் ஒருங்கே எடுத்துக் கொண்டுபோவது அவனுக்குச் சுமையாகவும் கடினமாகவும் இருப்பினும் மார்னர் வெளியே புறப் பட்டுப் போகும்போதெல்லாம் எப்பியை இடுப்பில் எடுத்து வைத்துக்கொண்டே செல்வது வழக்கம். எப்பியை வீட்டில் தனியே விட்டுவிட்டுப் போக அவனுக்கு விருப்பமில்லை. அவளை மிகப் பாதுகாப்போடு கவனிக்கக்கூடிய டோலியிடம்கூட விட்டு விட்டுச் செல்ல அவன் மனம் விரும்புவதில்லை. அவன் போகு மிடங்களிலும், அவ்வூரிலும் மார்னரின் மகளான எப்பி பார்ப்பவர்களுக்கு எல்லாம் மகிழ்ச்சிப் பொருளாக ஆகிவிட்டாள்.

இதுவரை மார்னர் துணிவிற்கப் போகும்போது துணியை விற்றுவிட்டு விரைவில் பணத்தை வாங்கிக் கொண்டு நேராக வீட்டுக்குத் திரும்பிவிடுவான். சில சமயம் துணிவாங்கும் பெண்கள் கொடுக்கும் உணவுப்



பொருள், காய்கறிகள் இவற்றைப் பெற்றுக்கொண்டு திரும்பிவிடுவான். இப்போது அவன் போகுமிடங் களில் எல்லாம் பெண்கள் புன்முறுவல்காட்டி வர வேற்றுப் பல ஆர்வ விஞக்களை எழுப்பினர். மார்னர் எங்கே போனுலும் அங்கே சிறிதுநேரமாவது உட்கா ராமல் வரமுடியாது. குழந்தையைப் பற்றிக் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லாமல் வரமுடி யாது. சிலர் குழந்தை வளர்ப்பைப்பற்றித் தாங்களறிந்த அளவில் யோசனைகள் கூறியனுப்புவர்.

எல்லாரும் எப்பியை ஆவலுடன் பார்த்து மகிழ்ந்தனர். வேலைக்காரச் சிறுமிகள் குழந்தையை எடுத்துக்கொண்டு போய்க் கோழிகளையும் குஞ்சுகளை யும் அவளுக்குக் காட்டி மகிழ்வர். சிறு குழந்தைகள் அவளுடன் சேர்ந்து விளையாட விரும்பினர். எப்பி அருகில் இருக்கும் போது எந்தக் குழந்தையும் மார்னரின் அருகில் வருவதற்குப் பயப்படுவதில்லை. எப்பிதான் மார்னரைப் புறவுலகத்தோடு இணைத்தாள். அவனுக்கும் குழந்தைக்குமிடையே அன்பு இருந்தது. குழந்தைக்கும் புறவுலகத்திற்கு மிடையே அன்பு இருந்தது. ஆண்கள் பெண்கள் முதல் பறவைகள் கூழாங்கற்கள் வரை எல்லாரும் எப்பியிடம் அன்பு பாராட்டினர்.

மார்னர் இப்போது தன் ராவிலோ வாழ்க்கையை எப்பிவழியாகவே எண்ணிப்பார்க்கத் தொடங்கினுன். ராவிலோவில் கிடைக்கும் நல்ல பொருள்கள் எல்லாம் அவளுக்கு வாங்கித்தரவேண்டும் என விரும்பினுன். பதினைந்தாண்டுகளாகத் தொடர்பறுந்து போன வாழ்க்கையில் மீண்டும் புத்துயிர் தோன்றியிருப்பதைக்

கருதிப்பார்த்தான். நெடுங்காலமாகச் சேர்த்துவைத்திருந்த பொன்குவியல் காணுமல் போனதிலிருந்து பணத்தைக் குவித்துப் பார்க்கும் பேராசை அவனுள்ளத்திலிருந்து அடியோடு மறைந்துவிட்டது. அதற்குப்பிறகு அவன் ஈட்டிய நாணயங்கள், திடீரென நிலவதிர்ச்சியால் தரைமட்டமான வீட்டைக் கட்டுவதற்காகக் கொண்டுவந்த கற்களைப் போலிருந்தன. பொன் நாணயங்களைத் தீண்டி மகிழ்ந்த இன்பம் அடியோடு மாய்ந்த வருத்தமிகுதியினுல் இப்போது பொற்காசுகளைப் பார்த்து மகிழவேண்டுமென்ற ஆசை அவனுள்ளத்தில் எழுவதில்லை. பணக்குவியலுக்குப் பதிலாக அவன் கவனத்தை யீர்ப்பதற்கு இப்போது வேருெரு பொருள் வந்துவிட்டது. இப்போது அவன் செலவழிப்பதில் நல்ல நோக்கம் இருப்பதையுமுணர்ந்தான். பணத்தைக் காட்டிலும் எப்பி தரும் இன்பமே பெரிதென உணர்ந்தான்.

மற்ற எல்லாரைக்காட்டிலும் ஒருவன் மட்டும் மார்னரின் பாதுகாப்பில் எப்பி வளர்ந்து வருவதைப் பெருவிருப்புடனும் ஆவலுடனும் ஆனுல் மிக மறைவாகக் கவனித்து வந்தான். ஓரன்புள்ளம் கொண்ட செல்வரிடம் பிறர் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் மிகுதியான விருப்பம் ஓர் ஏழை நெசவாளியின் கண்டெடுக்கப்பட்ட குழந்தைமீது இருப்பதாகக் காட்பிரே காட்டிக் கொள்ள விரும்பவில்லை. தற்செயலாக அவன் மார்னரைச் சந்திக்கும்போதெல்லாம் எப்பிக்காகச் சிறு பரிசுகளைக் கொடுப்பான். ஆனுல் பிறர்ஐயுறக் கூடாதபடி தன் மகளுக்கு இன்னும் நிறையச் செய்யுங் காலம் வரும் என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். குழந்தையைப்பற்றி அவன் சிறிதும் கவலைப்படவில்லை.



ஏனெனில் அது எளிய சூழ்நிலையில் வளர்ந்தாலும் எல்லாராலும் பரிவுடன் பார்க்கப்படுவதாயிருந்தது. செல்வச் சூழ்நிலையில் வளர்வதைக் காட்டிலும் ஏழ்மைச் சூழ்நிலையில் நிறைந்த இன்பத்துடன் குழந்தை வளர முடியும் என்பதை அவன் உணர்ந்திருந்தான்.

காட்பிரே இப்போது மிகுந்த நலத்துடனும் மகிழ்ச்சியுடனும் காணப்பட்டான். வாழ்க்கையில் அவனுக்கு இப்போது நோக்கம் என்பது இருந்தது. டன்சே திரும்பிவரவேயில்லை. ஊரிலுள்ளோர் அவன் போர்ப் படையில் சேர்ந்திருப்பான் என்றும், ஊரைவிட்டே ஓடிப்போய்விட்டான் என்றும் பேசிக்கொண்டனர். பெரிய இடத்துப் பேச்சுத் தமக்கு வேண்டாமென்று பலரும் அவனைக் குறித்து ஒன்றும் கவலைப்பட்டுக் கொள்ள விரும்பவில்லை. காட்பிரேவும் அவன் திரும்பி வருவானே வென்ற பயத்தை விட்டுவிட்டான். அவன் பெரும்பாலும் ஒவ்வொரு நாளும் நான்சியின் வீட்டிற்குக் குதிரைமீது போய்வந்தான். ஊரில் எல்லாரும் அவர்கள் திருமண நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். தன் எதிர்கால வாழ்க்கையைப் பற்றி எண்ணும்போது கற்பனைக் காட்சியில் நான்சியைச் சுற்றிக் குழந்தைகள் சிரித்து விளையாடிக் களித்து மகிழ்வதாகக் கண்டான். அக் குழந்தைகளோடு சேராத முதல் குழந்தையைப்பற்றி அவன் மறந்துவிடப் போவதில்லை. அதுவும் நன்ருக வளர்ந்து வருவதற்கு வழிசெய்வான். அதுவே தந்தையின் கடமை என்றும் உணர்ந்திருந்தான்.

# 13. மார்னர்—எப்பியின் புதுக்குடில் வாழ்க்கை

சைலசு மார்னர் புதுப் புதையல் கண்டெடுத்துப் பதினாறாண்டுகள் உருண்டோடிவிட்டன. ஒரு நாள் இலையுதிர்கால ஞாயிற்றுக் கிழமை. ராவிலோ ஊர்க் கோவிலின் மணிகள் ஒலித்துக் கொண்டிருந்தன. காலைப்பூசை முடிந்துவிட்டது. மக்கள் கோவிலிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தனர். ஏழை எளியோர் வெளியே காசுகள் தரும் செல்வர்களின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு நின்றிருந்தனர்.

மிகு செல்வம் படைத்தோரே கோவில் பூசை முடிந்ததும் முதன் முதலாக வெளிவருவது அக்காலத்திலுமிருந்தது. ராவிலோவில் பூசை முடிந்ததும் முதலில் வெளி வந்தது காட்பிரேதான். அவனுக்கு இப்போது வயது நாற்பத்திரண்டு ஆகிவிட்டது. சிறிது தடித்திருந்தான். ஆனால் முகத்தில் இருபத்தாறு வயதுக் காட்பிரேவுக்கும் இப்போதிருக்கும் காட்பிரேவுக்கும் அதிக வேறுபாடு தோன்றவில்லை. ஆனால் அவனருகில் அவன் கையைக் கோத்துக் கொண்டுவந்த நான்சி—திருமதி காட்பிரே—ஏறக்குறையக் கணவனின் வயதினள்—உடல் தோற்றத்தில் வெகுவாக மாறிவிட்டாள். அவள் கன்னத்தில் குடிகொண்டிருந்த பருவப் பூரிப்பு இப்போது காணப்படவில்லை. வயது அவள் முகத்தை வேறுபடுத்திவிட்டிருப்பினும், அவள் அன்பை வளர்த்தே வந்திருக்கிறது. எனினும் முதுவயது அவளைக் குரூபியாக்கிவிடவில்லை. அவள் உடையும், நடையும், தூய்மையும் காண்போர்க்கு விருப்பம் ஊட்டத்தக்கதாகவே இருந்தன.

திருமதி. காட்பிரேவும், திரு. காட்பிரேவும் உயரமான முதிய ஒருவருக்காகவும், சாதாரண உடையுடுத்தியிருந்த ஒருத்திக்காகவும் சிறிது நேரம் காத்துக்கொண்டிருந்தனர். ஏனெனில் நான்சி தன் அப்பாவும், அக்காளும் அன்று வருவார்கள் என்று சொல்லியிருந்தாள். அவர்கள் வெளியே வந்த பிறகு எல்லோரும் சேர்ந்து சிவப்பு மாளிகையை நோக்கிக் கோவிலிலிருந்து செல்லும் சிறுவழியினூடே நடந்து சென்றனர்.

சைலசு மார்னரை நாம் அடையாளங் காண முடியாமல் போய்விட முடியாது. அவன் வயதில் ஏற்படும் 'வெள்ளெழுத்து' அவனுக்கு ஏற்படவில்லை. ஆனால் அவனுடைய பெரிய நீலநிறக் கண்கள் சிறிது குழிந்திருந்தன. மற்ற உடலுறுப்புக்களும் அவன்றன் வயது முதிர்ச்சியை நன்கு எடுத்துக் காட்டின. அவனுக்கு இப்போது ஐம்பத்தைந்து வயதுதான் ஆயிருந்தது. எனினும் அவனுடை தளர்ந்த தோள்களும், நரைமயிரும் இன்னும் வயதுமுதிர்ந்தவனாக அவனைக் காட்டின. ஆனால் அவனருகே இளமை கொழிக்கும் ஒருத்தி எழில்நடையிட்டு நடந்துவந்தாள். அவள்தான் பதினெட்டு வயதை எட்டிப் பிடித்திருந்த எப்பி. பருவத்தின் பரிசைப் பெற்று அழகு கொழிக்கும் உருவம் பெற்றிருந்தாள். அவளுடைய நீண்ட சுருண்ட சிவப்புப் பொன்மயிர்கள் எப்படிச் சீவினாலும் படியாமல் இருந்தன; ராவிலோவில் எந்தப் பெண்ணுக்கும் மயிர் இப்படிச் சீப்புக்குப் பணியாமல் இருக்கவில்லை. எப்பி தன் தலைமயிர் மென்மையாகவும் ஒழுங்காகவும் இருக்க வேண்டுமென விரும்பினாள். எதிலும் அவள் ஒழுங்கையே கடைப்பிடித்து வந்தாள். தன் பிரார்த்தனைப் புத்தகத்தைக்கூடக் கைக்குட்டையில் மடித்து ஒழுங்குற வைத்துக்கொண்டு, அது அழுக்காகாமல் பார்த்துக்கொண்டாள்.

கோவிலைவிட்டு வரும்போது எப்பி மார்னரிடம், "திருமதி. வின்தராப்பைப்போல நாமும் ஒரு சிறு தோட்டம் வைத்துக் கொள்ளலாம் என்று விரும்புகிறேன் அப்பா" என்றுள் நடந்துகொண்டே; "அதற்கு நிறைய மண்ணைக் கொத்த வேண்டியிருக்கும். புதுமண் கொண்டுவந்து கொட்ட வேண்டும். ஆனால் அந்த வேலையை நீங்கள் செய்வதற்கு என் மனம் ஒருப்படவில்லை. அது உங்களுக்கு மிகவும் பளுவான வேலை" என்றுள்.

"ஆம். நீ ஒரு சிறுதோட்டம் வேண்டும் என்று விரும்பும் போது அதை நான் செய்யமுடியும். நீண்ட மாலைப் போதுகளில் கொஞ்ச நேரமும், காலையில் தறி புகுவற்கு முன்பு சிறிது நேரமும் தோட்டத்திற்காக வேலைசெய்கிறேன். ஒரு தோட்டம் வேண்டும் என்று ஏன் நீ முன்கூட்டியே சொல்லவில்லை?" என்று கேட்டான் மார்னர்.

"நான் உங்களுக்காக நிலத்தைக் கொத்திப் பண்படுத்தித் தருகிறேன், ஐயா" என்றுன் எப்பிக்குப் பின்னலேயே கோவிலிலிருந்து வந்து கொண்டிருந்த, புத்தாடை அணிந்திருந்த ஓர் இளைஞன். அவன் இப்போது எப்பிக்குப் பக்கத்திலேயே வந்துவிட்டான். "எனக்கு அது மிகவும் எளிதான காரியம்தான்; காட்பிரேவின் தோட்டத்திலிருந்து புதுமண் கொண்டு வந்து தருகிறேன். நான் மண் எடுத்துக்கொண்டு போக அவரும் மகிழ்ச்சியுடன் அனுமதிப்பார்" என்றுன் அவ்விளைஞன்.

"ஓ ஆரான்! நீயா? நான் உன்னைப்பார்க்காது போய்விட்டேன். நல்லது. நீயும் எனக்குதவுவதானல்



நாமிருவரும் விரைவில் எப்பிக்கு ஒரு தோட்டத்தை உண்டாக்கிக் கொடுத்துவிடலாம்" என்றுன் மார்னர்.

"அப்படியானல் கற்குழிக்கு இன்று மாலையிலேயே நான் வந்துவிடுகிறேன். தோட்டத்துக் கேற்ற நிலம் எதுவென நாம் பார்த்து முடிவு செய்யலாம். காலையில் நான் ஒருமணி நேரம் முன்னதாக எழுந்து தோட்டத்தை உண்டாக்கும் வேலையில் ஈடுபட வந்துவிடுகிறேன்" என்றுன் ஆரான்.

"நீங்கள் மிகவும் துன்பப்பட்டு நிலத்தைக் கொத்திவிடுவதில் ஈடுபடக்கூடாது என்று உறுதிகூறும் வரை நான் அவர் வருவதற்கு ஒப்புக்கொள்ள மாட்டேன்" என்றுள். அதற்குள் அவளுக்குச் சிறிது வெட்கம் வந்துவிடவே, "நான் அதைப்பற்றி ஒன்றும் சொல்லியிருக்கக்கூடாது. திருமதி வின்த்ரோப்தான் ஆரான் அன்புடன் உதவி செய்ய முன்வருவார் என்பதைக் குறிப்பிட்டார்" என்றுள் நாணங்கலந்த மெல்லிய குரலில்.

"அம்மா சொல்லாமலேயே அது உனக்குத் தெரிந்திருக்குமே! ஏன், நான் உன் அப்பாவுக்காக உதவி செய்ய எப்போதும் தயாராயிருக்கிறேன் என்பது அவருக்கும் தெரிந்திருக்கும்" என்றுன் ஆரான்.

"அப்பா, நிலம் கொத்தப்படும்வரை நீங்கள் ஒன்றும் வேலை செய்யவேண்டாம். கொத்திய பிறகு நிலத்தில் நீங்களும் நானும் பூந்தொட்டிகளை வைக்கலாம்; பூச்செடிகளை நடலாம். நம்மைச் சுற்றிப் பூக்கள் பூத்திருக்கும்போது நம்வீடே ஒரு தனியழகுடன் காட்சியளிக்கும்" என்றுள் எப்பி.

"எந்தச் செடி வேண்டுமானாலும் சிவப்பு மாளிகையிலிருந்து நான் கொண்டுவருகிறேன். அங்குத்தான் நான் தோட்டவேலை செய்து வருகிறேன். அங்கே நான் நிறையச் செடிகொடிகளை வெட்டியெறிந்துவிட வேண்டியிருக்கிறது. அவற்றை எடுத்துப் பயன்படுத்திக் கொள்வார் யாருமில்லை" என்றான் ஆரான்.

"நல்லது. எங்களுக்காக நிறையச் செய்ய முயல வேண்டாம். சிவப்பு மாளிகையில் இன்றியமையாதவற்றை இங்குக்கொண்டுவருவதற்காகக் காட்பிரேவைக் கேட்கவும் வேண்டாம். திரு. காட்பிரே எப்போதும் எங்களிடம் அன்பாகவே இருந்து வருகிறார். இந்தக் குடிலுக்கு முற்றத்தில் வேலியிட்டுத் தந்ததுடன் படுக்கைகளும் பல பொருள்களும் கொடுத்திருக்கிறார். அவரிடமிருந்து இன்னும் நிறைய வாங்கிக்கொள்ள எனக்கு விருப்பமில்லை" என்றான் மார்னர்.

"அதைப்பற்றி நீங்கள் ஒன்றும் பயப்பட வேண்டாம். சரி. இப்போது வீட்டுக்குப் போக வேண்டும் என் அம்மா என்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள்" என்று கூறினான் ஆரான்.

"அம்மாவை உங்களோடு இன்றுமாலை கூட்டிக் கொண்டுவந்துவிடுங்கள். தோட்டத்தைப்பற்றி உங்கள் அம்மா முதலிலிருந்து தெரிந்துகொள்ளாமல் இருக்கக் கூடாது" என்றாள் எப்பி.

"ஆமாம், முடிந்தால் கட்டாயம் கூட்டி வா'ப்பா. அவர் மிகவும் உதவியாயிருப்பார்" என்றான் மார்னர்.

மார்னரும் எப்பியும் கற்குழிப் பக்கமாகப் போய்க்கொண்டிருக்கையில் ஆரான் திரும்பி ஊர்ப்பக்கமாகப் போனான். எப்பிக்குத் தோட்டத்தைப்பற்றி எண்ணும்



போது எல்லை இல்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆரானும் ஆவலுடன் உதவியளிப்பான் என்று அவள் முன்பே அறிந்திருந்தாள்.

குடிலில் ஒருசிறு கறுப்பு நாயும், அழகான சிறு பூனையும், அதன் தாயும் இவர்களை வரவேற்றனர். அக்குடிலில் ஏற்பட்டிருந்த மாறுதல்கள் இவைமட்டுமல்ல. வீட்டு நடுப்பகுதியில் இப்போது படுக்கையில்லை. அந்தப் பகுதி சிவப்பு மாளிகையிலிருந்து வந்த புதிய நாற்காலி, மேசை முதலியவற்றால் நிரப்பப்பட்டிருந்தது. அவ்வூரில் எல்லாரும் காட்பிரே நெசவாளியிடம் மிகவும் அன்புடையவனாயிருக்கின்றான் என்பதை அறிந்திருந்தனர். அவ்வாறு அவன் அன்பு காட்டுவது பொருத்தமானதே என்றும் எண்ணினர். மார்னர் தன் பணமெல்லாம் இழந்த பிறகும் தாயில்லாப் பெண்ணை எப்பியை எடுத்து வளர்த்து வந்தால் இரக்கத்திற்குரியவனே என்று கருதினர். அவனும் இப்போது முன்பு போல அதிகமாக நெசவு செய்வதில்லை; முன்பு போல உடல் வலிமை யுடையவனாயும் இல்லை.

மார்னரும் எப்பியும் நண்பகலுணவு முடித்துக்கொண்ட பிறகு, மார்னர் வெளியே காற்றோட்டமாக உட்கார்ந்து கொண்டு புகைபிடித்தான். எப்பி பாத்திரங்களைக் கழுவிவிட்டு வீட்டைப் பெருக்கித் தூய்மை செய்தாள். கடந்த இரண்டாண்டு காலமாக மார்னர் சுருட்டுக் குடித்துக்கொண்டு வந்தான். அது உடம்புக்கு நல்லது என்று பலர் அவனைக் குடிக்கும்படி வற்புறுத்தி வந்தனர். அதை அவன் பெரிதும் விரும்பிச் சுவைக்கவில்லை. ஆயினும் பலரும் உடலுக்கு நல்லது என்று கூறியதனாலேயே அதைத் தொடர்ந்து

குடித்து வந்தான். இதே காரணத்திற்காகவே, எப்பீ இவனுடைய வாழ்க்கையில் பொன்னுக்குப் பதிலாக வந்து மகிழ்ச்சி தரத் தொடங்கியதிலிருந்து பல செயல்களைச் செய்து வந்திருக்கிறான். அப்படிச் செய்யும்போது அவ்வூர் மக்களின் பழக்க வழக்கங்களை ஒட்டியே முழு நல்வாழ்வு வாழ்ந்தான். அவனுடைய பழைய வாழ்க்கை பற்றிய நினைவு மேலெழுந்தது. இதுவரை அவன் பழைய வாழ்க்கையைப் பற்றி மறந்திருந்தது போல இனி இருக்க முடியவில்லை. யாரோ செய்த ஒரு தவறால் தன் வாழ்க்கையின் மிகச் சிறந்த பகுதி பாழாகிவிட்டது என்ற எண்ணம் அவனுள்ளத்தில் தோன்றிக் கொண்டேயிருந்தது. டோலி வின்த்ரோப்பை அவன் நன்றாக அறிந்துகொண்டதால், படிப்படியே அவளிடம் தன் இளமை வாழ்க்கையைப் பற்றி எல்லாம் சொன்னான். அதைப்பற்றி அவன் சொல்லுவதும், டோலி அதைப் புரிந்து கொள்வதும் எளிதான காரியமல்ல. குறிப்பாக அவன்றன் துன்பக் கதையின் முடிவும், நெடுங்காலத்துக்குமுன் தான் கோவில் பணத்தைத் திருடிவிட்டதாகக் கொடுமையாகக் குற்றஞ்சாட்டப்பட்டதும் சொல்லி அவளிடம் தன் குற்றமற்ற இயல்பை விளக்குவதென்பது எளிதாயிருக்கவில்லை. டோலி இதைக் கேட்டுப் பல நாட்கள் இதைப்பற்றிச் சிந்தித்துக் கவலைப்பட்டாள். கடைசியில் உண்மையறிந்து கொண்டவளாய் மார்னரிடம் பல சொற்களில் அவன் கடவுளை நம்பாதிருந்தது பெருங் குற்றமாகும் என்று கூறினாள். "கடவுளை முழுமையாக நம்பிக்கொண்டே இருந்திருந்தால் உன் நண்பர்களைவிட்டுத் தனியாக ஓடிவந்து இப்படித் தனி வாழ்க்கை வாழ்ந்திருக்கும்படி நேர்ந்திருக்காது" என்றாள்.



"ஆ, அது மிகவும் கடினம். கடவுளை நம்புவது கடினமாயிருந்திருக்கும்" என்றான் மார்னர்.

"இருந்திருக்கலாம். அப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் சொல்லுவதைக் காட்டிலும் செய்வது அரிது. நான் அப்படிச் சொன்னது பற்றி எனக்கே வெட்கமாயிருக்கிறது" என்றாள் டோலி.

"இல்லை, இல்லை. நீங்கள் சொல்லுவது சரிதான், டோலி. இந்த உலகத்தில் நல்லவர்களும் இருக்கிறார்கள். துன்பமும், தீமையும் மலிந்திருந்தாலும், ஒருவன் கண்ணுக்குத் தெரிவதைக் காட்டிலும் மிகுதியாக இவ்வுலகில் நல்லவை இருக்கின்றன" என்றான்.

மார்னர் எப்பியிடம் கூட, அவள் வளர்ந்து பெரியவளான பிறகு, தன் பழங்கதையைச் சொல்லியிருக்கிறான். அவள் தனக்குக் கிடைக்கும்வரை ஏன் தனிமையாக வாழ்ந்துவர நேர்ந்தது என்பதைப் பற்றியும் கூறினான். அவள் தன் சொந்த மகள் அல்லள் என்பதை அவனால் மறைத்து வைத்துக்கொண்டிருக்க முடியவில்லை. அவள் அடிக்கடி தன் அம்மாவைப் பற்றிக் கேட்டாள். எப்பிக்கும் தன்னைப்பற்றிய முழுக்கதையும் தெரிந்திருந்தது. அவள் அன்னை அணிந்திருந்த திருமண மோதிரத்தை மார்னர் அவளிடமே கொடுத்திருந்தான். எப்பி மார்னரின் முழு அன்பால் பாராட்டி வளர்க்கப்பட்டாள். அவர்கள் வாழ்ந்த குடிலும் ஊருக்கு வெளியே தனியாய் அமைந்திருந்தது. இயல்பாகவே எப்பி எளிமையுடையவளாய் இருந்தமையாலும், மார்னர் நல்லன்பு காட்டி வளர்த்து வந்தமையாலும், எப்பி தன் அப்பாவைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை.

இந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் அவள் வெளியே வந்தபோது, தன் அன்னை படுத்து உயிர் நீத்த, மஞ்சள் நிறப்பூ மலர்ந்திருக்கும் புதரை முதன்மையாகக் கண்டாள். மார்னரைப் பார்த்து, "அப்பா, அந்த மஞ்சட்பூப் புதரை நாம் நம் தோட்டத்துக்குக் கொண்டு வந்து விடுவோம். அதை ஒரு மூலையில் வைத்து வளர்ப்பேன். அதைச் சுற்றி நான் பூச்செடிகளை வைக்கிறேன்" என்றாள் எப்பி.

"சரி, அம்மா. புதரை அங்கேயே விட்டுவைத்திருப்பதும் நல்லதன்றுதான். மஞ்சட் பூக்கள் பூத்துக் குலுங்கும்போது அவற்றின் அழகுக்கு இணையே இல்லை. ஆனால் அதை வேலி போட்டுப் பாதுகாப்பதற்கு நாம் என்ன செய்யலாம்? ஆடுமாடுகள் வந்து மேய்ந்துவிடாமல் நாம் பாதுகாக்க வேண்டும்" என்றான்.

"ஓ, வேலி கட்டுவதைப்பற்றி நான் சொல்லுகிறேன். அங்கே சிறு கற்கள் நிறையக் குவிந்து கிடக்கின்றன. அவற்றை எடுத்து அடுக்கி ஒரு சுற்றுச் சுவர் வைத்துவிடலாம். சிறு கற்களையெல்லாம் நீங்களும் எடுத்துக்கொண்டு வரலாம். ஆரான் மீதியை எடுத்துக்கொண்டு வருவார். அங்கே பாருங்கள். கற்குழிக்கருகே எவ்வளவு கற்குவியல்கள் இருக்கின்றன!" என்றாள் எப்பி.

ஒரு கல்லை எடுத்துவரக் கற்குழியை நோக்கி ஓடினாள் எப்பி. ஆனால் வியப்புடன் அங்கேயே நின்றுவிட்டாள். "ஓ, அப்பா! இங்கே வந்து பாருங்களேன். நேற்று இந்தக் குழியே நிரம்பியிருந்தது. இன்று எப்படி நீரெல்லாம் வடிந்துவிட்டது என்பதை வந்து பாருங்களேன்" என்றாள்.



மார்னர் அவள் பக்கமாக வந்து, "ஆம். திரு. ஆஸ்காட்டின் நிலங்களை வெட்டி விட்டிருக்கிறார்கள். அதனால் நீரெல்லாம் அங்கே ஓடிவிட்டது. அன்றொரு நாள் அவர் வயல்பக்கம் நான் போனபோது ஒரு வேலையாள் என்னிடம்வந்து நம்முடைய நிலப்பகுதி நீரில்லாத நிலமாக மாறப்போகிறது என்று கூறினான்" என்றான்.

"நெடுங்காலமாக நீர் நிலைபெற்ற இந்தக் குழி நீரில்லாமல் இருப்பது எவ்வளவு வேடிக்கையாயிருக்கும்!" என்று சொல்லிக் கொண்டே சிறிது பெரிய கல்லை எடுத்தாள். எப்பி கொஞ்சதூரம் அதை எடுத்துச் சென்றதும் பிறகு அதைக் கீழே போட்டு விட்டாள்.

"ஆ, நீ மிகவும் பலசாலியாயிருக்கிறாயே! இல்லையா?" என்று கேட்டான் மார்னர். "வா, நாம் அங்கே போய் வயல்கரையில் உட்கார்ந்து கொள்வோம். இனிமேல் நீ கல் தூக்க வேண்டாம். காலில் கல்லைப்போட்டுக் கொண்டுவிடுவாய். உனக்காக வேறொருவர் வேலை செய்ய வேண்டி யேற்படும். எனக்கோ உடம்பில் வலுவில்லை" என்றான்.

இதை மார்னர் மெதுவாகவே சொன்னான். இதில் வேறொரு பொருள் வைத்தே கூறினான். சிறிது நேரம் அவர்கள் அமைதியாக உட்கார்ந்திருந்த பிறகு எப்பி, "அப்பா, நான் திருமணம் செய்து கொள்வதாயிருந்தால், அம்மாவின் மோதிரத்தைக் கொண்டே செய்து கொள்ள வேண்டுமா?" என்று கேட்டாள்.

மார்னர் வியப்புடன், "ஏன், எப்பி, அதைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

"சென்ற வாரம்தான் அப்பா, ஆரான் இதைப் பற்றி என்னிடம் பேசினார்" என்றாள் எப்பி மெதுவாக.

"என்ன சொன்னார்?" என்று கேட்டான் சைலசு மார்னர்.

"இப்போது அவருக்கு வயது இருபத்து நான்கு ஆகிவிட்டதாகவும் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகவும் தெரிவித்தார். அவருக்குத் தோட்ட வேலை மிகுதியாக இருக்கிறதாம். என்னை மணந்துகொள்ள விரும்புகிறார்" என்றாள் எப்பி சிரித்துக்கொண்டே.

"நீயும் அவரை விரும்புகிறாய், இல்லையா?" என்று கேட்டான் சைலசு.

"சில சமயம் அப்படித்தான் நான் விரும்புகிறேன் ஆனால் உங்களை மீண்டும் தனியாக இருக்கவிடப்போவதில்லை என்றும் ஆரான் கூறினார். நாம் எல்லாரும் ஒன்றாகவே வாழவேண்டும் என்று அவர் விரும்புகிறார். நீங்கள் விரும்பினாலல்லது எந்த வேலையும் செய்ய வேண்டியதில்லை. உங்களுக்கு மகன்போலவே அவர் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்வார்" என்றாள் எப்பி.

"ஓ என் என் அருமைக் குழந்தாய், திருமணம் செய்து கொள்வதற்கு நீ மிகவும் சிறியவள். நாம் திருமதி வின்த்ரோப்பை—ஆராவின் அம்மாவை அவர் இதுபற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பதைக் கேட்போம். எது சரியென்று அவருக்குத்



தெரியும். காலம் மாறும். எனக்கும் வயதாகிக் கொண்டே யிருக்கிறது உடம்பில் வலுவும் குறைந்து கொண்டு வருகிறது. உன்னைப் பார்த்துக் கொள்ள இளமையும் வலிமையும் உடைய ஒருவனை உனக்குத் திருமணம் செய்துவைக்க எனக்கும் விருப்பந்தான். நாம் திருமதி வின்த்ரோப்பைக் கேட்கலாம்" என்றான்.

"அதோ அவர்களே இங்கு வந்து கொண்டிருக்கிறார்கள். நாம் போய் அவர்களை எதிர்கொண்டழைப்போம்" என்றாள் எப்பி.

---

# 14. சிவப்பு மாளிகையில் உவப்பில் வாழ்க்கை

இவ்வாறு சைலசும் எப்பியும் நெடும் பலகை மேலமர்ந்து பேசிக்கொண்டிருக்கையில், சிவப்பு மாளிகையில் நால்வர் தங்கள் உண்டியை முடித்துக் கொண்டு சிறிது இருட்டான அறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். திரு. காட்பிரே, திருமதி. காட்பிரே, நான்சியின் அக்காள், அவளுடைய தந்தை ஆகியோரே அந்நால்வரும். ஸ்கொயரின் மனைக்கு விளக்கமாயிருந்த அவர் மனைவி யிறந்த பிறகு இருளடைந்த அவ்வீடு நான்சி வந்த பிறகே மீண்டும் ஒளிவிடத் தொடங்கியது. இப்போது வீட்டில் தூசி யென்பதே இல்லாமல் எல்லாம் துப்புரவாக இருந்தது. வீடு முழுதும் பளபளப்பாக மெழுகப்பட்டது. அறை முழுதும் மலர்மணம் கம்மென்று வீசியது.

நான்சியின் அக்காள்தான் இப்போது தன் அப்பாவின் பண்ணையைப் பார்த்து வந்தாள். தன் தந்தையைக் கண்காணித்து வருவதிலேயே மன நிறைவு கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தாள்.

''நாங்கள் திரும்பிப் போகலாமா, நான்சி?'' என்று கேட்டாள் அக்காள்; ''அப்பா வண்டிக்குள் ளேயே தூங்கிக்கொண்டு வரலாம். நானே குதிரையை ஓட்டிச் செல்லப் போகிறேன். அதனால் வா, புறப் படலாம். குதிரைக்கு வேலைக்காரன் சேணமெல்லாம் போடுவதற்குள் நாம் தோட்டத்தை ஒரு சுற்றுச் சுற்றி விட்டு வந்துவிடலாம்'' என்றாள்.

இரு சகோதரிகளும் பசும்புல் தரைமீது நடந்து செல்லும்போது மூத்தவள், ''உன் கணவர் ஒரு பால்



பண்ணையைப் புதிதாகத் தொடங்குவதைப் பற்றி மிகவும் மகிழ்கிறேன். இதற்கு முன்பு நீ இதை ஏற் படுத்தாமல் விட்டதுதான் வருந்தத்தக்கது. அது உன் மனமகிழ்ச்சிக்கும் பொழுதுபோக்குக்கும் ஏற்றதாக இருக்கும். பொழுது போகவில்லையே என்று வருந்திக் கொண்டிருப்பதை மாற்றுவதற்குப் பால் பண்ணையைத் தவிர வேறு சிறந்த வழியில்லை. நீ வீட்டைத் துப்புரவு செய்துவிட்டு என்ன செய்வது என்று நினைப்பாய். ஆனால் பால்பண்ணையில் ஏதாவது ஒரு வேலை இருந்துகொண்டேயிருக்கும். அன்புத் தங்காய், பால் பண்ணை இருந்தால் உனக்குப் பொழுது போவதைப் பற்றிய கவலையே இராது'' என்றாள்.

''ஆ, அக்கா, ஆனால் என் கணவருக்கு அதனால் அதிகப் பயனில்லை. அவருக்குப் பண்ணை ஒன்றும் பெரிதில்லை. அவருக்காக நான் சிலசமயம் கவலைப் படுவதுண்டு. குழந்தை ஒன்றுமில்லையே என்ற ஒரு குறைதான் அவரை வாட்டிக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் தமக்கென ஒரு மகன் இருக்க வேண்டுமென்றே எல்லாரும் விரும்புவர். அவரும் நீண்ட காலமாகக் குழந்தைப்பேற்றை எதிர்நோக்கி யிருக்கிறார். மற்றவர்களாக இருந்தால் குழந்தை யில்லாமைக்காக வேறுவிதமாக நடந்துகொண்டிருப்பர். ஆனால் இவரோ கணவரினத்துட் சிறந்தவராய்த் திகழ்கிறார்'' என்றாள் நான்சி.

'' ஓ எனக்குத் தெரியும். குடும்பத்துப் பெண்கள் எல்லாம் இப்படித்தான். ஒரு நிமிடம் தங்கள் கண வரைத் திட்டிக்கொண்டிருப்பர். அடுத்த கணமே புகழத் தொடங்கிவிடுவர். சரி, அப்பா நமக்காகக்

காத்துக்கொண்டிருப்பார், நாம் இப்போது திரும்பிப் போகவேண்டும்" என்றாள் அக்காள்.

வண்டி வாசலின் முன்பு வந்து நின்றது. திரு. லாம்மீட்டர் வாயிற்படியில் நின்றுகொண்டிருந்தார். "இந்த வாரத்திற்குள் நான்சியை எங்கள் வீட்டுக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யுங்கள் அத்தான்" என்று காட்பிரேவிடம் சொல்லிக்கொண்டே பிரிசில்லா வண்டியை ஓட்டினாள்.

பிறகு காட்பிரே நான்சியிடம், "கற்குழிவரையிலும் போய்த் தோட்டங்களைப் பார்த்துவிட்டு வருகிறேன். இன்னும் ஒரு மணி நேரத்தில் தேநீர் குடிப்பதற்கு வந்துவிடுகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டான்.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை மாலையிலும் நடந்து போய்த் தன் பண்ணைப் பகுதிகளைப் பார்வையிட்டு வருவது காட்பிரேவின் பழக்கமாயிருந்தது. நான்சி அவனுடன் போவதில்லை. அக்காலத்தில் பெண்கள் தங்கள் வீட்டு எல்லையையும், தோட்டங்களையும் தாண்டி அப்பால் செல்வதில்லை. அதனால் அவள் பைபிளை எடுத்து வைத்துக்கொண்டு படிக்க உட்கார்ந்தாள். ஆனால் அவள் மனம் எங்கெங்கோ அலை பாய்ந்து கொண்டிருந்தது. கண்குளிரக் கண்டு மகிழ்ந்தின்புற ஒரு குழந்தையுமில்லாதிருந்த அவளுக்குப் பொழுது போக்குவதற்கு வேறொன்றுமில்லாதிருந்தது. இனிமேல் குழந்தை பிறக்காது என்ற வருத்தம் காட்பிரேவை விட்டும் இன்னும் நீங்காதிருந்ததுதான் நான்சிக்குத் தன் வாழ்க்கையிலேயே பெரிய துன்பமாயிருந்தது. பதினான்காண்டுகளுக்கு முன்பு அவர்களுக்கு



ஒரு குழந்தை பிறந்தது. ஆனால் அது இறந்து விட்டது. அக்குழந்தையின் துணிகளையெல்லாம் நான்சி எடுத்துப் பாதுகாப்பாக அட்டாலியில் போட்டிருந்தாள். ஆனால் தான் கொடுத்துவைக்காது போனதைப் பற்றிய நினைவு ஏற்படுமே என்றுதான் அத்துணிகளை அவள் எடுத்துப் பார்ப்பதில்லை.

தன் சொந்தத் துன்ப உணர்ச்சிகளை அவள் அடக்கிக் கொண்டாள். கணவன் வருத்தத்தையும் மாற்றுவதற்குப் பலவாறு முயன்றாள். இதுபோல வாழ்க்கைப் பயனை எய்தாமல்போவது ஒரு மனிதனுக்கு மிகவும் துன்பமான செய்தியே என்று அவள் தனக்குள் எண்ணிக் கொண்டாள். எதிர்காலத்தில் அவருக்கு உறுதுணையாயிருக்கத்தக்க வழிவகை ஏதாவது கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. வீட்டில் அவருக்குப் பொழுதுபோவதே கடினமாயிருந்தது.

அவளுடைய மனத்தில் அடிக்கடி இன்னோர் எண்ணமும் இருந்து வந்தது. "கணவரின் தேவைக்கு உதவுவதற்காக நம்மாலானவரை செய்து வந்திருக்கிறோமா? ஆறு ஆண்டுகட்கு முன்பும், நான்காண்டுகட்கு முன்பும் ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்ளலாம் என்று விரும்பினார். அந்தக் குழந்தையும் எப்பியாகவே இருக்க வேண்டுமென்று விரும்பினார். ஆனால் எனக்கு அது பிடிக்கவில்லை" என்பதே அது. நாம் சொந்தமாகப் பெற்றுக்கொள்ள விரும்பாத ஒன்றைப் பிறரிடமிருந்து வாங்கி இன்புறுதல் நல்லதன்று என்பதே நான்சியின் கொள்கையாக இருந்தது. அதனால்தான் காட்பிரே ஒரு குழந்தையைத தத்து எடுத்துக்கொள்ள விரும்பியபோதெல்லாம் அவள்

மிக்க மனவருத்தத்துடனும் துன்பத்துடனும் அதைத் தடுத்து வந்தாள்.

காட்பிரே எப்பியைத் தத்தெடுத்துக்கொள்ளலாம் என்று விரும்பியபோது சைலசு மார்னர் அதற்கு இணங்குவாரு என்பதை ஒருகணமும் சிந்தித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. மார்னர் மிகவும் துன்பமும் அக்கறையும் கொண்டு வளர்த்து வரும் அப்பெண்ணை நல்ல இடமாக இருந்தால் செல்வச் செழிப்புடன் வளர்வதற்கு ஒருப்படாமல் போகான் என்றும், தனக்குக் கிடைக்கும் வெகுமதியால் பெரிதும் மன நிறைவு கொள்வான் என்றும் எண்ணினன். செல்வம் மிக்கவர்கள் ஏழ்மை மிக்கவர்க்கு உதவிபுரிய வேண்டுவதுதான் நேர்மையானது என்று நம்பினன் காட்பிரே. ஆனல் அதற்குத் தக்க காரணங்கள் அவனுக்கு மட்டும் தான் தெரியும். செல்வமிருப்பதால் அவன் நினைத்ததெல்லாம் கிடைக்கும் என்று எண்ணினன். தான் கொடுக்கும் வெகுமதியை விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கும் மற்ற தனக்குத் தெரிந்த தொழிலாளர்களுக்கும் சைலசு மார்னருக்கும் எவ்வித வேறுபாடு மிருக்காது என்றுதான் அவன் நினைத்துக் கொண்டிருந்தான். காட்பிரே எப்போதும் அன்புள்ளம் கொண்டிருந்தவனய் இருந்தான். நான்சியும் அவனுடைய அன்புள்ளத்தைப் புகழ்ந்திருக்கிருள்.

நான்சி அடிக்கடி தன் மனத்துக்குள் நினைத்துக் கொள்வாள்: "அவருடைய வேண்டுகோளை மறுப்பது எனக்கே வருத்தமாகத்தான் இருக்கிறது. என்ன செய்வது? தத்து எடுத்துக்கொள்வதே எனக்குப் பிடிக்கவில்லை. ஆனல் காட்பிரே எவ்வளவு அமைதியாக இருக்கிருர்? பெரும்பாலோர் தங்கள் விருப்பங்களுக்கு இணங்காது போனல் மிகவும் கோபம் கொள்வர். வேறு எவராயிருந்தாலும் என்னைத் திருமணம் செய்து கொண்டதற்கு மிகவும் வருந்துவர். ஆனல் காட்பிரே இதைப்பற்றி என்மனம் வருந்துமாறு ஒரு வார்த்தைகூடக் கூறியதில்லை. ஆனல் மனத்தில் உள்ளதை எப்போதும் மறைத்துக் கொண்டிருக்க முடியாது. இருந்தாலும் நான் அதைப்பற்றிக் குறை கூறப் போவதில்லை. ஒருவேளை குழந்தைப்பேறு வாய்க்கும் மனைவி யாராவது அவருக்குக் கிடைத்திருந்தால் என்னைப்போலப் பிறவகைகளில் அவர் மனத்தை மகிழ்விக்க அவளால் முடிந்திருக்காது."



இவ்வாறு எண்ணுவது அவளுக்கு ஓர் ஆறுதலாயிருந்தது. ஒவ்வொரு வகையிலும் காட்பிரேவின் மனத்துக்குகந்த நல்மனைவியாயிருக்க முயன்றுவந்திருக்கிருள். அதனல் காட்பிரேவும் அவளை மனதாரக் காதலித்தான். தத்து எடுத்துக்கொள்வது நல்லதன்று என்று அவள் எண்ணுவதாலேயே தடைசொல்லுகிருள் என்பது அவனுக்கு நன்கு தெரியும். எப்பியைப்பற்றிய உண்மையை நான்சியிடம் சொல்வது எப்போதும் முடியாத தொன்ருகவே அவனுக்குப்பட்டது. இவ்வளவு காலமாக மறைத்துவைக்கப்பட்டிருந்த தன் இளமைக்காலத்து முதல்திருமணத்தைப்பற்றிய செய்தியைக் கேள்வியுற்ருல் அவள் பெரிய அதிர்ச்சியடைவாள்; அதிலிருந்து அவள் மீள்வது மிகவும் கடினம். பிறகு எப்பியைப் பார்ப்பதே அவளுக்குப் பிடிக்காது போய்விடும் என்று எண்ணினன். அவளைத் திருமணம் செய்து கொள்ளும்போது இவ்வுண்மையை மறைத்தே வைக்க வேண்டுமென எண்ணினன்; அதைக் கடைசி

வரை மறைத்தே வந்திருக்கிறான். ஆனால் அவனுடைய மனச்சாட்சி எப்பியைப்பற்றிய நினைவால் எப்போதும் துன்புற்றுக் கொண்டேயிருந்தது. அவன் வீட்டில் குழந்தை தவழாமலிருந்தது தனக்குற்ற ஒரு தண்டனையே என்று கருதினான்.

எப்பியைப்பற்றிய பேச்சு இருவரிடையேயும் நடந்து இந்த ஞாயிற்றுக்கிழமையோடு சரியாக நான்கு ஆண்டுகளாகிவிட்டன. இதைப்பற்றிக் காட்பிரே அடியோடு மறந்துபோய் விட்டதாகவே நான்சி கருதிக் கொண்டிருந்தாள். "வயது ஆக ஆக அவருக்கு எப்பியைப்பற்றிய எண்ணம் அதிகமாகுமா? குறையுமா? அதிகமாகும் என்றே எண்ணுகிறேன். வயதானவர்கள் குழந்தையில்லாத குறையைப் பெரிதும் உணர்வார்கள்—அக்காள் இல்லாவிடில் அப்பாவுக்கு எப்படியிருக்கும்? நான் இறந்துவிட்டால் காட்பிரே மிகவும் தனிமையாக இருப்பார். ஆனால் அதைப்பற்றி நான் இப்போது கவலைப்பட வேண்டியதில்லை. இப்போது என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டும்" என்று தனக்குள் எண்ணினாள்.

வேலைக்காரி தேநீர் கொண்டுவந்து முன்னால் நிற்பது கண்டு நான்சிக்கு வியப்பே தோன்றியது. வழக்கத்திற்கு மிக முன்னதாகவே அவள் தேநீரைக் கொண்டுவந்திருந்தாள். அதற்கான காரணங்களுமிருந்தன.

"உங்கள் முதலாளி நிலத்துக்கு வந்தாரா? ஜேன்?" என்று கேட்டாள் நான்சி.

"இல்லையே, அம்மா. அவர் வரவில்லை. நீங்கள் கவனித்தீர்களோ இல்லையோ, அம்மா, சன்னலுக்கு



வெளியே சனங்கள் எல்லாம் வேகமாக ஒரே பக்கமாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஏதோ நடந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஒருவருக்கும் ஆபத்து நேர்ந்திருக்காது என்றே நினைக்கிறேன்" என்றாள்.

"ஓ, அப்படியா செய்தி! எனக்கொன்றும் தெரியாதே! ஒரு வேளை திரு. ஸ்நெல் அவர்களின் காளை முன்பொரு நாள் ஓடியது போலக் கட்டவிழ்த்துக் கொண்டு ஓடியிருக்கும்" என்று கூறினாள். காட்பிரே விரைவில் வீடுவந்து விட வேண்டும் என்று மனத்தில் வேண்டிக் கொண்டாள். சன்னலுக்குப் பக்கமாகச் சென்று மிகவும் கவலையுடன் வெளியே எட்டிப்பார்த்தாள். வெளியே மக்கள் நடமாட்டமும் ஓட்டமும் இப்போது குறைந்திருந்தன. எப்படியும் காட்பிரே வீடுவந்து விடுவார் என்றே எண்ணினாள். ஆனால் அமைதிசான்ற மாதாகோவிலையும், அதைச் சுற்றியுள்ள தோட்டங்களின் மனங்கவர் வண்ணமரங்களையும் பார்த்தவாறே அங்கேயே நின்றுகொண்டிருந்தாள். காட்பிரே வந்துவிட வேண்டும் என்ற எண்ணமே அவள் உள்ளத்தில் மீண்டும் மீண்டும் தோன்றிக் கொண்டிருந்தது.

# 15. காணாது ஒழிந்த செல்வம் கைவரல்

அறையின் மறுபக்கத்துக் கதவை யாரோ திறந்தனர். அது தன் கணவனாகத்தான் இருக்கவேண்டுமென்று நான்சி எண்ணினாள். சன்னலிடத்திலிருந்து கணவனை உள்ளே வரவேற்பதற்காக மகிழ்ச்சியுடன் சென்றாள். ஏனெனில் இதுவரை அவள் மனம் பயத்தால் நிரம்பியிருந்தது. "நீங்கள் வந்துவிட்டீர்கள் என்று மிகவும் மகிழ்கிறேன். நான் மிகவும் பயப்பட்டுக் கொண்டிருந்தேன்...." என்றாள்.

காட்பிரே தொப்பியை எடுத்துக் கீழே வைக்கும்போது அவன் கைகள் நடுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். அதனால் தன்பேச்சை அப்படியே நிறுத்தினாள். காட்பிரேவின் முகம் வெளிறிப்போய்ப் புதியதொரு தோற்றத்தை அடைந்திருந்தது. எதையோ பார்ப்பதுபோல அவன் நான்சியைப் பார்த்தான். அவன் கையை நான்சி பற்றினாள். அவனிடம் மீண்டும் பேச அவளுக்குத் துணிவு ஏற்படவில்லை. அவள் தன் கையைப் பிடித்ததைக் கவனிக்காதவனாய்க் காட்பிரே நாற்காலியில் போய்ச் சாய்ந்தான். அப்போது ஜேன் கதவருகே வந்து நின்று கொண்டிருந்தாள். "அவளைப் போகச்சொல், சொல்கிறாயா?" என்று நான்சியிடம் கேட்டான் காட்பிரே.

அவள் போனதும் கதவு நன்றாகத் தாழிடப்பட்டது. தெளிவாகப் பேசத் தொடங்குவதற்காகத் தொண்டையைக் கனைத்துக்கொண்டான் காட்பிரே.

"உட்கார் நான்சி, உட்கார்—" என்று தன் எதிரில் இருந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டினான்.



"எனக்கு முன்னால் வேறுயாராவது வந்து உன்னிடம் சொல்லிவிடுவார்களோ என்று எண்ணி எவ்வளவு வேகமாக வரமுடியுமோ அவ்வளவு வேகமாக வந்தேன். நான் ஒரு பெரிய அதிர்ச்சியைக் கண்டேன். ஆனால் உனக்கு அதைவிடப் பெரிய அதிர்ச்சி கொடுக்கும் என்றுதான் பயப்படுகிறேன்'' என்றான் காட்பிரே.

" அப்பாவுக்கோ — அக்காளுக்கோ ஒன்றும் ஆபத்தில்லையே! '' என்று வெளிறிய முகத்துடன் கையை மடியில் வைத்து இறுக்கிக் கொண்டே கேட்டாள்.

" இல்லை. அது உயிரோடிருப்பவர்களைப் பற்றிய செய்தியன்று'' என்றான் காட்பிரே. தன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கவனமாகச் சொல்ல வேண்டுமென அவன் முயன்றது முடியவில்லை. "டன்சே - என் தம்பி டன்சே-பதினாறு வருடத்திற்கு முன்பு காணாமற் போய்விடவில்லையா? அவனை இப்போது கண்டு பிடித்துவிட்டோம். அவனுடைய உடலும் அவன் எலும்புகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன " என்றான்.

காட்பிரேவின் பார்வையைப் பார்த்துப் பெருந் திகில் கொண்டிருந்த நான்சிக்கு இச் சொற்கள் விடுதலை யுணர்ச்சியைத் தந்தன. அவன் இன்னும் சொல்லப் போவதைக் கேட்பதற்காக நன்றாக அமர்ந்தாள். அவன் தொடர்ந்தான்: " கற்குழியில் தேங்கியிருந்த நீர் அற்றுப்போனதும், டன்சே அங்கே கிடப்பது தெரிந்தது. பதினாறு ஆண்டுகளாக அவன் அங்கேதான் கிடக்கிறான் என்று நினைக்கிறேன். இரண்டு பெரிய கற்களுக்கு நடுவே கிடந்தான்.

அவனுடைய கடிகாரமும் முத்திரைகளும் கிடந்தன. என் பெயர் பொறித்த பொன்பிடியுள்ள வேட்டைச் சவுக்கும் அங்கே கிடந்தது. குதிரையை விற்பதற்காகப் போனபோது அவன் எனக்குத் தெரியாமலேயே அதை எடுத்துக் கொண்டு போயிருக்கிறான்" என்றான்.

காட்பிரே சொல்லி நிறுத்தினான். அதற்குப் பிறகு என்ன நேர்ந்தது என்பது பற்றிச் சொல்லுவது அவ்வளவு எளிதன்று.

"அவன் அப்படியே நீரில் மூழ்கிப் போயிருப்பான் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டாள் நான்சி. இத்தனை ஆண்டுகட்கு முன்பு அவனுக்கு என்ன நேர்ந்திருக்குமோ என்று மிகவும் பயந்தவளாய்க் காணப்பட்டாள்.

"இல்லை. அவன் தவறி விழுந்துவிட்டான்" என்று மிகவும் தாழ்ந்த குரலில் கூறினான். அதில் ஏதோ ஒரு பெரிய பொருள் மறைந்திருப்பதை உணர்ந்தவன் போலக் காணப்பட்டான். பிறகு உடனே "சைலசு மார்னரின் பணத்தைத் திருடியவனும் டன்சே தான்" என்றான். நான்சியின் முகத்திலும் கழுத்திலும் குருதி குவிந்து குபீரென்று சிவந்தன. இச்செய்தி அவளுக்கு வியப்பாயும் வெட்கமாயும் இருந்தது. தன் தூரத்து உறவினர் ஒருவர்க்கு அப்படிப்பட்ட அவமானம் ஏற்பட்டிருந்தாலும் அவளால் பொறுக்க முடியாது. தன்னைக் காட்டிலும் காட்பிரே அவ் அவமானத்தை மிகுதியாக உணர்வான் என்று எண்ணினாள்.

"அந்தக் குழியில் பணமிருந்தது. எல்லாம் மார்னரின் பணம்தான். எல்லாவற்றையும் சேர்த்து



எடுத்துவிட்டார்கள். அவன் எலும்புகளையும் வெளியே எடுத்துக் கொண்டிருந்தார்கள். இதை உன்னிடம் சொல்வதற்காக நான் திரும்பி வந்துவிட்டேன். உனக்கும் இது தெரிய வேண்டும் என்பதற்காக" என்று சொல்லி நிறுத்தினான்.

இரண்டு மணித்துளிகள் நிலத்தைப் பார்த்துக் கொண்டே அமைதியாக நின்றான். இந்த அவமானத்தைக் குறித்து அவனுக்கு ஏதாவது ஓரிரு ஆறுதல் மொழிகள் கூறலாமென்றுதான் வாயெடுத்தாள். ஆனால் காட்பிரே இன்னும் ஏதோ அவளிடம் சொல்ல நினைப்பவன் போலத் தோன்றிய தால் பேசாது நின்றுவிட்டான். உடனே தன் தலையை நிமிர்த்தி அவள் முகத்தைப் பார்த்தான். அதையே உற்றுப் பார்த்துவிட்டுப் பேசினான். "எப்போதாவது உண்மை எல்லாம் வெளியாகித்தான் தீரும், நான்சி. கடவுள் விரும்பினால் நம்முடைய மறைப்புகள் எல்லாம் வெளியாகிவிடுகின்றன. நான் சொல்லா விட்டால் வேறு யாராவது நானிறந்த பிறகு உன்னிடம் சொல்லத்தான் போகிறார்கள். அதை நான் விரும்பவில்லை. நானே உன்னிடம் சொல்லி விடுகிறேன். உன்னிடம் சொல்லாது நீண்டகாலமாக மறைத்து வைத்திருந்த ஒன்றை இப்போது சொல்லி விடுகிறேன்" என்றான்.

நான்சியின் பயம் மீண்டும் அவனைக் கவ்வியது. இருவருடைய கண்களும் பயத்துடன் ஒன்றையொன்று பார்த்துக்கொண்டன.

"நான்சி, உன்னை நான் திருமணம் செய்து கொண்டபோது ஒன்றை உன்னிடமிருந்து மறைத்து

விட்டேன். உன்னிடம் அதை முன்பே சொல்லியிருக்கவேண்டும். மார்னர் பனிக்கட்டியில் செத்துக் கிடந்ததாகக் கண்ட பெண்-எப்பியின் அம்மா-வேறு யாருமில்லை; என் முதல் மனைவிதான். எப்பி என் மகள்தான்.''

அவன் பேச்சை நிறுத்திவிட்டுத் தான் ஒப்புக் கொண்ட உண்மையின் பயன் என்னவாகுமென்பதை அறிய விரும்பினான். ஆனால் முன்புபோலவே நான்சி அமைதியாக உட்கார்ந்திருந்தாள். அவளுடைய கண்கள் மட்டும் பார்வையைக் கீழே செலுத்தின. அவள் முகம் வெளிறி விட்டது. தன் மடியில் கையை வைத்துக்கொண்டு அவள் சிலைபோல் அசைவற்று உட்கார்ந்து விட்டாள்.

சிறிது நேரங்கழித்து அவன் தழுதழுத்த குரலில், ''என்னைப்பற்றித் தவறாக எண்ணிவிடாதே'' என்றான்.

அப்போதும் அவள் மௌனமாகவே இருந்தாள். ''நான் குழந்தையை ஒப்புக்கொள்ளாமல் அப்படியே விட்டிருக்கக்கூடாது. உன்னிடமிருந்து குழந்தையைத் தனியே பிரித்து வைத்திருக்கக் கூடாது. ஆனால் நான்சி, உன்னை விட்டுவிட்டு வாழ எனக்கு விருப்பமில்லாதிருந்தது. வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்ட என் தவற்றுக்காக நான் தக்கவாறு துன்பங்களை எய்திவிட்டேன்'' என்றான்.

இப்போது அவள் எழுந்து தன் தாய் வீட்டுக்குப் போவதாகச் சொல்லிப் புறப்படுவாள் என்றே அவன் எதிர்பார்த்தான். அவனை முழுமையாக நம்பிக்கொண்டிருந்த தன்னை இப்படி ஏமாற்றி விட்டிருக்கும் அவன்மேல் அவளுக்கு இரக்கம் எப்படி



ஏற்படும்? ஆனால் கடைசியில் அவள் தலை நிமிர்ந்தாள்; பேசத் தொடங்கினாள். அவள் குரலில் வெறுப்புணர்ச்சியில்லை; ஆழ்ந்த துயரமே கலந்திருந்தது.

''ஆறு ஆண்டுகட்கு முன்பு இதைச் சொல்லியிருந்தால் நம்மால் முடிந்தவரை எப்பிக்கு நம் கடமையைச் செய்திருக்கலாம். உங்களுடைய குழந்தை என்று தெரிந்திருந்தால் நான் மறுத்திருப்பேன் என்று நினைக்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

அப்போதுதான் காட்பிரே தான் செய்த குற்றங்களின் கசப்பெல்லையை அடைந்தான். இவ்வளவு காலமாகியும் தன் மனைவியின் உள்ளத்தை அறிந்து கொள்ளவில்லையே என்று வருந்தினான். மீண்டும் அவள் தழுதழுக்கும் குரலில், ''முதலிலிருந்தே நாம் அவளை எடுத்து வளர்த்திருந்தால் என்னை அவள் அம்மாவென்றே கருதி அன்புகாட்டி யிருப்பாள். நீங்களும் என்னுடன் மகிழ்ச்சியாக இருந்திருப்பீர்கள். நம் குழந்தை பிறந்தவுடனே இறந்துபோன வருத்தத்தையும் நான் ஒருவாறு பொறுத்துக் கொண்டு இருந்திருப்பேன். நான் எண்ணியிருந்தது போலவே நம் வாழ்க்கை இன்பமிகுதியுள்ளதாய் இருந்திருக்கும்'' என்றாள்.

அவள் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் வீழ்ந்து கொண்டிருந்தன; அவள் பேசுவதை நிறுத்தினாள்.

''நான் சொல்லியிருந்தால் என்னைத் திருமணம் செய்து கொண்டிருக்க மாட்டாய். இப்போது நீ சொல்கிறாய் திருமணம் செய்து கொண்டிருப்பேன் என்று. ஆனால் அப்போது செய்து கொள்ள உனக்கு மனம் வந்திருக்காது என்றான்'' காட்பிரே.

"அப்போது என்ன செய்திருப்பேன் என்று எனக்குத் தெரியாது. ஆனால் வேறு யாரையும் நான் திருமணம் செய்து கொண்டிருக்க மாட்டேன். நான் யாருக்கும் துரோகம் செய்ய விரும்பவில்லை. இவ்வுலகில் யாருக்கும் துரோகம் நினைக்கவில்லை" என்றாள்.

"நீ நினைத்ததைவிட நான் மிகக் கொடியவன் தான். என்னை மன்னித்து விடுவாயா?" என்று நடுங்கும் குரலில் கேட்டான் காட்பிரே.

"நீங்கள் எனக்குச் செய்த குற்றம் சிறியதுதான். பதினைந்து ஆண்டுகளாக என்னிடம் அன்புகாட்டி வாழ்ந்து அதை நிறைவுசெய்து விட்டீர்கள். ஆனால் இன்னொரு குற்றமும் செய்திருக்கிறீர்கள். அதை நீங்கள் இனிமேல் எப்போதாயினும் நிறைவு செய்ய முடியுமா என்பது ஐயம்தான்" என்றாள்.

"ஆனால் நாம் எப்பியை இப்போது அழைத்துக் கொண்டுவிடலாமே" என்றான் காட்பிரே. "இப்போது உலகம் என்னபேசினாலும் எனக்குக் கவலையில்லை. நான் உள்ளதை ஒளிக்காமல் அப்படியே சொல்லி விடுகிறேன்" என்றான்.

"இப்போது அவள் பெரியவளாக வளர்ந்து விட்டாள். நம்மிடம் இனி வருவது கடினம்தான். ஆனால் அவளை அழைத்து உங்களை இன்னாரெனத் தெரியப்படுத்திக் கொண்டு அவளுக்கு வேண்டியதைச் செய்வது உங்கள் கடமை. நானும் என்னால் முடிந்த வரை அவள் அன்பைப் பெற முயல்வேன்" என்றாள். காட்பிரே, "அப்படியானால் இன்றிரவே சைலசுமார்னர் குடிலுக்கு இருவரும் சேர்ந்து போவோம்" என்றான்.

# 16. அப்பாவின் அழைப்பும் எப்பியின் மறுப்பும்

இரவு எட்டு அல்லது எட்டரைமணி இருக்கும். எப்பியும் சைலசும் தனியே குடிலில் உட்கார்ந்து கொண்டிருந்தனர். அன்றைப் பிற்பகலில் நேர்ந்த பெரிய அதிர்ச்சிக்குப் பிறகு அவன் தனிமையைப் பெரிதும் விரும்பினான். மற்ற எல்லோரும் போன பிறகும் மார்னருடன் திருமதி வின்த்ரோப்பும், ஆரானும் தங்கியிருந்தனர். அவர்களையும் போய்வரும் படி மார்னர் கேட்டுக் கொண்டான்.

நாற்காலியில் அமர்ந்து எப்பியைப் பார்த்துக் கொண்டிருந்த மார்னரின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவ மாடிக்கொண்டிருந்தது. அவர்களுக்கருகே இருந்த மேசை மீது ஆசைக்குரிய பழைய கருவூலப் பொன் இருந்தது. முற்காலத்தில்-அவன் அவற்றை அடுக்கிப் பார்ப்பதே இன்பமெனக் கருதிய காலத்தில் வைத் திருந்தது போலவே இப்போதும் அடுக்கி வைத் திருந்தான். தான் எப்படி ஒவ்வொரு நாளும் அதை எண்ணிப் பார்த்து இன்புற்று வந்தான் என்பதையும், அது களவு போனதிலிருந்து எப்பி கிடைக்கும்வரை எவ்வளவு ஆற்றொணாத் துயர முற்றான் என்பதையும் பலமுறை எப்பிக்குக் கூறியிருந்தான். இப்போது எப்பியைப் பார்த்து, "முதலில் உன்னை என் குடிலில் பார்த்தபோது உன்னையே பொன்னாக மாற்றிக் கொள்ளலாம் என்று நினைத்தேன். ஆனால் அவ் வெண்ணம் வெகுநாளைக்கு நீடிக்கவில்லை. உன் னுடைய கனிவுப்பார்வையையும், கொஞ்சும் மழலைச்

சொல்லேயும், ஊற்றின்பம்தரும் உன் கைகளால் தீண்டப்படுவதையுமே பெரிதும் விரும்பினேன். மீண்டும் அந்தப் பொன்னெல்லாம் கொடுத்து அதற்குப் பதிலாக உன்னே யாரேனும் கேட்டிருந்தால்கூட, அப்பொன்னே வேண்டாமென்று சொல்லியிருப்பேன். நீ அப்போது மிகவும் சிறு குழந்தையாய் இருந்தாய். உன் கிழத் தந்தை உன்னிடம் எவ்வளவு அன்பு பாராட்டினுர் என்று உனக்கு அப்போது தெரிந்திருக்காது'' என்ருன்.

''ஆனல் நான் இப்போது நன்ருக உணர்கிறேன் அப்பா. நீங்கள் இல்லாவிடில் இவ்வுலகில் என்னிடம் அன்பு பாராட்ட வேறு யார் இருக்கிருர்கள்?'' என்ருள் எப்பி.

''ஆ குழந்தாய், நான்தான் நற்பேறு பெற்றவன். என்னைக் காப்பாற்றி மனத்தை மாற்றுவதற்காக நீ வந்திராவிடில், துன்ப மிகுதியால் நான் செத்தே போயிருப்பேன். தக்க நேரத்தில் அந்தப் பணம் என்னிடமிருந்து களவாடப்பட்டது. இப்போது நமக்குப் பணம் தேவையாய் இருக்கும் நேரத்தில் பணம் திரும்பக் கிடைத்துவிட்டது. எல்லாம் வியப்பாய் இருக்கிறது. வாழ்க்கையே பெரும் வியப்பாயிருக்கிறது'' என்ருன் மார்னர்.

சில மணித்துளிகள் சைலசு பணத்தைப் பார்த்துக் கொண்டே அமைதியாக நின்று கொண்டிருந்தான். பிறகு, ''எப்பி! இப்போது எனக்குப் பணம் ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை. உன்னைப் பிரியும் போது தான் ஒருவேளை பணத்தைப் பற்றிய எண்ணமே எனக்கு ஏற்படும்'' என்ருன்.



அப்போது கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. சைலசுக்குப் பதில் சொல்லாமலேயே எப்பி எழுந்துபோக வேண்டியிருந்தது. அவள் கதவைத் திறக்க எழுந்து போனபோது அழகு பொலியும் செல்வியாகக் காணப்பட்டாள். அங்கு வந்திருப்பவர்கள் திரு. காட்பிரேவும் அவர் மனைவியும் தாம் என்றறிந்த போது அவர்களுக்கு நல்வரவு கூறிக் கதவை அகலத் திறந்து அவர்களை நல்வரவேற்ருள்.

''இந்த அகால நேரத்தில் வந்து உங்களுக்குத் தொல்லை கொடுக்கிருேம்'' என்று சொல்லிக்கொண்டே நான்சி எப்பியின் கையைப் பிடித்து அவள் முகத்தை ஆர்வம் நிரம்பிய ஆவலுடனும் வியப்புடனும் நோக்கினுள். நான்சியோ முகம் வெளிறியவளாய்க் கவலைமீக்கூர்ந்திருந்தாள். வந்தவர் இருவருக்கும் நாற்காலிகளை எடுத்துப் போட்டுவிட்டு எப்பி அவர்களுக்கு எதிரே மார்னரின் அருகில் போய் நின்றுகொண்டாள். காட்பிரே தொண்டையை ஒருமுறை கனைத்துக் கொண்டு தெளிவுறப் பேசத் தொடங்கினுன். ''மார்னர், காணுது போன உன் பணம் இப்போது திரும்பக் கிடைத்து விட்டது பற்றிப் பெரிதும் மகிழ்கிறேன். உனக்கு இக்கொடுமையைச் செய்தது என் குடும்பத்தைச் சார்ந்த ஒருவனே என்று எண்ணும்போது எனக்கு அளவிலா மன வருத்தமே ஏற்படுகிறது. அதற்காக எல்லா வகையாலும் அதை ஈடுகட்ட வேண்டும் என விரும்புகிறேன். நான் உங்களுக்கு என்ன செய்தாலும் அதெல்லாம் அந்தத் திருட்டுக்காகவும் வேறு பிறவற்றிற்காகவும் நான் திருப்பிக் கொடுக்கும் கடன் போலவே கருதப்பட வேண்டும்'' என்ருன்.

காட்பிரே பேச்சை நிறுத்தினன். அவனும் நான்சியும் எப்பியின் தந்தை யாரென்பதை மிகவும் கவனத்துடனேயே வெளிப்படுத்த வேண்டுமென்று முன்பே பேசி வைத்துக்கொண்டிருந்தனர். முடிந்தால் எப்பியே பிறகு தானுக உண்மையை அறிந்து கொள்ளும்படி இப்போது பேசாது விட்டு விடுவோம் என்றும் எண்ணியிருந்தனர். மார்னரின் மனம் நெகிழ்ந்தது. ''நான்தான் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். பணம் திருடப்பட்டது உங்கள் குற்றமன்று'' என்ருன்.

''நீ அப்படி அதை எண்ணிக்கொள்கிருய் மார்னர்! ஆனல் நான் நினைப்பதுதான் சரி என்பதை நீயும் ஒப்புக்கொள்வாய் என்றே நம்புகிறேன். மிகவும் நுண்ணியதாய்ச் செய்யக்கூடிய நெசவு வேலைக்கு உன் முதுமை ஏற்றதன்று. உனக்கு வயதாகிக் கொண்டேயிருக்கிறது. இனிமேல் நெசவை விட்டு விட்டு ஓய்வெடுத்துக் கொள்வதே நல்லது. அப்படி நீ கிழ வயதை எய்தாவிடினும் உன்னிடம் நரையும் திரையும் மிகுதியாக ஏற்பட்டு விட்டன, இல்லையா?'' என்று கேட்டான் காட்பிரே.

''எனக்குத் தெரிந்தவரை எனக்கு ஐம்பத்தைந்து வயதுதான் ஆகிறது'' என்ருன் சைலசு.

''சரி இன்னும் நீ முப்பது ஆண்டுகளாவது உயிரோடிருக்கலாம். அதுவரை மேசையின் மீதிருக்கும் பணம் போதாது. நீ ஒருவனுக இருந்தால்கூட அந்தப் பணம் போதியதா யிராது. நீயோ இன்னேர் உயிரையும் பல ஆண்டுகள் காப்பாற்ற வேண்டியிருக்கிறது'' என்ருன் காட்பிரே.



''பற்ருது போய்விடும் என்ற அச்சம் எனக்கில்லை, ஐயா. நானும் எப்பியும் எப்படியாவது சரி செய்து கொள்வோம். நாள் முழுதும் உழைத்து வருபவர்கள்கூட இதனினும் மிகுதியாகச் சேர்த்து வைத்திருக்க முடியாது. உங்களுக்கு அது சிறிதாகத் தோன்றலாம். எங்களுக்கோ அது மிகப்போதியதாய் இருக்கும். எங்களுக்கு இன்னும் மிகுதியாக ஒன்றும் வேண்டியதில்லை'' என்ருன் மார்னர்.

'' இந்தத் தோட்டமே நமக்குப் போதும் அப்பா'' என்று கூறினள் எப்பி. வெட்கத்தால் அவள் முகம் சிவந்து காணப்பட்டது.

இதைக்கேட்ட நான்சி, ''நீ தோட்டத்தைப் பெரிதும் விரும்புகிருயல்லவா? அதில் நாமிருவரும் ஒன்றுதான். நானும் தோட்டத்தைப் பாதுகாப்பதற்காக மிகுதியான நேரம் செலவழிக்கிறேன்'' என்ருள்.

''ஆம் சிவப்பு மாளிகையில் மிகப்பெரிய தோட்டம் இருக்கிறது'' என்று தொடங்கினன் காட்பிரே. தான் சொல்ல நினைப்பதை எப்படிச் சொல்வது என்று தயங்கினன். பின்னர், ''மார்னர், பதிருண்டுகளாக எப்பிக்கு நல்லதே செய்திருக்கிருய். அவளுக்கு இன்னும் நிறையச் செல்வம் கிடைத்தால் உனக்கும் பெரு மகிழ்ச்சிதானே உண்டாகும்; இல்லையா?'' என்றுகேட்டான். ''எப்பி உடல்வளத்துடன்தான் இருக்கிருள். ஆனல் கடின உழைப்புச் செய்வதற்கு உரியவள் அல்லள். உழைப்பாளிப் பெற்ருேர்களின் வலிமை வாய்ந்த மகளாக அவள் தோன்றவில்லை. அவளுக்கு நிறையச் சொத்து வைத்துவிட்டு இறந்து போகக்கூடியவருடைய பாதுகாப்பில் அவளை விட்டு

விட்டு, அவளைச் செல்வச் சீமாட்டியாக வாழ்வதைப் பார்க்க நீ விரும்பாமலிருக்க மாட்டாய் என நம்பு கிறேன்'' என்ருன்.

சைலசின் மனம் வேதனையுற்றது; அலேப்புற்றது. எப்பிக்குக் காட்பிரே பேசுவது என்னவென்றே தெரிய வில்லை. காட்பிரே ஏன் கற்பனையாக நடக்காததைப் பற்றி யெல்லாம் பேசவேண்டும்? என்று தனக்குள் எண்ணி வியப்புற்ருள்.

மார்னருக்கும் தன் வேதனையுணர்ச்சியை எப்படி வெளிப்படுத்துவதென்று தெரியவில்லை. அதனுல் "நீங்கள் சொல்வது எனக்கொன்றும் புரியவில்லை" என்று சொல்லி வைத்தான்.

''நான் சொல்ல வந்தது இதுதான், மார்னர். நான்சியும் நானும் குழந்தையில்லாமல் நெடுங்காலமாய் இருக்கிருேம். எங்கள் பெரிய நல்ல வீட்டையும், எங்களுக்குரிய பிற எல்லாச் சொத்துக்களையும் வாரிசாக அடைதற்குரியவர் யாருமில்லை. எங்களுக்கு மகளாக யாரையாவது எடுத்துக் கொள்ளவேண்டும் என்று விரும்புகிருேம். ஆதலால் எப்பியை நாங்கள் எடுத்துக் கொள்ள விரும்புகிருேம். அவளை எங்கள் சொந்த மகளாகவே எல்லாவகையிலும் கண்ணும் கருத்து மாய்ப் போற்றிக் காத்து வருவோம். இவ்வளவு துன்பப்பட்டு அவளை வளர்த்து வந்த உனக்கு, இந்த முதுமைக் காலத்தில் அவள் செல்வச் செழிப்புடன் விளங்குவதைக் கண்டு ஆனந்தமே உண்டாகும் என நம்புகிறேன். உனக்கும் நல்ல பொருட்கொடை கொடுக்கப் போகிருேம். எப்பி எப்போதும் உன்னிடம் அன்பு காட்டுபவளாயும் உன்னை அடிக்கடி பார்ப்பதற்கு



வருவாள். உனக்கு எல்லாவித நலங்களும் வசதிகளும் கிடைக்குமாறு நாங்கள் எல்லாம் செய்கிருேம்'' என்ருன் காட்பிரே.

காட்பிரே இவற்றையெல்லாம் வெளிப்படுத்து வதற்குச் சிறிது துன்பமுற்றே சொற்களை வர வழைத்துப்பேச வேண்டியிருந்தது. அவன் சொற்களை வெளிப்படுத்தியதைக் காட்டிலும் அவன் உள்ளத்தில் அன்பு நிறைந்திருந்தது. காட்பிரே பேசிக்கொண்டிருக் கும் போதெல்லாம் எப்பி தன் கைகளால் மார்னரின் கழுத்தைப் பற்றிக் கொஞ்சிக் கொண்டிருப்பவளைப் போலிருந்தாள். அப்போது அவன் உடல் மிகக் கடுமையாய் நடுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். காட்பிரே பேசி முடித்ததும் மார்னர் சிறிது நேரம் ஒன்றும் பேசாமலிருந்தான். அவன் மனம் துன்ப எண்ணங்களால் அலைக்கழிக்கப்பட்டது.

பின் "எப்பி! நீயும் சொல். உன்னைத் தடை செய்ய வில்லை. வந்த இருவருக்கும் நன்றி சொல்" என்று மார்னர் கூறினுன். எப்பியும் அவனைத் தேற்றுவது போலப் பேசத்தொடங்கினுள்.

எப்பி மார்னரின் கழுத்திலிருந்து தன் கைகளை எடுத்துவிட்டு முன்னே சிறிது அடியெடுத்து வைத்தாள். தன் அப்பா ஐயுறவும், மனமறுக்கமும் கொண்டிருப் பதை அறிந்திருந்தாள். ஆனுல் அவள் வெளிப்படை யாகச் சொல்வதற்குத் தயங்கவில்லை. அவள் சொன்னுள்: "ஐயா உங்களுக்கு நன்றி. அம்மா, உங்களுக்கும் நன்றி. ஆனுல் நான் என் அப்பாவை விட்டுப் பிரிய முடியாது. நானும் செல்வச் செல்வியாக இருக்க விரும்பவில்லை. உங்களுக்குப் பெருநன்றி.

பழகி விட்டவர்களைப் பிரிந்து வருதல் என்றால் முடியாது'' என்றாள்.

இப்படிப் பேசும்போது எப்பியின் வாய் குழறியது. அவள் திரும்பிப்போய் மார்னரைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். சைலசும் முதுகில் அவளை அணைத்துக் கொடுத்தான். எதிர்பாராது நேர்ந்த இந்நிகழ்ச்சி காட்பிரேவுக்கு எரிச்சலைத் தந்தது. தன் பழைய குற்றங்களை நினைத்து அடையும் கவலையைப் பற்றியும் எதிர் காலத்தில் தான் சரி என்று நினைப்பதை எப்படிச் செய்வது என்பதைப் பற்றியும் எண்ணி வந்தான். இப்போது அவள் புரிந்து கொள்ள முடியாத பிறருடைய உணர்ச்சிகள் அவளைத் தடை செய்தன.

''ஆனால் எப்பி, உன்னை எடுத்துக் கொள்ள எனக்கு உரிமை யுண்டு; மார்னர், எவரும் மறுக்க முடியாத உரிமையுண்டு. எப்பியை என் மகளாக எடுத்துக் காப்பாற்றும் கடமையும் எனக்குண்டு. அவள் நான் பெற்ற மகளே. அவள் தாய்தான் என் மனைவி. மற்ற எவரைக் காட்டினாலும் அவள் எனக்கே முதலுரிமையுடையவள் '' என்றான் காட்பிரே.

சைலசுக்குச் சினம் பெருகி வந்தது. எரிச்சலுடன் "அப்படியானால் ஏன் ஐயா இதைப் பதினாறு ஆண்டுகளுக்கு முன்பே - நான் அவளிடம் அன்பு காட்டும் முன்பே - செய்திருக்கக்கூடாது? இப்போது மட்டும் வந்து ஏன் உரிமை கொண்டாடுகிறீர்கள்? இப்போது அவளைப் பிரிவது என்றால் என் உயிர் பிரிவது போலத்தான். நீ அவளை வேண்டாமென்று விட்டு விட்டதால்தான் கடவுள் அவளை எனக்குக் கொடுத்தார். என் குழந்தை என்றே கடவுளும் மதிக்கிறார். அவளைப் பற்றி உனக்கு எந்த உரிமையும் கிடையாது. வீட்டிலிருந்த செல்வத்தைத் தூக்கியெறிந்துவிட்டால் அதை வழியில் போகிறவர்கள் எடுத்துக் கொள்ளாமல் இருப்பார்களா ? " என்று பேசினான்.



''அது எனக்குத் தெரியும் மார்னர். நான் செய்தது தப்புத்தான். அதற்காக மிகவும் வருந்தத்தான் செய்கிறேன்'' என்றான் காட்பிரே. சைலசு சொன்னது சரிதான் என்பது அவன் மனத்திலும் நன்குபட்டது

" நீங்கள் வருந்துவதைப் பற்றிக் கேட்க மகிழ்ச்சிதான். ஆனால் பதினாறாண்டுகளாக நிகழ்ந்து விட்ட அன்பை அது மாற்றிவிட முடியாது. 'அப்பா' என்று பேசத் தெரிந்த நாள் முதல் அவள் என்னையே தான் அப்பா என்று கூப்பிடுகிறாள்'' என்றான்

" ஆனால் நல்லது எதுவென எண்ணிப்பார், மார்னர். அவள் உன் குடிலுக்கருகேதான இருப்பாள். உன்னை வந்து அடிக்கடி பார்த்துவிட்டுப் போவாள். உன்னையே அப்பா வென்று அழைக்கட்டும். அவளுடைய நன்மைக்காக அவளை விட்டுப் பிரியும் சிறு துன்பத்தைப் பொறுத்துக் கொள்வாய் என்று தான் எண்ணுகிறேன். அவள் உன்னிடமே யிருந்தால் பிறகு வேறு ஏதாவது கூலிவேலை செய்பவனையே திருமணம் செய்து கொள்ள நேரும். பிறகு அவளைச் செல்வமிக்குடையவளாக்க என்னால் முடியாது. என் சொந்த மகளை நானே திரும்பப்பெற வேண்டும் என்ற கடமை என்னை உந்தித் தள்ளிக் கொண்டிருக்கிறது. என் கடமையை நான் செய்ய விரும்புகிறேன்" என்றான் காட்பிரே.

எப்பி இதைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது தன் வயது மூத்த அன்பு நிரம்பிய அப்பாவையும் தன் அம்மாவின் மோதிரத்தை யணிந்துகொண்டு இப்போது வந்திருக்கும் அப்பாவையும் மாறி மாறி மனத்தில் நினைத்துப் பார்த்தாள். சைலசு சொன்ன தெல்லாம் சரியென்றே அவள் மனத்திற்குப்பட்டது புதிய தந்தை தனக்களிக்க விருக்கும் புதுவாழ்க்கையை வெறுத்தாள்; அப் புதிய தந்தையையும் வெறுத்தாள்.

ஒருபக்கத்தில் மார்னருக்கே காட்பிரே சொன்ன தெல்லாம் உண்மையானால் தான் எப்பியின் எதிர்கால வாழ்வுக்குக் குறுக்கே நிற்கிறோமோ என்ற எண்ணம் ஏற்பட்டது. அதனால் "நான் இனிமேல் ஒன்றுஞ் சொல்லவில்லை. நீங்கள் விரும்பியபடியே நடக்கட்டும்; எப்பியிடமே கேட்டுக் கொள்ளுங்கள்; நான் தடையேதும் சொல்லவில்லை" என்றான்.

உண்மையான தந்தையே முன்வந்து விட்ட பிறகு எப்பியை இனிமேல் மார்னர் வைத்துக்கொள்ளுவதற்கு உரிமையில்லை என்று தன் கணவனின் கருத்தை நான்சியும் உடன் ஒப்பினாள். மார்னருக்கு அவளை விடுவது மிகக் கடினம் என்று அவள் உணர்ந்தாள். எனினும் கண்டெடுத்த தந்தையினும் பெற்றெடுத்த தந்தைக்கே எப்பி முழு உரிமை யுரியவளாவாள் என்றும் கருதினாள். கடைசியாக மார்னர் பேசியதைக் கண்டு காட்பிரேவும் அவளும் தங்கள் விருப்பம் நிறைவேறியதென்றே மனமகிழ்ந்தனர்.

எப்பிக்குத் தன் தந்தையை அறிந்து அன்பு காட்டும் பருவம் தாண்டிவிட்டது என்பதை உணர்ந்த காட்பிரே எப்பியைச் சிறிது வெட்கத்துடன் பார்த்து,



"எப்பி, கண்மணி, உன் அன்பையும், நன்றியையும் இவ்வளவு காலமாக உனக்குத் தந்தையாய் இருந்தவருக்குக் காட்டவேண்டும் என்பதுதான் எப்போதும் எங்களுடைய விருப்பம். அவரை எல்லா வழியாலும் நலமாக வைத்திருக்க உனக்கு நாங்கள் உதவுவோம். ஆனால் இத்தனை ஆண்டுகளாக நான் ஒரு தந்தை இருக்கவேண்டியதைப் போல இல்லாது போயினும், எங்களிடம் நீ விரைவில் அன்புகாட்டுவாய் என்று நம்புகிறோம். என் வாழ்நாள் முடியும் வரை உனக்கு என்னால் செய்ய முடிவதெல்லாம் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். எங்களுக்கு நீ தான் ஒரே குழந்தை. என் மனைவியும் உனக்கு மிகச் சிறந்த அன்னையாக விளங்குவாள். நீ அறிவுதெரிந்த கால முதல் அன்னையைப் பற்றி அறியாத குறையை அவள் போக்கி விடுவாள்" என்றான்.

"கண்ணே, நீயே என் செல்வம்" என்றாள் நான்சி. கணவனை நோக்கி, "நம் மகள் கிடைத்து விட்டால் பிறகு நமக்கு வேறொன்றும் வேண்டியதில்லை" என்றாள்.

இந்த முறை எப்பி முன்வரவில்லை. சைலசின் கையை இறுகப் பற்றிக்கொண்டு முன்னிலும் கடுமையாகப் பேசினாள். "உங்கள் அன்புக்கு நன்றி அம்மா. நன்றி ஐயா. அதெல்லாம் என் விருப்பத்துக்கு மேற்பட்ட மிகப்பெரிய ஆசைகள். இனிமேல் எனக்கு அப்படிப்பட்ட ஆசை எதுவும் வேண்டியதில்லை. என் அப்பாவிடமிருந்து பிரிந்து அவரைத் தனியே விட்டு விட்டு நான் கட்டாயப்படுத்தப்பட்டு வெளியே போக விரும்பவில்லை. முதலிலிருந்து அவரேதான் என்னிடம்

அன்புகாட்டி வளர்த்து வந்தார். அவர் உயிரோடிருக்கும் வரை நான் அவரிடமேதான் இருப்பேன். யாரும் எங்களிருவருக்குமிடையே வரவேண்டியதில்லை'' என்ருள்.

"ஆனல் சிந்தித்துப் பார், எப்பி!'' என்று தாழ்ந்த குரலில் பேசத் தொடங்கினன் மார்னர். "உனக்கு மிகச் சிறந்த வாய்ப்புகள் வருவதை இப்போது உதறித் தள்ளிவிட்டுப் பிறகு ஏழ்மையாளரிடம் எளிய உடைகளையும் பொருள்களையும் பெற்று உழல்வதற்கு வருத்தப்படப் போகிருய். நன்ருகச் சிந்தித்துப் பார்'' என்ருன்.

"அப்பா, நான் எப்போதும் ஒரு காரியம் செய்துவிட்டுப் பிறகு வருத்தப்படமாட்டேன். எனக்குப் பழக்கமில்லாத செல்வச் சீருடைய பொருள்களைப்பற்றி எண்ணிப்பார்க்கவோ அவற்றைப் பெறவோ எனக்குத் தேவையில்லை'' என்ருள் எப்பி.

நான்சி காட்பிரேவை நோக்கிஞள். அவன் நிலத்தை நோக்கிக் கொண்டிருந்தான். தான் ஏதாவது பேச வேண்டுமென்று விரும்பிஞள். "குழந்தாய், நீ சொல்வதெல்லாம் இயல்புதான். ஆனல் நீ உன் சொந்த அப்பாவுக்கும் செய்ய வேண்டிய கடமை உள்ளது. இருபக்கங்களிலும் ஏதாவது ஒன்று கைவிடப்பட வேண்டியதாகத்தான் இருக்கும். உன் தந்தை உனக்குத் தன் வீட்டைத் திறந்து காட்டி வரவேற்கும்போது நீ புறமுதுகிட்டுப் போய்விடமாட்டாய் என்றுதான் நான் நினைக்கிறேன்'' என்ருள்.

அழாக்குறையாக எப்பி, "எனக்கு ஓர் அப்பாவைத் தவிர வேறு ஒருவர் இருக்கிருர் என்று என்னல்



கருதிப்பார்க்கக்கூட முடியாது. நான் செல்வச் செல்வியாக வளர்க்கப்படவில்லை. நானும் அப்படி வளர்வதைப் பற்றி எண்ணிப் பார்க்கக்கூட விரும்பவில்லை. உழைக்கும் மக்களையும் அவர்களுடைய வீடுகளையும், அவர்களின் நடைமுறைகளையுமே நான் விரும்புகிறேன். ஒரு தொழிலாளியைத் திருமணம் செய்து கொள்வதற்கு நான் உறுதி கொடுத்துவிட்டேன். அவரும் என் அப்பாவுடனேயே இருந்து என்னைக் காப்பாற்றி வருவார்'' என்ருள்.

காட்பிரே நான்சியைப் பார்த்தான். "சரி நாம் போகலாம்'' என்ருன்.

நான்சியும் எழுந்து கொண்டே, "இனிமேல் இதைப் பற்றி எப்போதும் பேசமாட்டோம், எப்பி. மார்னர், நீங்கள் நலமாக வாழுங்கள். உங்களைப் பிறகு நாங்கள் வந்துபார்க்கிருேம். இப்போது மிகவும் நேரமாகி விட்டது'' என்ருள்.

காட்பிரே ஒன்றும் பேசமுடியாது எழுந்து நேரே கதவருகே சென்று விட்டான். நான்சியும் அவனை அழைத்துக்கொண்டு வெளியேறிஞள்.

# 17. ஏமாற்றம்

நான்சியும் காட்பிரேவும் வீட்டை நோக்கி ஒன்றும் பேசிக் கொள்ளாது நடந்து சென்றனர். வானத்து மீன்கள் அவர்களைப் பார்த்து எள்ளி நகையாடின. வீட்டுக்குள் சென்றதும் காட்பிரே பொத்தென்று நாற்காலி மேல் விழுந்தான். நான்சி அவனுடைய கோட்டைக் கழற்றிவிட்டு அவனருகே நின்றாள். அவனருகிலேயே நின்று கொண்டிருக்க விரும்பினாளாயினும் அவனிடம் பேசுவதற்கும் பயமாய் இருந்தது. கடைசியில் அவன் தன் தலையைத் திருப்பினான். தன் கையை நீட்டி அவள் கையைப் பற்றி, 'சரி அவ்வளவுதான்' என்றான்.

அவளும் ''ஆம், அவளை ஒரு மகளாக அடையும் ஆசையை நாம் விட்டுவிட வேண்டியதுதான். அவளுடைய விருப்பத்திற்கு எதிராக நம்மிடம் அவள் வர வேண்டுமென்று வற்புறுத்துவது நல்லதன்று. அவள் வளர்க்கப்பட்ட முறையையோ, அதன் விளைவையோ நாம் மாற்ற முடியாது'' என்றாள்.

''இல்லை; காலம் கடந்து விட்டது. நான்சி, நான் ஒரு காலத்தில் குழந்தையில்லாமல் இருந்தால் நல்லது என்று நினைத்திருந்தேன். இப்போது நான் வேண்டுமென விரும்பியும் குழந்தையில்லாமல் இருக்கவேண்டியிருக்கிறது'' என்றான் காட்பிரே.

சிறிது நேரங்கழித்து நான்சி, ''அப்படியானால் எப்பி உங்கள் குழந்தைதான் என்பதை நீங்கள் எல்லோருக்கும் சொல்லிவிட மாட்டீர்களோ ?'' என்று கேட்டாள்.



''இல்லை. அதனால் யாருக்கு என்ன நன்மை ? அவள் போகிற வழியிலேயே அவளுக்கு ஏதேனும் செய்ய முடியுமா என்று பார்க்கவேண்டும். யாரை அவள் திருமணம் செய்துகொள்ள நினைக்கிறாள் என்பதை அறிய வேண்டும்'' என்றான் காட்பிரே.

''எப்பியைப்பற்றி என் அக்காளும் தந்தையும் அறிந்து கொள்ளாமலிருப்பதற்காக நான் நன்றி சொல்ல வேண்டும். ஆனால் அவர்கள் டன்சேவைப் பற்றி அறிந்து கொள்வதைத் தடுக்கமுடியாது'' என்றாள் நான்சி.

''அவள் மணம் புரிந்து கொள்ள விரும்புவது ஆரானாகத்தான் இருக்கவேண்டும். மாதாகோவிலிலிருந்து அடிக்கடி அவன் மார்னருடனும் எப்பியுடனும் போவதைப் பார்த்திருக்கிறேன்'' என்றான் காட்பிரே.

''சரி. அவன் நல்லவன்தான், கடின உழைப்புச் செய்பவன்தான்'' என்று நான்சி தன் மனத்தை அமைதிப்படுத்த முயன்று கொண்டே கூறினாள். காட்பிரே சிறிது நேரம் சிந்தனையிலிருந்தான். பிறகு, ''எப்பி பார்ப்பதற்கு மிகவும் அழகாயும் கவர்ச்சியாயும் இல்லை ?" என்று நான்சியைப் பார்த்துக் கேட்டான்.

''ஆமாம். அவளுடைய சுருண்டமயிரும், ஒளிவிடும் கண்களும் பார்ப்பவருக்குக் கவர்ச்சியை ஊட்டுகின்றன. நான் இதற்கு முன்பு அவற்றை நன்கு கவனிக்காது போய்விட்டேன்!'' என்றாள் நான்சி.

''அவளுடைய தந்தை நான்தான் என்பதையறிந்த பிறகு என்மேல் வெறுப்புக் கொண்டாள் என்று நினைக்கிறேன். அதற்குப் பிறகு அவளுடைய

போக்கில் ஒரு மாற்றம் ஏற்பட்டதைக் கவனித்தேன்'', என்றான் கணவன்.

கணவன் சொன்னதை ஒப்புக்கொள்ள விரும்பாத நான்சி, ''மார்னரைத் தன் அப்பாவாக நினைக்காமல் அவளால் இருக்கமுடியாது'' என்றாள்.

''நான் அவளுக்கும் அவளுடைய அம்மாவுக்கும் கொடுமை புரிந்து விட்டதாக எண்ணுகிறாள். நான்சி, என்மகளே என்னை வெறுக்க நேர்ந்தது. நான் செய்த குற்றத்திற்குச் சரியான தண்டனைதான். தந்தையின் கடமையிலிருந்து தவறிய நான் முதல் திருமணத்தால் பெற்ற பயனை அனுபவிக்காமல் போவது முறைதான். எல்லாவற்றையும் விட, உன்னை நான் வாழ்க்கைத் துணையாகப் பெற்றேன், நான்சி. அதுவே எனக்குப் போதும்'' என்றான் காட்பிரே.

''நீங்கள் எப்போதும் என்னிடம் நல்ல அன்பே காட்டிவருகிறீர்கள். உங்களுக்குள்ளவற்றைக் கொண்டு நீங்கள் மனமகிழ்ச்சியடைய வேண்டும் என்பதுதான் என் இப்போதைய ஒரே விருப்பம்'' என்றாள் நான்சி. ''சரி அதைச் சரிப்படுத்துவது இனிமேல் முடியாது. யார் என்ன சொன்னாலும் அவளைச் சரிப்படுத்த முடியாது'' என்றாள்.

---

## 18. பழையவூர் சென்று வறிதே மீளுதல்

அடுத்த நாள் காலை மார்னரும் எப்பியும் காலைச் சிற்றுண்டி உண்ணும்போது அவன் அவளைப் பார்த்து, ''எப்பி, கடந்த இரண்டாண்டுகளாக உனக்குச் செய்ய வேண்டுமென்று நினைத்தது ஒன்றுண்டு. இப்போது பணம் நம் கைக்கே திரும்பி வந்து விட்டது. இப்போது அதைச் செய்யலாம். நான் நேற்று இரவு முழுவதும் சிந்தித்துக் கொண்டிருந்தேன். நாளைக்கு நாம் வீட்டை விட்டே புறப்பட்டு விடுவோம். வீட்டையும் மற்றவற்றையும் திருமதி. வின்த்ரோப்பையே பார்த்துக் கொள்ளும்படி விட்டு விட்டுச் செல்வோம்'' என்றான்.

''நாம் எங்கே போகப் போகிறோம், அப்பா?'' என்று வியப்புமீக் கூர்ந்தவளாய்க் கேட்டாள் எப்பி.

''என் பழைய ஊருக்கு - நான் பிறந்த ஊருக்கு - 'லாண்டர்ன் யார்டு'க்குப் போகலாம் - அங்குள்ள மத குருவைப் பார்க்க விரும்புகிறேன். நான் திருட்டுக்குற்றம் செய்தவனல்லன் என்பதை உணர்த்தும் சான்று ஏதாவது அவர்களுக்கு இதற்குள் கிடைத்திருக்கும். மேலும் இவ்வூர்ப் பக்கத்து வழிபாட்டு முறைகளின் மாறுபாடுகளைப் பற்றியும் சொல்ல வேண்டும். அவையெல்லாம் அவருக்குத் தெரிந்திரா என்று நினைக்கிறேன்'' என்றார் மார்னர்.

எப்பிக்கு மகிழ்ச்சி மிகுதியாயிற்று. ஏனெனில் அவள் பல புதிய பொருள்களைப் பற்றிப் பார்க்கலாம்; அங்கெல்லாம் போய் வந்த பிறகு ஆரானிடம் சொல்ல

லாம். பல வழிகளில் ஆரான் அவளைக் காட்டிலும் அறிவு மிக்கவனாய் இருந்தான். இந்த வகையிலாவது அவனுக்குத் தெரியாததைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று எண்ணினாள். திருமதி வின்த்ரோப்புக்கு அவர்கள் தனியாகப் புறப்பட்டுப் போவதுபற்றிச் சிறிது அச்சம் ஏற்பட்டிருந்தது. எனினும், மார்னர் தன் ஊரை மீண்டும் பார்த்து விட்டு வருவது குறித்தும், தன்மேல் ஏற்பட்டிருந்த வீண்பழியைப் போக்கி விடுவது குறித்தும் மகிழ்ச்சி யடைந்தாள்.

“மார்னர், இனிமேல் உன் வாழ்க்கை முழுதையும் மகிழ்ச்சியாகக் கழிக்கலாம்” என்றாள் வின்த்ரோப். எனவே நான்கு நாட்கள் கழித்துச் சைலசும், எப்பியும் சிறந்த உடை உடுத்திக்கொண்டு பெரிய நகரத்தின் வழியாகப் புறப்பட்டுப் போய்க்கொண்டிருந்தனர். தன்பழைய ஊரிலிருக்குமிடத்தை அடைந்தனர்.

கடந்த முப்பதாண்டுகளில் தன் சிற்றூரில் ஏற்பட்ட வியத்தகு மாறுதல்களைக் கண்டான் சைலசு. தன் ஊர் தான் அது என்பதை உறுதிசெய்து கொள்வதற்காகப் பலமுறை வழியிலுள்ளவரை அவ்வூரின் பெயரைக் கேட்டான். பலபேரைக் கேட்டறிந்த பிறகுதான் தன் பழைய இருப்பிடத்தைக் கண்டுபிடித்தான். அதனருகில் அப்போது ஒரு சிறைச்சாலை இருந்தது.

“ஆ, அங்கே சிறைச்சாலை ஒன்றிருக்கிறதல்லவா? அதற்கருகில்தான் நம் பழைய இடம்” என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னான் மார்னர். “இப்போது எனக்குப் பயமில்லை; சிறைச் சாலையிலிருந்து மூன்றாவது திருப்பத்தில் நாம் போகவேண்டும்” என்றான்.



“ஓ; எவ்வளவு முடைநாற்றம் வீசும் இடம்!” என்றாள் எப்பி. “நீ இப்போது இவ்விடத்தில் வாழவில்லை என்பதை நினைத்து மகிழ்கிறேன், அப்பா. லாண்டர்ன் யார்டு என்பது இந்தத் தெருவைப் போலத்தான் இருக்குமா?” என்று கேட்டாள் எப்பி.

“என் அன்புக்குழந்தாய், இதைப்போன்ற பெரிய தெருவன்று அது. இந்தத் தெருவை நானே ஒரு போதும் விரும்பியதில்லை. ஆனால் லாண்டர்ன் யார்டு தான் எனக்குப் பிடித்த இடம். இங்கே இருந்த கடைகள் எல்லாம் மாறி விட்டன என்று நினைக்கிறேன். எனக்கு ஒன்றும் புரியவில்லை. இதுதான் மூன்றாவது திருப்பம்” என்றான்.

“ஆ, அப்பா. என்னால் இங்கு மூச்சுவிடவே முடியவில்லையே! இவ்வளவு நெருக்கமாக மக்கள் வாழ முடியும் என்று நான் மனத்தால் கூட நினைத்துப் பார்த்ததில்லை. நான் திரும்பிப்போனதும் நம் கற்குழி எவ்வளவு அழகாகத் தோன்றும்.”

“இப்போது எல்லாம் எனக்கே வியப்பாய் இருக்கிறது எப்பி. முடைநாற்றம் எங்கும் வீசத்தான் செய்கிறது. முன்பு இப்படி வீசிக் கொண்டிருந்ததாக எனக்கு நினைவில்லை” என்றான் மார்னர்.

லாண்டர்ன் யார்டுக்கு அவர்களை அழைத்துச் செல்லும் வழியை அவர்கள் அடைந்தார்கள்.

“அம்மாடியோ, ஏன் இங்குள்ளவர்கள் எல்லாம் கோவிலிலிருந்து வருவதுபோல இந்த நேரத்தில் இப்படி ஓடிவருகிறார்கள், இது ஞாயிற்றுக் கிழமை கூட இல்லையே?” என்று கேட்டாள் எப்பி. மார்னர் சிறிது நேரம் சிலைபோல நின்றான். அவன் எய்திய

வியப்பு எப்பிக்குப் பயமூட்டுவதாகவே இருந்தது. அவர்கள் ஒரு பெரிய தொழிற்சாலையின் வாயில் முன்பு நின்றிருந்தனர். அச்சாலையிலிருந்து ஆண்களும் பெண் களும் திரள் திரளாக வீட்டுக்கு உணவுக்காகத் திரும்பிக் கொண்டிருந்தனர். எப்பி சைலசின் கையைப்பற்றிக் கொண்டு, "அப்பா. இது என்ன?" என்று கேட்டாள்.

சைலசு சிறிது நேரம் ஒன்றும் பதில்கூற முடியாமல் நின்றிருந்தான். கடைசியில் அதிர்ச்சி யுற்றவனுக், "எல்லாம் போயிற்று, எப்பி. லாண்டன் யார்டு போய்விட்டது. அது இங்கே தான் இருந்திருக்க வேண்டும். எதிர்ப்புறமுள்ள வீடு எனக்கு நன்கு தெரிகிறது. ஆனல் இங்கே அவர்கள் புதிதாக இந்தத் தொழிற்சாலையைக் கட்டியிருக்கிறார்கள்" என்றான்.

"அந்தக் கடைக்குப் போய் உட்காரலாம் வா அப்பா. அங்கே நம்மை உட்கார விடுவார்கள்" என்றாள் எப்பி. அப்பாவுக்கு அதிர்ச்சி வலிப்பு ஏற்பட்டு விடுமோ என்று பயந்து கொண்டே இருந்தாள் எப்பி. "ஒருவேளை அங்கிருப்பவர்களே பழையதைப் பற்றி யெல்லாம் நமக்குச் சொல்லக்கூடும்" என்றாள்.

ஆனல் கடைக்காரனே, அல்லது அங்கிருந்த மற்றவர்களோ யாரும் சைலசு கேட்டதற்கு அவனது பழைய வீட்டைப்பற்றியோ, மதகுருவைப்பற்றியோ ஒன்றும் சொல்ல முடியவில்லை. அந்தக் கடைக்காரன் பத்தாண்டுகளுக்கு முன்பு அங்கு வரும்போதே அத் தொழிற்சாலை கட்டப்பட்டிருந்தது என்றான். மார்னர் மனமுடைந்தான்; எப்பியுடன் வீடு திரும்பினன்.

"பழைய வீடு எல்லாம் போய்விட்டது" என்று திருமதி வின்த்ரோப்பிடம் கூறினன். "பழைய வீடு



எனக்கில்லை, இந்த வீட்டைத்தவிர இப்போது எனக்கு வேறு வீடு இல்லை. திருட்டைப் பற்றிய உண்மையை அவர்கள் அறிந்து கொண்டார்களா என்பதைப்பற்றி இனிமேல் அறிந்து கொள்ளவும் முடியாது" என்று கூறினன்.

'இல்லை, மார்னர். இனி நீ அறிந்து கொள்ளவே முடியாது. நாம் புரிந்து கொள்ளாத பல செய்திகளைப் பற்றி நாம் அறிந்து கொள்ளக் கூடாது என்பது தான் கடவுளின் விருப்பம் போலிருக்கிறது. நாம் புரிந்து கொள்ளமுடியாது போயினும் நன்மை, தீமை என்ற பிரிவு எப்போதும் இருக்கத்தான் செய்கிறது" என்றாள்.

"ஆமாம், அது மெய்தான். எப்பி என்னிடம் வந்ததிலிருந்தும், என்னைப்போலவே நான் அவளையும் நேசிப்பதற்கு அறிந்து கொண்டதிலிருந்தும் கடவுளை நம்ப என்னல் முடிந்தது. இப்போது அவள் என்னை விட்டுப் பிரியவே மாட்டேன் என்கிறாள். நான் இறக் கும் வரை கடவுளை நம்புவேன் என்றுதான் நினைக் கிறேன்" என்றான் மார்னர்.

# 19. முடிவு

திருமணத்திற்கு மிகச் சிறந்த காலம் என்று ஆண்டில் ஒரு பகுதியை ராவிலோ மக்கள் கருதியிருந்தனர். அந்த ஆண்டின் இளவேனிற் காலமே. அக்காலத்தில் மற்ற மாதங்களில் போல வேலையிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். அக்காலம்தான் அழகிய கண்கவர் திருமண ஆடைகள் அணிவதற்கேற்றது. அப்போது அணிவதுதான் எடுப்பாகவும் இருக்கும்.

எப்பியின் திருமணம் ஏற்பாடாகி விட்டது. அன்றுகாலை வழக்கத்தைக் காட்டிலும் நன்றாகக் கதிரவன் ஒளிர்ந்தான். எப்பியின் நல்லகாலமாக மழை ஒன்றும் அன்று பெய்யவில்லை. சிறந்த திருமண உடை என்பது தூயவெள்ளையான பருத்தியாடையே என்று எப்பி நினைத்து வந்தாள். அதனால் திருமதி காட்பிரே அவளுக்குத் திருமண உடையைப் பரிசாகக் கொடுக்க நினைத்து என்ன வேண்டுமென்று அவளைக் கேட்டபோது எப்பியும் எளிதாகத் தன் திருமண உடை எதுவென்று உடனே தீர்மானிக்க முடிந்தது. மாதா கோவிலைக் கடந்து அவள் ஊருக்குள் செல்வதைத் தூரத்திலிருந்து பார்க்கும்போது அவள் தூநிற வெள்ளையுடையும் பசும் பொன்னிறக் கூந்தலும் எடுப்பாகத் தெரிந்தன. ஒரு கையால் கணவனின் தோளையும், மற்றொரு கையால் மார்னரின் கையையும் பற்றிக் கொண்டு நடந்தாள்.

''என்னை நீங்கள் பிரியப் போவதில்லை. ஆரானை உங்கள் மகனாக வைத்துக் கொள்ளத்தான் போகிறீர்கள்'' என்று கோவிலுக்குப் போகுமுன்பு கூறினாள் எப்பி.



திரும்பி வரும்போது திருமதி வின்த்ரோப் தன் கணவனுக்குப் பின்னால் நடந்து வந்தாள். ஓரிடத்தில் திருமண ஊர்வலம் முடிவுற்றது. வழியில் பல்லோரும்



எப்பியும் ஆரானும் இன்மணம் புரிதல்

திருமணக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர். பிரிசில்லாவும், அவள் தந்தையும் தக்க நேரத்தில் சிவப்பு மாளிகைக்கு வந்து இந்த அழகான காட்சியைப் பார்க்க முடிந்ததே என்று மகிழ்ச்சியடைந்தார்கள். சில முக்கிய காரணங்களுக்காக அன்று காட்பிரே வெளியே போக வேண்டியிருந்ததால் அவர்கள் நான்சியின் வீட்டில் துணையாக இருப்பதற்காக வந்திருந்தனர். 'வானவில்லில்' திருமண விருந்து நடந்தது. பாவம், காட்பிரே அதில் கலந்து கொள்ள முடியவில்லை. திரு. கிராக்கள் தார்ப்பும், திருமதி ஆஸ்குட்டும் அதில் கலந்து கொண்டனர். தன் தம்பியாலேயே மார்னரின் வாழ்வு பாழானதறிந்து அவன் மேல் பரிவு கொண்டிருந்த காட்பிரே திருமண விருந்தில் கலந்து கொள்ளமுடியாது போனது வருந்தத் தக்கதே.

பிரிசில்லாவும் அவள் தந்தையும் வீட்டிற்குத் திரும்புவதற்காக வண்டியில் வந்து உட்கார்ந்தனர். அப்போது பிரிசில்லா, "நான்சிக்கு இது போல ஒரு குழந்தை கிடைத்து அதை வளர்த்திருந்தால் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்" என்று கூறினாள்.

"ஆமாம், கண்ணே, ஆமாம். வயது ஆக ஆக அந்த உணர்ச்சிதான் யாருக்கும் வரும். வயது முதிர்ந்தவர்கள் தங்களைச்சூழ இளைஞர்கள் இருக்க வேண்டும் என்று தான் விரும்புவார்கள்" என்றான்.

இப்போது நான்சிதன் அக்காளையும் அப்பாவையும் வழியனுப்ப வந்திருந்தாள். திருமணத்திற்கு வந்திருந்தவர்களில் பலர் தங்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பிப் போயினர். 'வானவில்'லின் முன்றிலில் விருந்தினர் ஏற்கெனவே ஒன்று கூடிவிட்டனர். விருந்து தொடங்குவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. ஆனால் அவர்கள் விருந்துச் சுவையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். மார்னரின் வியப்பார்ந்த கதையைப் பற்றிப் பேசவும் அவர்களுக்கு நேரமிருந்தது. தாயில்லாத ஒரு தனிமைக் குழந்தைக்கு அப்பாவாக இருக்க முற்பட்டது அவன் வாழ்க்கைக்கே மகிழ்ச்சி மிக்க திருப்பத்தைக் கொடுத்து விட்டது. அவன் அந்த நற்பேற்றுக்குத் தகுதியானவனே. ஊரினரும் அவனுக்கு மகிழ்ச்சி ஏற்படவேண்டுமென்று விரும்பியதும் சரியே.

திருமணக் கூட்டம் அருகே வந்ததும், 'வானவில்'லினுள் இருந்தவர்கள் மகிழ்ச்சி யாரவாரம் செய்தனர். திரு. வின்த்ரோப் அதில் கலந்து கொண்டார். அப்போதுதான் அவர் அவ்விடத்திற்கு வந்திருந்தார்.



எப்பி எதிர்பார்த்ததற்கு மேலாகவே பெரியதொரு தோட்டம் அங்கே இருந்தது. மேலும் அங்கே காட்பிரேயின் செலவில் பல்மாறுதல்களும் ஏற்பட்டிருந்தன. சைலசின் பெரிய குடும்பத்திற்கு ஏற்றதாக அவ்விடம் காட்சியளித்தது. ஏனெனில் வேறெவ்விடத்திற்கும் போவதைவிடக் கற்குழியிலேயே இருந்துவிட விரும்பினர் எப்பியும், மார்னரும். தோட்டம் இருபுறங்களிலும் கற்களால் வேலியிடப்பட்டது. ஆனால் முன்புறத்தில் திறந்த வேலியில் பூத்துக் குலுங்கிய மலர்க் கொத்துக்கள் மகிழ்ச்சியால் நிரம்பிய நால்வருக்கும் நல்வரவு கூறி நின்றன.

"ஓ, அப்பா! எவ்வளவு அழகிய வீடு நம்வீடு! நம்மைக் காட்டிலும் வேறெவரும் மகிழ்ச்சி மிக்கிருக்க முடியாது என்று நான் நினைக்கிறேன்" என்றாள் எப்பி.

110349
O11,3 MEG.S
N62

## பிற தமிழாக்க நூல்கள்

ஆசிரியர் : கு. பரமசிவம், எம். ஏ.

| | | |
|---|---|---|
| ஆலிவர் டுவிஸ்ட் (Oliver Twist) | 3 | 00 |
| ஐவன்கோ (Ivenhoe) | 3 | 00 |
| பவளத்தீவு (Coral Island) | 2 | 50 |
| குவெண்டின் டர்வர்டு (Quentin Durward) | 4 | 50 |
| டேவிட் காப்பர் பீல்ட் (David Copper Field) | 5 | 00 |
| கைமேனரிங் (Guy Mannering) | 3 | 00 |
| கெனில்வொர்த் (Kenilworth) | 4 | 00 |
| இராபின்சன் குருசோ (Robinson Crusoe) (முருகேச முதலியார், துணையாசிரியர்) | 6 | 25 |

ஆசிரியர் : எஸ். தாசு, பி. ஏ., எல். டி.

| | | |
|---|---|---|
| புதுக்காட்டின் பிள்ளைகள் (Children of the new forest) | 2 | 25 |

ஆசிரியர் : மு. சதாசிவம், எம். ஏ.

| | | |
|---|---|---|
| மருத்துவர் மகள் (Surgeon's Daughter) | 5 | 00 |

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6. சென்னை-1.